When a Noun relates to more than one person or thing, that is, to several persons or things of the same kind, it is in the Plural number.

முக்கிய கவனிப்பு:—சிறப்புப் பெயர் (Proper Noun) ஒரே ஒரு மனிதனையோ பொருளையோ சிறப்பாக உணர்த்துவதால் அது எப்போதும் (Singular) ஒருமையாகவே இருக்கும். ஆனால், போதுப்பெயர் (Common Noun) ஒன்

றுக்கு மேலானவர்களையும், அதிகமான பொருள்களையும் உணர்த்துவதால், அது ஒருமையாகவாவது (Singular) பன்மையாகவாவது (Plural) இருக்கும்.

ஒருமையைப் பன்மையாக்கும் வழி

Formation of Plural

தமிழில் ஒருமையைப் பன்மையாக்க ஒருமையுடன் அர், ஆர், கள், மார் என்னும் விகுதிகள் பயன்படுகின்றன. அதுபோலவே, ஆங்கிலத்திலும் பற்பல விதங்கள் உண்டு.

1. அநேகமாக singular உடன் 's' என்னும் எழுத்தைச் சேர்த்துக்கொண்டால் பன்மை யுண்டாகும்.

The Plural number is almost always formed by adding 's' to the Singular.

உதாரணமாக:—(e. g.)

Singular	*Plural*	*Singular*	*Plural*
Girl	Girls	Star	Stars
Pie	Pies	Book	Books
Cow	Cows	Door	Doors
Bird	Birds	Coat	Coats
House	Houses	Apple	Apples

---

s, x, sh, ch என்பவைகளைச் சொல்லுக்குக் கடைசியிலுள்ள பெயர்கள் பன்மை (Plural) யாக மாறும்போது 'es' என்பதைப் பெறும்.

If the Noun ends in 's, x, sh or ch' the Plural is formed by adding 'es' to the Singular.

உதாரணமாக:—

Singular	*Plural*	*Singular*	*Plural*
Class	Classes	Bench	Benches
Brass	Brasses	Bunch	Bunches
Box	Boxes	Couch	Couches
Fox	Foxes	Branch	Branches
Brush	Brushes	Match	Matches
Bush	Bushes	Watch	Watches

(3) ஒரு நௌனின் கடைசியில் 'y' இருந்து, அந்த y-க்கு முன்னே மெய்யெழுத்துகள் - கான்சொனன்ட்ஸ் (Consonants) இருந்தால் அது பன்மை (Plural) ஆக மாறும்போது அந்த 'y' கெட்டு 'ies' என்று மாறும்.

If the noun ends in 'y', and the 'y' has a Consonant going before it, the Plural is formed by changing 'y' into 'ies.'

உதாரணமாக:—

Stngular	*Plural*	*Singular*	*Plural*
Cry	Cries	Fly	Flies
City	Cities	Sky	Skies
Duty	Duties	Baby	Babies
Army	Armies	Navy	Navies

ஆனால், அந்த 'y'க்கு முன்னே உயிரெழுத்து-வவல்- (Vowel) இருக்குமேயானால், பன்மை (Plural)யில் அந்த

'y' மாறுமல் அதற்குப் பக்கத்தில் 's' மட்டுமே சேர்க்கப் பட வேண்டும்.

But if the 'y' has a Vowel going before it, the Plural is formed by simply adding 's' to the Singular.

உதாரணமாக:—

Singular	*Plural*	*Singular*	*Plural*
Day	Days	Monkey	Monkeys
Play	Plays	Ray	Rays
Boy	Boys	Kidney	Kidneys

ஒரு நௌன் (Noun) 'f' 'fe' இவைகளைக் கடைசியில் பெற்றிருந்தால் அது பன்மை (Plural) யாக மாறும்போது அந்த 'f, 'fe' என்பவைகள் கெட்டு 'ves' என்று மாறும்.

If the noun ends in 'f' or 'fe', the Plural is formed by changing 'f' or 'fe' into 'ves'.

உதாரணமாக:—

Singular	*Plural*	*Singular*	*Plural*
Knife	Kni-ves	Thief	Thie-ves
Wife	Wi-ves	Life	Li-ves
Calf	Cal-ves	Loaf	Loa-ves
Shelf	Shel-ves	Leaf	Lea-ves
Wolf	Wol-ves	Half	Hal-ves

மேற் கூறியவைகளை விலகியவைகளும் உண்டு.

(a) 'S, es' என்பவைகள் பன்மை (Plural) யாக மாறும் போது வராத சில பெயர்ச்சொற்களும் உண்டு. ஆனால்,

அவைகளின் மத்தியிலுள்ள உயிரெழுத்து (Vowel) மாறிப் பன்மை (Plural)யாக மாறுகின்றன.

There are a few Nouns which form the Plural not by adding 's' or 'es' to the Singular, but by changing some Vowel in the inside of the word-

உதாரணமாக :—

Singular	*Plural*	*Singular*	*Plural*
Tooth	Teeth	Mouse	Mice
Foot	Feet	Louse	Lice
Man	Men	Oasis	Oases
Woman	Women	Crisis	Crises

(*b*) சில பெயர்கள் பன்மை (Plural) ஆக மாறும்போது 'en' என்பதைச் சேர்க்கவேண்டும். உதாரணமாக:—

Ox, Oxen; Child, Children; Brother, Brethren. Cow என்னும் பதத்திற்கு இரண்டு பன்மைகள் (Plurals) உண்டு. Cow-Cows; Cow-Kine.

(*c*) சில பெயர்கள் ஒருமையிலும் பன்மையிலும் (Singular & Plural) ஒரே மாதிரியாக மாறுபடாமலிருக்கின்றன. அவைகள் கீழ் வருவன :—

Singular	*Plural*	*Singular*	*Plural*
Deer	Deer	Score	Score
Sheep	Sheep	Swine	Swine
Fish	Fish	Dozen	Dozen

தமிழில் ஆறும் வேற்றுமையின் உருபு, 'அது, ஆது, உடைய' என்பவைகள். ஆங்கிலத்தில் 'உடைய' என்பதற்கு

'of' என்று தனியாக இருந்தாலும் சொந்த உரிமையைக் காட்ட 's என்று ஒரு குறிப்பெழுத்து உண்டு, (') இக். குறிக்கு அப்பாஸ்ட்ரபி (Apostrophe) என்று பெயர். இதை போஸெஸிவ் கேஸ் (Possessive Case) என்று சொல்லுகிறார்கள்.

உதாரணமாக :—

A Cow's milk	=	The milk of the cow
Rama's wife	=	The wife of Rama
George's son	=	The son of George
Ass's back	=	The back of the ass
The girl's hair	=	The hair ot the girl

பன்மை (Plural) ப்பெயர்களுக்கும் பொஸெஸிவ் உண்டு. ஆனல், அவைகளுக்கு மற்றொரு 's' சேர்க்கவேண்டியதில்லே என்றும் அபாஸ்டிரபியை 's'க்குப் பின்னல் தலேமீது சேர்க்கவேண்டும்.

Plural Nouns ending in 's' form the Possessive without adding another 's', as Cows', not Cow's but Plurals not ending in 's' form the Possessive in the same way as, in Singular as, Man's-Singular, Men's-Plural.

நௌன் : ஜெண்டர் ; ***Noun*** : ***Gender*** :

பெயர்ச்சொற்கள் : பால் :

தமிழ்ப் பாஷையில் பால் என்பவைகள் ஐந்து விதங்கள் உண்டு. அவை முறையே ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன. ஆனல், ஆங்கில பாஷையிலோ என்றல் நான்கு பால்கள்தான் உண்டு. பால்

என்பதற்கு ஆங்கிலத்தில் ஜெண்டர் (Gender) என்று பெயர். ஜெண்டர் (Gender) நான்கு வகைப்படும். அவை:-

உச்சரிப்பு	ஆங்கிலப்பெயர்	தமிழ்ப்பெயர்
1. மாஸ்குலின் ஜெண்டர்	Masculine Gender	ஆண்பால்
2. (f)பிமினின் ஜெண்டர்	Feminine Gender	பெண்பால்
3. நியூட்டர் ஜெண்டர்	Neuter Gender	ஒன்றன்பால்
4. காமன் ஜெண்டர்	Common Gender	பலவின்பால்

1. மனிதர்களில் ஆண்களுக்கும், உயிருள்ள மிருகங்களில் ஆண்களுக்கும் ஆண்பால் (Masculine Gender) என்று பெயர்.

உதாரணமாக:—***Man***

2. அதைப்போலவே, பெண்களின் பெயர்களெல்லாம் பெண்பால், (f)பிமினின் (Feminine Gender).

உதாரணமாக:—***Woman***.

3. உயிரற்ற பொருள்கள் ஆணாகவும் பெண்ணாகவும் இருக்க முடியாது. ஆகையால், அப்படிப்பட்ட பொருள்களின் பெயரெல்லாம் நியூட்டர் (இதுவுமல்ல அதுவுமல்ல) என்று பொருள்படும்படி Neuter Gender எனப்படும்.

உதாரணமாக:—***Tree***, ***Book***, ***House***, ***Table***

4. Things without life can be neither a Male nor a Female; hence the names of such things are said to be of the Neuter (that is, neither) Gender.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டுக்கும் பொதுவாகக் கொடுக்கக்கூடிய பெயர்களெல்லாம் காமன் ஜெண்டர் (Common Gender) பொதுப்பால் எனப்படும்.

உதாரணம்:—பெற்றோர், பிள்ளை, குதிரை.

A name, which can be given to either a Male or a Female is said to be of the Common Gender, as Parent (father or mother); Child (boy or girl): Horse (stallion or mare.)

மூன்று விதங்களில் Feminine Noun ஐ (பெண்பால் பெயரை) Masculine Noun—லிருந்து (ஆண்பால் பெயரிலிருந்து) வேறுபடுத்தலாம்.

There are three different ways in which a Feminine Noun can be distinguished from a Masculine Noun. They are the following:

(1) கடைசியில் மாறுதல். By a change of ending.
(2) பதமே மாறுதல். By a change of word.
(3) முன்னுவது பின்னுவது ஒரு பதம் வைத்தல். By placing a word before or after.

குறிப்பு:-'***ess***' என்பது பெண்பாலில் அதிகமாய்ச் சேர்க்கப் படுகிறது.

(1) கடைசியில் மாறுதல் (***By a change of ending.***)

Masculine Gender	***Feminine Gender***	***Masculine Gender***	***Feminine Gender***
Actor	Actress	Master	Mistress
Author	Authoress	Murderer	Murderess
Emperor	Empress	Negro	Negress
Duke	Duchess	Patron	Patroness
God	Goddess	Poet	Poetess

Heir	Heiress	Priest	Priestess
Giant	Giantess	Prince	Princess
Hero	Heroine	Prophet	Prophetess
Host	Hostess	Songster	Songstress
Lad	Lass	Shepherd	Shepherdess
Lion	Lioness	Widower	Widow

(2) பதமே மாறுதல் (**By a change of word**)

கீழ்வரும் பெயர்கள் Masculine-இல் ஒரு மாதிரியாகவும், Feminine-இல் ஒரு மாதிரியாகவும் பதமே வித்தியாசமாக இருக்கின்றன.

Masculine	***Feminine***	***Masculine***	***Feminine***
Bachelor	Maid	Gander	Goose
Boar	Sow	Hart	Roe
Boy	Girl	Stallion	Mare
Brother	Sister	Husband	Wife
Bull	Cow	King	Queen
Cock	Hen	Lord	Lady
Buck	Doe	Man	Woman
Dog	Bitch	Nephew	Neice

Masculine	***Feminine***	***Masculine***	***Feminine***
Drake	Duck	Ram	Ewe
Earl	Countess	Sir	Madam
Father	Mother	Son	Daughter
Friar	Nun	Stag	Hind
Gentleman	Lady	Uncle	Aunt
Pappa	Mamma	Wizard	Witch

(3) முன்னலாவது பின்னலாவது ஒரு பதம் அமைத்தல்.

(By placing a word before or after.)

குறிப்பு—ஆண்பாலின் முன்னேயாவது பின்னேயாவது, அல்லது பெண்பாலின் முன்னேயாவது பின்னேயாவது ஒரு பதத்தை அமைக்கவேண்டும்.

கீழ்வரும் உதாரணங்களால் நன்றாக விளங்கும்.

Masculine	***Feminine***	***Masculine***	***Feminine***
He-goat	She-goat	Man-servant	Maid-servant
Land-lord	Land-lady	Bride-groom	Bride
Grand-father	Grand-mother	Cock-sparrow	Hen-sparrow
Peacock	Pea-hen	Great-uncle	Great-aunt

பொதுப்பாலிலுள்ள சில ***Nouns***-களின் உதாரணங்கள்

(Examples of Nouns in the Common Gender.)

ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவான பெயர்கள் கீழே வரையப்பட்டிருக்கின்றன. அவைகளை மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

Baby—Male or female
Fowl—Cock or hen
Calf—Male or female
Camel ,, ,, ,,
Cat ,, ,, ,,
Cousin ,, ,, ,,
Cub ,, ,, ,,
Child ,, ,, ,,
Foal—Colt or filly
Goat—He-goat or she-goat
Lamb—Male or female
Parent—Father or mother
Person—Man or woman
Pig—Boar or sow
Pupil—Male or female
Relation ,, ,, ,,

Deer—Stag or hind	Orphan—Boy or girl
Elephant-Male or female	Monarch—King or queen
Friend ,, ,, ,,	Sovereign ,, ,, ,,
Foe ,, ,, ,,	Sheep—Ram or ewe
Enemy ,, ,, ,,	Student—Male or female
Fish—Miller or spawner	Teacher-Master or mistress

கேஸ் (CASE)—வேற்றுமை

தமிழ்ப் பாஷையில் வேற்றுமைகள் எட்டு விதங்கள். ஆனல், இங்கிலீஷ் பாஷையில் நான்கு வேற்றுமைகள்தான் உண்டு. வேற்றுமை என்பதற்கு ஆங்கிலத்தில் கேஸ் (Case) என்று அர்த்தம். இந்தக் கேஸ் என்பது பெயர்ச்சொற் களுக்குத்தான் உண்டு. பெயர்ச்சொல்லானது மற்ற சொற்களே ஏற்றுக்கொள்ளுவதற்காக அடையும் விவகா ரமே வேற்றுமை (Case) எனப்படும். அவை நான்கு:

(1) நாமினேடிவ் கேஸ் (Nominative Case) எழுவாய் வேற்றுமை.

(2) அப்ஜெக்டிவ் கேஸ் (Objective Case) இரண் டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள்.

(3) பொஸெஸிவ் கேஸ் (Possessive Case) ஆறும் வேற்றுமை.

(4) வாக்கடிவ் கேஸ் (Vocative Case) எட்டாம் வேற்றுமை, அல்லது விளிவேற்றுமை.

(1) எழுவாய் வேற்றுமை (Nominative Case)

நாமினேடிவ் கேஸ்:—வினைச்சொல்லுக்கு முன் வந்து ஏதாவதொன்று செய்பவனைக் காட்டும் பெயர்ச்சொல்

(Nominative) எழுவாய் எனப்படும். இங்கிலீஷில் எழுவாய்க்கு (ஸப்ஜெக்ட்) Subject என்று அர்த்தம்.

உதாரணமாக: "*Rama came.*" "இராமன் வந்தான்." இதில் 'இராமன்' என்கிற பெயர்ப்பொருளாகிய ஒருவன் தன் வருகையாகிற தொழிலைச் செய்தான் என்று காட்டுகிறது.

(2) அப்ஜெக்டிவ் கேஸ் **(Objective Case)**

இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள்

ஒரு வினையின் தொழிலை ஏற்றுக்கொள்ளும் பெயர் செயப்படுபொருள் (Object) என்று பெயர்.

உதாரணமாக: "*Rama killed Ravana*".—"இராமன் இராவணனைக் கொன்றான்." இதில் 'இராவணனை (Ravana)' என்பது செயப்படுபொருள் (Objective).

குறிப்பு:—தமிழில் எழுவாயோடு 'ஐ' என்ற உருபு சேர்ந்தால் செயப்படு பொருளாகும். உதாரணமாக: "இராமன், இராமனை," "ராவணன், ராவணனை." ஆனால், இங்கிலீஷில் எழுவாயும்-செயப்படுபொருளும் (Nominative-Objective) இவைகள் ஒரேமாதிரியாக விருக்கும். மேற்குறித்த உதாரணத்தில், 'Rama' என்பதற்கும் 'Ravana' என்பதற்கும் யாதொரு பேதமு மில்லை. எழுவாய் (Nominative): வினைச்சால்லுக்கு முன்னும், செயப்படுபொருள் (Objective வினைச்சொல்லுக்குப்பின்னும் வரும். இந்த இடபேதமே தவிர உருவத்தில் ஒரு பேதமும் கிடையாது.

(3) பொஸெஸிவ்கேஸ் (**Possessive Case**) ஆறும் வேற்றுமை

Possessive Case சொந்த உரிமையைக் காட்டுகிறது என்று முன்னேயே விவரித்திருக்கின்றோம்.

உயிரில்லாத பொருள்களைக் காட்டும் பெயர்ச்சொல் லோடு 'of' என்ற சொல்லை உபயோகித்தல் நலம்.

உதாரணமாக:—"The house's roof" என்பதற்குப் பதிலாக "The roof *of* the house" என்பதுதான் பொருத்தமானது.

ஆனல், காலம்-இடம்-பாரம் முதலியவற்றையும், உயர் பொருள்களையும் காண்பிக்க வரும் பெயர்ச்சொற்களோடு 's சேர்ந்து வரும். அவைகளுக்கு *'of'* என்ற பதம் சேர்க்கப்படாது.

உதாரணமாக:—

காலம் Time	A day's journey = ஒருநாள் பிரயாணம் Two weeks' leave = இரண்டுவாரம் ரஜா
இடம் Place	A stone's throw = கல்லெறி தூரம் A bird's view = பட்சிப் பார்வை
பாரம் Weight	A ton's weight = ஒரு டன் பாரம் A candy's weight = ஒரு பார எடை
உயர்பொருள் Objects	The sun's ray = சூரிய கிரணம் The ocean's roar = சமுத்திர இரைச்சல்

(4) தமிழில் எட்டாம் வேற்றுமை என்ற விளிவேற்றுமை இருப்பதைப் போலவே ஆங்கிலத்திலும் Vocative Case அல்லது Nominative Case of Address என்ற விளிவேற்றுமை இருக்கிறது.

உதாரணமாக:—

"Rama! come here"-"இராமா! இங்கே வா!" இதில் 'Rama' என்பது Nominative Case of Address.

ப்ரோநௌளன்ஸ் (**Pronouns**) = பிரதிப் பெயர்கள்

Pronoun என்பது ஒரு Noun-க்குப் பதிலாக உபயோகப்படும் சொல்லாம். அது ஐந்து விதங்களாக இருக்கின்றன. அவை வருமாறு :—

1. பெர்ஸனல் ப்ரோநௌளன்ஸ் (Personal Pronouns)—இடப் பிரதிப்பெயர்கள்
2. டிமான்ஸ்டிரேடிவ் ப்ரோநௌளன்ஸ் (Demonstrative Pronouns)—சுட்டுப் பிரதிப் பெயர்கள்
3. இன்ட்டாகேடிவ் ப்ரோநௌளன்ஸ் (Interrogative Pronouns)—கேள்விப் பிரதிப் பெயர்கள்
4. ரிலேடிவ் ப்ரோநௌளன்ஸ் (Relative Pronouns)—இனப் பிரதிப் பெயர்கள்
5. ரிப்(f)லெக்ஸிவ் ப்ரோநௌளன்ஸ் (Reflexive Pronouns)—அழுத்தப் பிரதிப்பெயர்கள்.

ஆக ஐந்து விதங்களான (Pronouns) பிரதிப்பெயர்கள் இருக்கின்றன.

(1) பெர்ஸனல் ப்ரோநௌளன்ஸ் (**Personal Pronouns**)—இடப் பிரதிப்பெயர்கள்

தமிழில் தன்மையிடம்—(பேசுவோன்), முன்னிலை-(எதிரில் நிற்கும் பேசப்படுவோன்); படர்க்கை-(குறித்துப் பேசும் மூன்றும் மனிதன்) என்றிருப்பதற்குச் சரியாக ஆங்கிலத்திலேயும் மூன்று இடப் பிரதிப்பெயர்கள் உண்டு; அவை முறையே ;—

1. (f)பஸ்ட் பெர்ஸனல் ப்ரோநௌளன் First Personal Pronoun)

2. செகண்ட் பெர்ஸனல் ப்ரோநௌன் (Second Personal Pronoun)

3. தர்ட்(d) பெர்ஸனல் ப்ரோநௌன் (Third Personal Pronoun)

இதில் (Personal Pronoun-களில்) (First Personal Pronoun என்பது பேசுகிறவனைக் குறிக்கும்; அதாவது, I, We என்பனவாம்.

Second Personal Pronoun என்பது எதிரில் நின்று கேட்கிறவனைக் குறிப்பது; அதாவது, Thou, You என்பனவாம்.

Third Personal Pronoun என்பது பேசப்படும் மூன்றும் மனிதனையாவது விஷயத்தையாவது குறிப்பது; அதாவது: He, She, It, They என்பனவாம். சாதாரணமாகப் பெயர்ச்சொற்களுக்கு எண்கள் (அதாவது ஒருமை, பன்மை) இருப்பதைப்போல் இடப்பிரதிப் பெயர்களுக்கும் ஒருமை பன்மைகள் உண்டு,

Nominative (எழுவாய்)

	Singular ஒருமை	Plural பன்மை
First Person Nominative தன்மை	I	We
Second Person Nominative முன்னிலை	Thou	You
Third Person Nominative படர்க்கை	He, She, It	They

Objective Case (செயப்படுபொருள்)

	Singular ஒருமை	Plural பன்மை
First Person Objective தன்மை	Me	Us
Second Person ,, முன்னிலை	Thou	You
Third Person ,, படர்க்கை	Him, Her, It	Them

Possessive Case (ஆறும் வேற்றுமை)

	Singular ஒருமை	Plural பன்மை
First Person Possessive தன்மை	My, mine my own	our, ours our own
Second Person ,, முன்னிலை	Thy, thine thy own	Your, yours your own
Third Person ,, படர்க்கை	His, his own Her, her own Its, its own	Their Theirs Their own

(2) டிமான்ஸ்ட்ரேடிவ் ப்ரோநௌன்ஸ்

(Demonstrative Pronouns)—சுட்டுப் பிரதிப் பெயர்கள் கீழ்க்காணும் பதங்களெல்லாம் சுட்டுப் பிரதிப் பெயர்கள்.

Demonstrative Pronouns :

This, These, That, Those, One, Such முதலிய வைகள் Demonstrative Pronouns எனப்படும். இவை முன்வரும் பெயர்ச்சொற்களுக்குப் பதிலாக வரும்.

உதாரணமாக :—

This is your book: *That* is mine
These are your books : *Those* are mine.
I have no pen, give me *one*.
I saw a saw *such* a saw I never saw.

---

(3) இன்ட்டராகேடிவ் ப்ரோநௌன்ஸ்

(Interrogative Pronouns)-கேள்விப் பிரதிப் பெயர்கள்.

An Interrogative Pronoun is one which asks question.

வினுப் பிரதிப் பெயர்கள் கேள்வி கேட்பதற்குப் பிரயோஜனப் படுகின்றன. அவைகள் கீழ் வருமாறு :—

Who, which, Whose. Whom, What.

உதாரணமாக:

Who spoke ? = யார் பேசினது ? [கிறுய்?
Which do you like best ? = எதை நீ அதிகமாக விரும்பு

Whose book is this? = இந்தப் புத்தகம் யாருடையது?
Whom do you want? = உனக்கு யார் வேண்டும்?
What do you say? = நீ என்ன சொல்லுகிறாய்?
? இந்தக் குறி வினாவைக் குறிக்கும்.

---

(4) ரிலேடிவ்ப்ரோநௌன்ஸ் (**Relative Pronouns**) இனப் பிரதிப் பெயர்கள்.

Noun, Pronoun என்ற சொற்களுக்குப் பின் வந்து அவற்றால் குறிக்கப்பட்ட ஆளையாவது, பொருளையாவது காண்பிக்க வரும் சொற்கள் ரிலேடிவ் ப்ரோநௌன்ஸ் (Relative Pronouns) எனப்படும்.

உதாரணமாக :—

The man *who* came = வந்த மனிதன்.
The dog *which* barks = குலைக்கிற நாய்.
The man *that* we met = நாம் பார்த்த மனிதன்.

இவ்வாக்கியங்களில் Who, Which, That என்ற சொற்கள் மனிதனையும், நாயையும் காண்பிக்கின்றன. ஆகையால் இவை Relative Pronouns (இனப் பிரதிப்பெயர்கள்) எனப்படும். மேற்கண்ட உதாரணங்களில் 'Man', 'Dog' என்ற சொற்கள் ஆண்டிஸீடென்ட்ஸ் (Antecedents) எனப்படும்.

The Relative Pronouns are so called because they relate to some Noun or other Pronoun going before. They join two clauses but ordinary Pronouns do not do so.

Relative Pronouns என்பவை ஒரு வாக்கியத்தில் முன்னேயுள்ள Pronoun உடனுவது, Nouns உடனுவது

சம்பந்தப்பட்டிருப்பதால் இப்பெயர் பெற்றன. அவை ஒரு வாக்கியத்தின் பாகங்களான இரண்டு வாக்கியங்களைச் சேர்க்கும். சாதாரண Pronoun அப்படிச் சேர்க்கிறதில்லை.

The Noun or Pronoun going before is called the *Anticedent*. முன்னேயுள்ள Noun அல்லது Pronoun-க்கு ஆன்டிஸீடென்ட் *Anticedent* முன்மொழி என்று பெயர்.

(5) ரி(f)ப்ளெக்ஸிவ் ப்ரோநௌன்ஸ் (**Reflexive Pronouns**)-அழுத்தப் பிரதிப்பெயர்கள்

ஒன்றை ஊன்றிச் சொல்வதற்காக எழுவாயோடு Reflexive Pronouns சேர்ந்துவரும். அவைகள் கீழ் வருவன: My, Thy, Him, Her, It, You, Our, Their முதலிய சொற்களோடு ஒருமையில் 'self' என்ற பதம் சேர்க்கப்படும், அச்சொற்களுடன் பன்மையில் 'selves' என்ற பதமும் சேர்க்கப்படும். இவைகள் வினைச்சொற்களுக்குப் பின் வந்து எழுவாயைக் காண்பிக்கும்.

உதாரணமாக:—

I saw *myself* = நான் தான் பார்த்தேன்.
You said *yourself* = நீ தான் சொன்னாய்.
He laughs *himself* = அவன் தான் சிரிக்கிறான்.
I *myself* did it = நானே அதைச் செய்தேன்.
She *herself* saw it = அவளே அதைப் பார்த்தாள்.
We *ourselves* saw you = நாங்களே உன்னைப் பார்த்தோம்.
They *themselves* said so = அவர்களே அப்படிச் சொன்னார்கள்.

அட்ஜெக்டிவ் (Adjective)—உரிச்சொல்
(பெயரைக் கொண்டு முடியும் சொல்)

அட்ஜெக்டிவ் (Adjective) உரிச்சொல் என்பது ஒரு நௌனைத் (Noun) தழுவி நிற்கும்; அதாவது, பெயர்ச் சொல்லின் பொருளுக்கு ஒரு விசேஷத்தைக் கூட்டிச் சொல்லும்.

அட்ஜெக்டிவ் (Adjective) ஐந்து விதங்கள்:—

1. ஒரு மனிதனுடைய குணத்தையாவது (quality), அல்லது ஒரு பொருளினுடைய குணத்தையாவது காட்டுவது அட்ஜெக்டிவ் ஆப் க்வாலிட்டி (Adjective of Quality) என்பது ஒருவிதம்.

2. ஒரு வஸ்துவின் அளவைத் தெரிவிப்பது அட்ஜெக்டிவ் ஆப் க்வான்ட்டிட்டி (Adjective of Quantity) என்பது மற்றொரு விதம்.

3. மனிதர்களின் தொகையையாவது, அல்லது பொருள்களின் தொகையையாவது, குறிப்பிடுவது அட்ஜெக்டிவ் ஆப் நம்பர் (Adjective of Number) என்பது மூன்றாவது விதம்.

4. இன்ன மனிதன் அல்லது இன்ன வஸ்து என்று குறிப்பிடுவது டிமான்ஸ்டிரேடிவ் அட்ஜெக்டிவ் (Demonstrative Adjective) என்பது நான்காம் வகை.

5. ஒரே காலத்தில் ஒரே மனிதனை அல்லது ஒரே வஸ்துவைக் குறிப்பிடுவது டிஸ்டிரிப்யூடிவ் அட்ஜெக்டிவ் (Distributive Adjective) என்பது ஐந்தாம் வகை.

1. Adjectives of Quality

பண்புப்பொருளில் வரும் உரிச்சொற்கள்

தமிழில் குணத்தைக் காட்டும் சொற்களுக்குப் பண்புச் சொற்கள் என்று பெயர். இவ்வகையான அட்ஜெக்டிவ் (Adjective) ஆனது ஒரு மனிதனின் அல்லது ஒரு பொருளி னுடைய குணத்தையாவது அல்லது நிலைமையையாவது தெரிவிக்கும்.

This kind of Adjective shows the *Quality* or *State* of a person or thing.

உதாரணமாக:—

A *brave* dog = ஒரு தைரியமுள்ள நாய்
A *sick* boy = ஒரு நோயாளியான பையன்
A *small* mouse = ஒரு சிறிய சுண்டெலி

இவைகளில் '(*brave*) தைரியமுள்ள' என்பது நாயின் குணத்தையும் (Quality), '(*sick*) நோயாளியான' என்பது பையன் நிலைமையையும், '(little) சிறிய' என்பது சுண்டெலி யின் தேக நிலைமையையும் காட்டுகிறது. எனவே, 'brave; sick, little' என்பவைகள் எல்லாம் நௌனேயே போய்ச் சேர்கின்றதல்லாமல் அந்த நௌனக்களின் பொருளுக்கு விசேஷத்தைக் கூட்டிச் சொல்கின்றன.

2. Adjectives of Quantity

பரிமாணப் பொருளில் வரும் உரிச்சொற்கள்

இவ்வகையான அட்ஜெக்டிவ்ஸ் (Adjectives) பரி மாணத்தை, அதாவது ஒரு வஸ்துவில் உத்தேசிக்கப்பட்ட அளவைக் குறிக்கும்.

This kind of Adjectives shows the *Quantity*, that is, *how muck* of a thing is intended.

சாதாரணமாக வழங்கப்படுவது பின் வருவன:

உதாரணமாக:—

Much = அதிகமான. More = மிக அதிகமான. Most = மகா அதிகமான.

Little = சிறிய. Less = குறைந்த. Least = மிகவும் குறைந்த.

No = ஒருவருமில்லாத. None = ஒன்று மில்லாத.
Some = சில. Enough = போதுமான.
Sufficient = போதுமான. All = எல்லாம்.
Whole = முழுமையான

இவைகள் எல்லாம் Adjectives of Quantity யின் உதாரணங்கள்.

---

3. Adjecttves of Number

எண்ணைக் குறிக்கும் உரிச்சொற்கள்

இத்தனைப் பேர்க ளிருக்கிறார்கள், அல்லது இத்தனைப் பொருள்கள் இருக்கின்றன என்று திட்டமாக எடுத்துக் காட்டும் உரிச்சொற்களுக்கும், அந்த மனிதர்கள் இன்ன வரிசையில் இருக்கிறார்கள், அல்லது அந்த வஸ்துக்கள் இன்ன வரிசையில் இருக்கின்றன என்று காட்டும் அட்ஜெக்டிவ்களுக்கு (d)டெபி(f)நிட் நியூமெரல் அட்ஜெக்டிவ்ஸ் (Definite Numeral Adjectives) என்று பெயர்.

Adjectives, which show precisely *how many* persons or things there are, *in what order* they stand are called *Definite Numerals*.

இத்தனை என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றவைகளுக்கு கார்டினல்ஸ் (Cardinals) என்றும், இன்ன வரிசை என்று குறிப்பிடுவதற்கு ஆர்டினல்ஸ் (Ordinals) என்றும் பெயர்.

Those which show *how many* are called *Cardinals;* those which show *in what order* are called *Ordinals*.

உதாரணமாக :—

Cardinals எண் குறிக்கும்.		Ordinals வரிசை குறிக்கும்.	
கார்டினல்ஸ் அட்ஜெக்டிவ்ஸ்.		ஆர்டினல்ஸ் அட்ஜெக்டிவ்ஸ்.	
One	ஒன்று	First	முதலாவது
Two	இரண்டு	Second	இரண்டாவது
Three	மூன்று	Third	மூன்றுவது
Four	நான்கு	Fourth	நான்காவது
Five	ஐந்து	Fifth	ஐந்தாவது
Six	ஆறு	Sixth	ஆறுவது
Seven	ஏழு	Seventh	ஏழாவது
Eight	எட்டு	Eighth	எட்டாவது
Nine	ஒன்பது	Ninth	ஒன்பதாவது
Ten	பத்து	Tenth	பத்தாவது [து
Twelve	பன்னிரண்டு	Twelfth	பன்னிரண்டாவ
Fifteen	பதினைந்து	Fifteenth	பதினைந்தாவது
Twenty	இருபது	Twentieth	இருபதாவது

ஏதாவது ஒரு தொகையை மாத்திரம் சொல்லி இத் தனை என்று குறிப்பிட்டுக் காட்டாத Adjectives-களுக்கு இன்(d)டெ(f)பிநிட் நியூமெரேல்ஸ் (Indefinite Numerals) என்று பெயர்.

Adjectives which show number of some kind, without showing precisely what the number is, are *Indefinite Numerals*.

உதாரணமாக :—

All—எல்லாம் Many—அநேகம். Few—மிகச் சில.

More-அதிகமான. Several-பல. Sundry-சில்லரையான.

அவற்றை வாக்கியங்களில் அமைக்கப் பின்வரும் விதம்.

"All men are mortal."—"எல்லா மனிதர்களும் இறப்பவர்களே."

"*Some* men are rich"—"சில மனிதர்கள் பணக்காரர்களாக இருக்கிறார்கள்."

"*Many* men are poor."—"அநேக மனிதர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள்."

"*Few* men came."—"மிகச் சில ஜனங்கள் வந்தார்கள்."

"More men came to-day than yesterday."—"நேற்று வந்தவர்களைவிட இன்றைக்கு அதிகமான பேர்கள் வந்தார்கள்."

"Several men came to see me."—"பல மனிதர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள்."

"He sells *sundry* goods."—"அவன் சில்லரைச் சாமான்களை விற்கிறான்.

4. Demonstrative Adjectives

சுட்டுப்பொருளில் வரும் உரிச் சொற்கள்

டிமான்ஸ்ட்டிரேட்டிவ் அட்ஜெக்டிவ் என்பது இன்ன மனிதன் சொல்லப்படுகிறான், அல்லது இன்ன பொருள் சொல்லப்படுகிறது என்று சுட்டிக்காட்டப் பயன்படும்.

Demonstrative Adjective points out *which* person or thing is meant.

உதாரணமாக:—

"*This* book."-"இந்தப்புத்தகம்." "*These* books."-"இப்புத்தகங்கள்"". "*That* boy."—"அந்தப் பையன்." "*Those* boys."—"அந்தப் பையன்கள்." இதில் '(This) இந்த' என்னும் சொல், அருகிலுள்ள புத்தகத்தைச் சுட்டிக் காட்டுகிறது. 'That, Those (அந்த)' என்னும் சொற்கள் அவ்வளவு சமீபத்திலிராமல் தூரத்திலிருக்கிற பிள்ளைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. 'This, That' என்பவை (Singular); ஒருமையிலும் 'These, Those' என்பவை (Plural) பன்மையிலும் வரும்.

அந்த அட்ஜெக்டிவ் ஒரு மனிதனையாவது அல்லது வஸ்துவையாவது விளக்கமாகச் சுட்டிக்காட்டினால் அதற்கு டெபி(f)னிட்டிமான்ஸ்ட்ரேடிவ் (Definite Demonstrative) என்று பெயர்.

When the Adjective points out to some particular person or thing it is called a Definite Demonstrative.

உதாரணமாக:—

The—அந்த. This—இந்த. That—அந்த.
These—இந்த. Those—அந்த. Such—அப்படிப்பட்ட
The same—அதே. The other—மற்ற.

அந்த அட்ஜெக்டிவ் ஒரு மனிதனையாவது அல்லது பொருளையாவது சுட்டிக் காட்டாவிட்டால் அது இன்டெபிநிட் டிமான்ஸ்டிரேடிவ் (Indefinite Demonstrative) எனப்படும்.

When it does not point to any particular person or thing, it is called an *(Indefinite Demonstrative)*

உதாரணமாக:—

A, An=ஒரு, ஓர். Any=யாரேனுமொரு,
One=ஒரு. [ஏதேனுமொரு
Certain=ஓசை, ஒரு. Some=சில, யாரோ ஒரு,
Other=மற்ற [ஏதோ சில
Another=வேறொரு. Any other=வேறேதேனுமொரு.

சில சமயங்களில் 'The' என்னும் சொல் டெபி(f)நிட் ஆர்டிகல் (Definite Article) எனப்படும்; 'a' அல்லது 'an' என்னும் சொல்லுக்கு இன்டெபி(f)நிட் ஆர்ட்டிகல் (Indefinite Article) என்று பெயர். ஆனால், 'the' என்பது 'this' 'that' 'these' 'those' இவைகளின் குறுகிய வடிவமேயாகும். அப்படியே 'a; 'an' இவைகளும் 'one' என்னும் சொல்லின் சுருக்கமே. ஆகையால், ஆர்டிகல் (Article) என்பது வேறு ஒரு தனிச்சொல் அன்று. ஆனால், உரிச் சொல்லில் (Adjective) ஒருவிதம்.

---

5. Distributive Adjective—பிரிவு பெயரேச்சம்.

மனிதர்களோ அல்லது வஸ்துக்களோ தனித்தனியாக (அதாவது ஒரு காலத்தில் ஒருவரே அல்லது ஒன்றே) குறிக்கப்படுகிறார்கள் அல்லது குறிக்கப்படுகின்றன என் பதை டிஸ்ட்ரிப்யூடிவ் அட்ஜெக்டிவ் உணர்த்தும்.

Distributive Adjective shows that the persons or things are taken *separately*, either one at a time or *several at a time in separate lots.*

அவைகள் பின் வருவன :—

Each = அந்தந்த. Etiher = இரண்டிலொரு.
Every = ஒவ்வொரு. Neither = இரண்டு மல்லாத.

வேர்ப், (VERB)—வினைச்சொல்

ஒரு மனிதனைப்பற்றியாவது, பொருளைப்பற்றியாவது ஒரு விஷயத்தைச் சொல்வதற்குச் சாதகமாக இருக்கும் சொல்லே வினைச்சொல்லாம் Verb).

A *Verb* is a word used for *saying* something about a person or thing.

உதாரணமாக:—"மரம் வளர்கிறது."—**The tree grows.**" இதில் '(grows) வளர்கிறது' என்ற பதம் மரத் தின் தொழிலைக் காட்டுகிறது. ஆகையால் 'grows' என் பது வினைச்சொல் (Verb). இன்னும் Verb ஆனது ஒரு வஸ்துவின் விஷயத்தைச் சொல்வதற்குச் சாதனம் என்று மேலே குறிக்கப்பட்டுள்ளது; அந்த வஸ்து இங்கே 'மரம்'. ஆகவே, இவ்வாக்கியத்தில் வினைச்சொல் 'grows' என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. 'வளர்கிறது' என்ற அந்த

வினைச்சொல்லுக்கு எது எழுவாய் என்று தெரிந்துகொள்வ தற்கு "எது" என்ற கேள்வியைக் கேட்டால் 'மரம்' என்ற விடை வருகின்றது. அந்த 'மரம்' என்பதே எழுவாய் (Subject.)

உதாரணமாக :—

"Gopal killed a snake in the garden."—"கோபா லன் தோட்டத்தில் ஒரு பாம்பைக் கொன்றான். இந்த வாக்கியத்தில் "யார்தோட்டத்தில் பாம்பைக் கொன்றவன்?" என்ற கேள்வி போடும் பட்சத்தில் விடை 'கோபாலன்' என்று வருகிறது. ஆகவே, 'கோபாலன் (Gopal)' என்பது எழுவாய் (Subject). இவ்வாக்கியத்தில் வினைச்சொல், எழு வாயான 'Gopal' உடன் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. 'Killed' என்ற பதம், அது இவ்வாக்கியத்தின் ப்ரிடிகேட் Predicate (வினைமுற்று) எனப்படும். ஒரு வாக்கியத்திற்கு எழுவாயும் பயனிலையும் (Subject and Predicate) மிகவும் பிரதானம். ஆயினும், செயப்படுபொருளும் (Object) இருக்கவேண்டும். அந்த செயப்படுபொருளைக் கண்டு பிடிக்க வினைமுற்று (Predicate) முன் "யாரை?" அல்லது "எதை?" என்று கேட்டு வரும் விடையே செயப் படுபொருளாம் (Object).

மேற்கூறிய 'Gopal killed a snake in the garden' என்னும் (Sentence) வாக்கியத்தில் செயப்படுபொருள் (Object) எது என்றால், "கோபாலன் எதைக் கொன்றான்?" என்று கேள்வி கேட்கவேண்டும். அதற்கு விடை 'கோபா லன் பாம்பைக் கொன்றான்',—'Gopal killed a *snake*' என்று வருகிறது. 'பாம்பை (snake)' என்பதுதான் செயப் படுபொருள் (Object).

வெர்ப்(**Verb**)—வினைச்சொல்லின் பிரிவுகளாவன:—

(Verb) வினைச்சொல்லில் இரண்டு வகைகள் உண்டு. அவை: ட்ரான்சிடிவ் வெர்ப் (Transitive Verb) செயப்படு பொருள் குன்றுவினை என்றும், இன்ட்ரான்சிடிவ் வெர்ப் (Intransitive Verb) செயப்படுபொருள் குன்றியவினை என்றும் இரண்டு விதம்.

There are two kinds of Verbs. Verbs which have an Object are called *Trausitive*. Verbs which have no Object are called *Intransitive*.

"The sun shines."—"சூரியன் பிரகாசிக்கிறது" என்ற இந்த வாக்கியத்தில் Object கண்டுபிடிக்க, "எதைப் பிரகாசிக்கிறது?" என்ற கேள்வி போட விடை கிடையாது. ஆகவே, இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் (Object) இல்லை. ஆகவே, இவ்வாக்கியத்தில் *'Shines'* இன்டிரான்சிடிவ் வெர்ப் (Intransitive Verb).

வினைச்சொற்(Verb)களில் மூன்றுகாலங்கள்(Tense)உண்டு.

(p)பாஸ்ட் (t)டென்ஸ் (Past Tense)—இறந்த காலம்.

(p)ப்ரசென்ட் டென்ஸ் (Present Tense)—நிகழ்காலம்.

(f)ப்யூச்சர் டென்ஸ் (Future Tense)—எதிர்காலம்.

இம்மூன்று காலங்களையும் கீழ்வரும் வினைச்சொற்களைக் கொண்டு தெளிவாக்கியுள்ளோம். கீழ்வரும் வினைச்சொற்கள் ஆங்கிலத்தில் பெரும்பாலும் அடிக்கடி உபயோகப்படுவதால் அவைகளையே உதாரணமாகக் காட்டியுள்ளோம்.

பீ (*Be*) = இரு

Present Tense (நிகழ்காலம்)

	Singular (ஒருமை)	Plural (பன்மை)
1st Person (தன்மை)	I am	We are
2nd Person (முன்னிலை)	Thou art	You are
3rd Person (படர்க்கை)	He, She, it is	They are

Past Tense (இறந்த காலம்)

1st Person (தன்மை)	I was	We were
2 nd Person (முன்னிலை)	Thou wast	Yon were
3rd Person (படர்க்கை)	He, she, it was	They were

Future Tense (எதிர் காலம்)

1st Person (தன்மை)	I shall be	We shall be
2nd Person (முன்னிலை)	Thou wilt be	You will be
3rd Person (படர்க்கை)	He, she, it will be	They will be

ஹாவ் (***Have***) = உடைத்தா யிரு

Present Tense (நிகழ்காலம்)

	Singular (ஒருமை)	Plural (பன்மை)
1st Person (தன்மை)	I have	We have
2nd Person (முன்னிலை)	Thou hast	You have
3rd Person (படர்க்கை)	He, she, it has	They have

Past Sense (இறந்தகாலம்)

1st Person (தன்மை)	I had	We had
2nd Person (முன்னிலை)	Thou hadst	You had
3rd Person (படர்க்கை)	He, she, it had	They had

Future Tense (எதிர்காலம்)

1st Person (தன்மை	I shall have	We shall have
2nd Person (முன்னிலை)	Thou wilt have	You will have
3rd Person (படர்க்கை)	He, she, it will have	They will have

டு (Do) = செய்

Present Tense (நிகழ்காலம்)

	Singular (ஒருமை)	Plural (பன்மை)
1st Person (தன்மை)	I do	We do
2nd Person (முன்னிலை)	Thou dost	You do
3rd Person (படர்க்கை)	He, she, it does	They do

Past Tense (இறந்த காலம்)

1st Person (தன்மை)	I did	We did
2nd Person (முன்னிலை)	Thou didst	You did
3rd Person (படர்க்கை)	He, she, it did	They did

Future Tense (எதிர்காலம்)

1st Person (தன்மை)	I shall do	We shall do
2nd Person (முன்னிலை)	Thou wilt do	You will do
3rd Person (படர்க்கை)	He, she, it will do	They will do

முக்கிய கவனிப்பு:—எதிர்காலத்தில் (Future Tense) தன்மை நான் அல்லது நாம் (First Person 'I' or 'We')

என்பவை "shall" என்பதையே பெறும். முன்னிலையிலும் படர்க்கையிலும் நீ, நீர், நீங்கள், அவன், அது, அவைகள், அவர்கள். (2nd & 3rd Persons: you, he, she, it, they) இவைகள் "will" என்பதைப் பெறும். இந்த விதி ஆங்கிலேய இலக்கணத்திற்கு நிரந்தரமான விதி. இதை ஒருவரும் மறக்கக் கூடாது.

வாய்ஸ் (VOICE)

தமிழ் இலக்கணத்தில் வினைச்சொல்லில் இரண்டு வகை உண்டு. அவை செய்வினை, செயப்பாட்டு வினை எனப்படும். அவைகளில் செய்வினையை ஆங்கிலத்தில் ஆக்டிவ் வாய்ஸ் (Active Voice) எனவும், செயப்பாட்டு வினையை பாஸ்ஸிவ் வாய்ஸ் (Passive Voice) எனவும் சொல்லப்படுகிறது.

எழுவாய் ஒன்றைச் செய்கிறதாகவும் அல்லது அதற்கு ஒன்று நேரிட்டதாகவும் காண்பிக்க வினைச்சொல் அடையும் மாறுதலுக்கு இங்கிலீஷ் இலக்கணத்தில் வாய்ஸ் (Voice) எனப்படும்.

ஆக்டிவ் வாய்ஸ் (Active Voice)—செய்வினை

வெர்பானது (Verb) ஒருவன் செய்கிறதைப்பற்றியாவது, அல்லது ஒரு பொருள் செய்கிறதைப்பற்றியாவது சொல்லுமானால் அதுசெய்வினை(Active Verb) எனப்படும்.

The Verb is said to be *Active* when it speaks of what a person or thing *does*.

உதாரணம்:—

"கோவிந்தன் பாம்பைக் கொன்றான்." "Govind killed a snake." இதில் 'கோவிந்தன்' ஒரு தொழிலைச் செய்தான்

என்று சொல்லப்பபட்டிருக்கிறது. ஆதலின், 'கொன்றான்' என்னும் சொல் செய்வினை (Active Verb) ஆகும்.

Here 'Govind' did the action and therefore the verb '*killed*' is Active.

பாஸ்ஸிவ் வாய்ஸ் (**Passive Voice**)—செயப்பாட்டுவினை

ஒருவனுக்கு அல்லது ஒரு பொருளுக்குச் செய்யப் படும் விஷயத்தைப்பற்றிச் சொல்லுமாயின், வினைச்சொல் (Passive Verb) செயப்பாட்டுவினை எனப்படும்.

The Verb is said to be *Passive*. when it speaks of what is done to some person or thing.

உதாரணமாக :—

"The rat was *killed* by the cat." "எலி பூனையால் கொல்லப்பட்டது" இதில் கொல்லுதல் என்னும் தொழில் அடைந்தது எலி. ஆகையால் 'was killed' என்பது Passive Verb (செயப்பாட்டுவினை) ஆகும்.

செய்வினை செயப்பாட்டு வினையாக மாற்றும் விதம்

Changing Active Voice Into Passive

1. "அவன் ஒரு கடிதம் எழுதினான்."—செய்வினை
"He wrote a letter."—*Active Voice*

2. "அவனால் ஒரு கடிதம் எழுதப்பட்டது."—செயப்பாட்டு வினை
"A letter was written by him."—*Passive Voice*

முதல் வாக்கியம் இரண்டாம் வாக்கியம்

He—எழுவாய் (Subject). A letter-எழுவாய்(Subject)
wrote—செய்வினை (Active). was written–செயப்பாட்டு வினை Passive)
a letter—செயப்படுபொருள் by him-வினைச்சொல்லுக்கு அடைமொழி
(Object.)

முதல் வாக்கியத்திலுள்ள (Object) செயப்படுபொருள் இரண்டாவது வாக்கியத்தில் (Subject) எழுவாயாகவும், செய்வினை (Active Voice) செயப்பாட்டு வினையாகவும், (Passive Voice), எழுவாய் (Subject) *'by'* என்ற பதத் தோடு வினைச்சொல்லுக்கு (Verb) அடைமொழியாகவும் வந்தன.

ஒரே வாக்கியத்தில் டைரேக்ட் ஆப்ஜெக்ட் (Direct Object, இன்டைரேக்ட் ஆப்ஜெக்ட் (Indirect Object) என்ற இரண்டு செயப்படுபொருள்கள் (Objects) வந்தால் அவற்றிலொன்று (Subject) எழுவாயாகவும், மற்றது (Object) செயப்படுபொருளாகவும் வரும்.

உதாரணமாக:—

"He gave me a pen." "அவன் எனக்கு ஒரு பேனு கொடுத்தான்." இவ்வாக்கியம் செயப்பாட்டுவினையில் (Passive Voice) அடியில் கண்டவாறு வரும்.

1. 'I was given a pen *by* him.'—'அவனால் எனக்கு ஒரு பேனு கொடுக்கப்பட்டது.' (அல்லது)

2. 'A pen was given me *by* him.'—'ஒரு பேனு எனக்கு அவனால் கொடுக்கப்பட்டது.' என இரண்டு விதமாகவும் மாறும்.

பார்ட்டிஸிப்பில் (**Participle**)

வினைச்சொல்லின் கடைசியில் *'ing'*-அல்லது *'ed'*-அல்லது *'en'* சேர்ந்துவந்தால் ஜிரெண்டு (Gerund) என்றும், பார்ட்டிஸிப்பில் (Participle) என்றும் சொல்லப்படும்.

The part of a Verb which ends in '*ing*' or '*ed*', or '*en*' is called a Participle or Gerund.

உதாரணமாக:—

"A fad*ing* flower."—"வாடிக்கொண்டிருக்கிற மலர்."
"A hunt*ed* stag."—"வேட்டையாடப்பட்ட மான்."
"A fall*en* tree."—"விழுந்த மரம்."

இந்த ஜிரண்டு அல்லது பார்ட்டிஷிப்பில்: (Subject) எழுவாயாகவும், (Object) செயப்படுபொருளாகவும் அல்லது முடிவாகவும் வரும்.

உதாரணமாக:—

1. "Readidg is good."—"வாசித்தல் நல்லது." இதில் '*Reading*'—எழுவாய் (Subject).

2. "I like reading"—"நான் வாசிப்பதை விரும்புகிறேன்." இதில் 'reading' செயப்படுபொருள் (Object)

3. "He is fond of reading."—"அவனுக்கு வாசிப்பது பிரியம்." இதில் 'reading' செயப்படுபொருளாக வந்தது.

1. "I saw a girl grazing a cow."—"ஒரு பசுவை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டேன்." இதில் 'grazing-மேய்த்துக்கொண்டிருந்த' என்ற பதம் அட்ஜெக்டிவைப்போல் 'girl' என்ற பெயர்ச் சொல்லுக்கு அடைமொழியாயும், வினைச்சொல்லைப்போல் 'cow' என்ற செயப்படுபொருளையும் ஏற்றது.

2. "The boy loved by all is dead." எல்லாராலும் நேசிக்கப்பட்ட சிறுவன் இறந்துவிட்டான்." இதில் 'loved'

என்ற மொழி 'boy' என்ற பெயர்ச்சொல்லுக்கு உரிச்சொல் லாக வருவதோடு தொழிலையுங் காண்பிக்கிறது.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் 'grazing', 'loved', ஆகிய சொற்கள் ஏககாலத்தில் உரிச்சொல்லின் குணத்தை யும் வினைச்சொல்லின் குணத்தையும் தருவதால் அவை பார்டிஸிபில்ஸ் (Participles) எனப்படும்.

இரண்டு வாக்கியங்களை ஒரு வாக்கியமாகச் செய்கிற போது வாக்கியங்களிலுள்ள ஒரு வினைச்சொல்லோடு "ing" சேர்ந்து மற்ற வினைச்சொல்: (Finite Verb) வினை மூற்றுகவே வரும்.

உதாரணமாக:—

"I saw a lion."—"நான் ஒரு சிங்கத்தைக் கண் டேன்."

"I ran away."—"நான் ஓடி விட்டேன்."

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களை ஒரு வாக்கியமாகச் செய்தால் "Seeing a lion, I ran away."—"நான் ஒரு சிங்கத்தைக் கண்டு ஓடிவிட்டேன்." என்று வரும்."

பார்ட்டிஸிப்பில்ஸ் (Participles): Time (காலம்), Reason (காரணம்), Condition (நிபந்தனை), Concession (ஒப்பு) முதலிய பொருள்களை உணர்த்தும்.

உதாரணம்:—

"Hearing the noise I entered the house."—"சப்தம் கேட்டபோது நான் வீட்டினுள் புகுந்தேன்." (டைம்-time—காலம்).

"Being tired he went to rest."—"களைத்துப் போனதால் அவர் இளைப்பாறப் போனார்." (ரீஸன்-reason காரணம்).

"Turning to the left you will find my house.—" "இடதுபக்கம் திரும்பினால் நீ என் வீட்டைக் காண்பாய்." (கண்டிஷன்—Condition—நிபந்தனை).

"Admitting that he is rich, he is a miser."—"அவன் தனவந்தனாயிருந்தும் லோபியாயிருக்கிறான்." (கன்ஸெஷன்-Concession-ஒப்பு).

'Am, is, was, are, were, be, being' முதலிய வினைச் சொற்களுக்குப் பின் (Past Participles) இறந்தகால வினையெச்சம் வந்தால் (Passive Voice) செயப்பாட்டு வினை ஆகும்.

உதாரணம் :—

(Active Voice) "I love."="நான் நேசிக்கிறேன்."
(Passive "I am loved."="நான் நேசிக்கப்படுகிறேன்."

(Active) "He loved."="அவன் நேசிக்கிறான்."
(Passive) "He is loved."="அவன் நேசிக்கப்படுகிறான்."

(Active) "He loved."="அவன் நேசித்தான்." [டான்."
(Passive) "He was loved."="அவன் நேசிக்கப்பட்

(Active) "We love."="நாங்கள் நேசிக்கிறோம்." [றோம்."
(Passive) "We are loved."="நாங்கள் நேசிக்கப்படுகி

(Active) "We loved."="நாங்கள் நேசித்தோம்." [ம்."
(Passive) "We are loved."="நாங்கள் நேசிக்கப்பட்டோ

கவனிப்பு:—செய்வினையைச் செயப்பாட்டுவினையாகச் செய்யும்போது தமிழில் வினைச்சொல்லோடு 'படு' என்கிற உருபு சேர்ந்து வரும்.

டெ(t)ன்ஸ் (Tense)=காலம்

தமிழில் இருக்கும் மூன்று காலங்களான நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்பதைப்போலவே ஆங்கிலத்திலும் மூன்று காலங்கள் இருக்கின்றன. அவை:—

Present Tense—"Rama eats."
நிகழ்காலம்—"இராமன் சாப்பிடுகிறான்."

Past Tense—"Rama ate"
இறந்தகாலம்—"இராமன் சாப்பிட்டான்."

Future Tense—"Rama will eat."
எதிர்காலம்—"இராமன் சாப்பிடுவான்."

இதில் '***eats***' என்பது (Present Tense) நிகழ்காலத்தையும், '***ate***' என்பது (Past Tense) இறந்தகாலத்தையும், '***will eat***' என்பது (Future Tense எதிர்காலத்தையும் தெரிவிக்கும். வினைச்சொல்லின் இயல்பே Present Tense எனப்படும்.

உதாரணமாக:—"I walk."="நான் நடக்கிறேன்."
"Wa sing."=நாங்கள் பாடுகிறோம்."
"They run."=அவர்கள் ஓடுகிறார்கள்."

He, she, it முதலிய (Third Person) படர்க்கைப் பெயர்களும், மற்ற ஒருமைப் பெயர்ச்சொற்களும் எழுவாயாக வந்தால் நிகழ்காலத்தின் வினைச்சொல்லோடு 's' 'es' சேர்ந்து வரும்.

உதாரணமாக:—"He speaks." = "அவன் பேசுகிறான்."
"She sings." = "அவள் பாடுகிறாள்."
"It catches." = "அது பிடிக்கிறது."

பாஸ்ட் (t)டென்ஸ் (Past Tense) இறந்தகாலம்

இங்கிலீஷில் இறந்தகாலத்தைக் குறிப்பதற்காக வினைச்சொற்கள் அடியிற் கண்டவாறு மாறும்.

(1) வினைச்சொற்களோடு (Verb) "d, ed, t" முதலிய உருபுகள் சேர்ந்தால் இறந்தகாலமாகும்.

உதாரணம்:—

Pre. Tense	Past Tense	Pre. Tense	Past Tense
Love	Loved	Walk	Walked
Move	Moved	Talk	Talked
Burn	Burnt	Kill	Killed
Learn	Learnt	Kneel	Knelt

(2) சில வினைச்சொற்களிலுள்ள உயிரெழுத்துக்கள் மாறுவதால் இறந்தகாலமாகும்.

உதாரணம் :—

Pre. Tense	Past Tense	Pre. Tense	Past Tense
Write	Wrote	Drink	Drank
Speak	Spoke	Sink	Sank
Grow	Grew	Think	Thought
Know	Knew	Fly	Flew

(3) சில வினைச்சொற்கள் எவ்விதமாறுதலுமடையாமல் வரும்.

உதாரணம் :—

Pre. Tense.	Past Tense	Pre. Tense.	Past Tense
Cost	Cost	Cut	Cut
Hit	Hit	Let	Let
Put	Put	Read	Read

பி(f)யூச்சர் டெ(t)ன்ஸ் (**Future Tense**) = எதிர்காலம்

எதிர்காலத்தைக் குறிக்க வினைச்சொற்களுக்கு முன்னே "*shall, will*" என்ற சொற்கள் வைக்கவேண்டும்.

உதாரணம்:—

"I shall go." = "நான் போவேன்."
"He will go." = "அவன் போவான்."

"I, we" என்ற தன்மைப்பெயர்களுக்குப் பின் "shall" வந்தால் எதிர்காலத்தையும், "will" வந்தால் கட்டாயத்தையும் காண்பிக்கும்.

உதாரணம்:—

"I shall go." = "நான் போவேன்."
"I will go." = "நான் (கட்டாயம்) போவேன்."
"We shall go." = "நாம் போவோம்."
"We will go" = "நாம் (கட்டாயம்) போவோம்."

"You, he, she, it, they" ஆகிய பெயர்களுக்குப் பின்னால் "shall" வந்தால் போகிறவருடைய தீர்மானத்தையும், "will" வந்தால் எதிர்காலத்தையும் காண்பிக்கும்.

உதாரணம்:—

"You shall go." = "நீ போகவேண்டியது." [தீர்மானம்]
"You will go." = "நீ போவாய்." [எதிர்காலம்]
"He shall go." = "அவன் போகவேண்டும்."
"He will go." = "அவன் போவான்."

அப்பியாசம்—Exercise

கோடிட்டுள்ள இடங்களில் தகுந்த (Verbs) வினைச் சொற்களை அமைக்கவேண்டும்.

1. A man who——books is called an author.
   புத்தகங்களை———கிறவன் நூலாசிரியன் எனப்படுவான்.

2. The thing on which we——is called paper.
   நாம் எதன்மீது———கிறோமோ அதற்குக் காகிதம் என்று பெயர்.

3. We want a chair to——on.
   ———தற்கு ஒரு நாற்காலி தேவை.

4. A cow—grass. = பசு புல்லை———.

5. A cow——milk. = பசு பாலை———.

6. Dogs——not friendly to cats
   பூனைகளுக்கு நாய்கள் சிநேகமாய்———தில்லை.

7. It——full of water already.
   ஏற்கனவே அது தண்ணீரால் நிரம்பி———.

8. Why does that dog——at me?
   அந்த நாய் என்னைப் பார்த்து ஏன்———?

9. The farmer——the field with oxen.
   அந்தக் குடியானவன் அந்த நிலத்தை எருதுகளைக் கட்டி——.

10. The lamp——brightly.
    விளக்குப் பிரகாசமாக———.

11. The rays of the moon——cooler than those of the sun.
சூரிய கிரணங்களைவிட சந்திர கிரணங்கள் குளிர்ச்சியாக——.

12. The thing we——on is called a house.
நாம் எதில்——அதற்கு வீடு என்று பெயர்.

13. The thing we——on is called a chair.
நாம் எதன்மீது——அதற்கு நாற்காலி என்று பெயர்.

14. This book——800 poges.
இந்தப் புத்தகம் 800 பக்கங்களை——.

15. My friend——here yesterday.
எனது சிநேகிதன் நேற்று இங்கே——.

16. We——a book. = நாம் ஒரு புத்தகத்தை——

17. A boat——on water. = படகு தண்ணீர்மீது——.

18. A fish in water. = மீன் நீரில்——.

19. A stone——in water. = கல் தண்ணீரில்——.

20. Have you——your lessons?
நீ உனது பாடங்களை——?

அப்பியாசம்—Exercise.

கோடிடப்பட்டுள்ள இடங்களில் ஏற்ற (Nouns) நௌன்களை எழுதுக!

1. "A king sits on a——.
"அரசன்——த்தின்மீது உட்காருகிறான்."

2. "A——neighs." = "——கனைக்கிறது."

3. "A——barks." = "——குரைக்கிறது."

4. "Cats hunt."—— = "பூனைகள்—வேட்டையாடுகின்றன."

5. "The roof of the house has caught——."
"வீட்டுக்கூரை——ப் பற்றிக்கொண்டது."

6. "Ghee is made from——."
"நெய்——லிருந்து செய்யப்படுகிறது."

7. "The tank is full of——."
"இந்தக் குளம்———நிரம்பி யிருக்கிறது."

8. "I have three daughters and one——."
"எனக்கு மூன்றுபெண்களும் ஒரு—இருக்கிறார்கள்."

9. A——paws the ground with his——."
"——தன்——பூமியைப் பிறாண்டுகிறது."

10. "Take——from that tub."
"அந்தத் தொட்டியிலிருந்து——எடு."

11. "Fill this ink-pot with——."
"இந்த மைக்கூட்டையால் நிரப்பு."

12. "The——of ink is black." = "மையின்—கறுப்பு."

13. "A carpenter saws——"
"தச்சன்——ரம்பத்தால் அறுக்கிறான்."

14. "The washerman washes——."
"வண்ணான்———வெளுக்கிறான்."

15. "The fisherman catches——."
"செம்படவன் பிடிக்கிறான்."

16. "The servant swept the——of the room."
"அந்த அறையின்——வேலைக்காரன் பெருக்கினான்."

17. "——is given by cows."
"——பசுக்களிடமிருந்து உண்டாகிறது."

18. "The bull goaded a man with its—— "
அந்தக்காளை தன்——ல் ஒருமனிதனை முட்டியது."

19. "——roars" = "——கர்ஜனை செய்கிறது."

20. "You cannot write without a——."
"நீ——இல்லாமல் எழுத முடியாது."

அட்வேர்ப்(b)ஸ், (**Adverbs**)—வினையைக்கொண்டு முடியும் சொற்கள்.

அட்வெர்(b)ப் (Adverb) ஆனது ஒரு (Verb) வினைச் சொல்லையாவது, (Adjective) உரிச்சொல்லையாவது, அல்லது மற்றொரு (Adverb) அட்வெர்ப்பையாவது கொண்டு முடியும்.

உதாரணமாக :—

1. "Rama speaks slowly."
"இராமன் மெதுவாகப் பேசுகிறான்."

'இராமன் எப்படிப் பேசுகிறான்?" 'மெதுவாய்.' இதில் 'slowly (மெதுவாய்)' என்ற சொல் 'speaks (பேசுகிறான்)' என்ற வினைச்சொல்லின் குணத்தைக் காட்டுகிறது. இதில் '*slowly*' என்பது அட்வெர்ப் (Adverb)

2. "Rama speaks very slowly."
"இராமன் மிகவும் மெதுவாகப் பேசுகிறான்."

இதில் 'மிகவும் (very)' என்ற சொல் 'மெதுவாக (slowly)' என்ற சொல்லின் குணத்தைக் காட்டுகிறது. எனவே, 'very' என்பது அட்வெர்ப் (Adverb).

அட்வெர்ப்களின் வகை—**Kinds of Adverbs**

அட்வெர்ப்கள் (Adverbs) மூன்று வகைப்படும்.

அவை பின் வருவன :—

1. Simple Adverbs = சாதாரண அட்வெர்ப்கள்.
2. Interrogative Adverbs = வினா அட்வெர்ப்கள்.
3. Relative Adverbs = இன அட்வெர்ப்கள்.

1. ஸிம்பில் அட்வெர்ப்ஸ் (**Simple Adverbs**)

சாதாரண அட்வெர்ப்கள்.

சாதாரண அட்வெர்ப்கள் (Simple Adverbs) வெவ் வேறு பொருள்களில் மற்ற வார்த்தைகளைக் கொண்டு முடியும்.

(a) சில அட்வெர்ப்கள் (Adverbs) ஒரு வேலை இப்படி அல்லது இன்ன விதமாகச் செய்யப்படுகிறது என்று உணர்த்தும். இத்தகையவைகளுக்கு அட்வெர்ப்ஸ் ஆப் மானர் (Adverbs of Manner) எனப் பெயர்.

உதாரணம்:—

He did it well. = அவன் அதை நன்றாகச் செய்தான்.
We did it together. = நாம் அதைச் சேர்ந்து செய்தோம்.

He did it wisely. = அவன் புத்திசாலித்தனமாக அதைச் செய்தான்.

இவ்வகையான அட்வெர்ப்கள் (Adverbs). பெரும் பாலும் 'ly' என்ற விகுதி மேற்கொண்டிருக்கும். அவை (Adjectives) அட்ஜெக்டிவ்களுடன் 'ly' என்னும் விகுதி யைச் சேர்ப்பதனல் உண்டாகும்.

உதாரணம்:—

Fast = வேகமான.	Fastly = வேகமாக.
Slow = மெதுவான.	Slowly = மெதுவாக.
Wise = புத்தியுள்ள.	Wisely = புத்திசாலித்தனமாக.
Glad = சந்தோஷமான.	Gladly = சந்தோஷமாக.
Soft = மென்மையான.	Softly = மென்மையாக.
Gentle = சாந்தமான.	Gently = சாந்தமாக.
True = உண்மையான.	Truly = உண்மையாக.

(b) மற்றும் சில அட்வெர்ப்கள் ஒரு காரியம் இன்ன அளவு செய்யப்படுகிறது என்பதை உணர்த்துகின்றன. அவற்றிற்கு அட்வெர்ப்ஸ் ஆப் க்வான்ட்டிட்டி (Adverbs of Quantity) என்று பெயர்.

உதாரணம் :—

He is *quite* sick. = அவன் முழுதிலும் வியாதியா யிருக் கிறான்.
He is *rather* sick. = அவன் சற்று வியாதியா யிருக்கிறான்.
He is *very* sick. = அவன் மிகவும் வியாதியா யிருக்கிறான்.
We are *much* glad. = நாம் மிகவும் மகிழ்ச்சியுற் றிருக் கிறோம்.

We are *partly* glad. = நாம் கொஞ்சம் மகிழ்ச்சியுற் றிருக் கிறோம்.

We are *entirely* glad. = நாங்கள் பூர்த்தியாக மகிழ்ச்சியுற் றிருக்கின்றோம்.

We are *half* glad and *half* sad. = நாங்கள் பாதிமகிழ்ச்சி யுற் றிருக்கின்றோம், பாதி வருத்த முற்றிருக்கின்றோம்.

மேற்கூறிய வாக்கியங்களிலுள்ள, **quite, rather very, much, partly, entirely, half** இவைகளெல்லாம் அட்வேர்ப்ஸ் ஆக் க்வான்ட்டிட்டி (Adverbs of Quantity).

(c) இன்னும் சில அட்வெர்ப்கள் ஒரு காரியம் இத்தனை முறை செய்யப்படுகின்றது, அல்லது இன்ன வரிசைக் கிரமத்தில் செய்யப்படுகின்றது என்பதைத் தெரிவிக்கின் றன. அவைகளுக்கு அட்வேர்ப்ஸ் ஆப் நம்பர் (Adverbs of Number) என்று பெயர்.

உதாரணம் :—

Rama came *once*. = ராமன் ஒருமுறை வந்தான்.
Rama came *five times*. = ராமன் ஐந்துமுறை வந்தான்.
Rama came *seldom*. = ராமன் அபூர்வமாக வந்தான்.
Rama came *often*. = ராமன் அடிக்கடி வந்தான்.
Rama came *sometimes*. = ராமன் சிலவேளை வந்தான்.
Rama came *always*. = ராமன் எப்பொழுதும் வந்தான்.
Rama came *again*. = ராமன் மறுபடியும் வந்தான்.
Rama came *no more*. = ராமன் மறுபடியும் வரவேயில்லை.

Rama brought *firstly* a coat, *secondly* a shirt and *thirdly* an umbrella. = ராமன் முதலில் ஒரு சொக்காயையும், இரண்டாமுறை ஒரு உள் அங்கியையும், மூன்றுமுறை ஒரு குடையையும் கொண்டுவந்தான்.

எனவே, மேற்கூறிய வாக்கியங்களிலுள்ள 'once' 'five times', seldom', 'often', 'sometimes', 'always', 'again', 'no more', 'firstly', 'secondly', 'thirdly' இவைகள் எல்லாம் Adverbs of Manner.

(d) இன்னும் சில அட்வெர்ப்கள் ஒரு வேலை இப்பொழுது அல்லது இவ்வளவு நேரம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவிக்கின்றன. அவைகளுக்கு **Adverbs of Time** என்று பெயர்.

உதாரணம்:—

He did it *long* ago = அவன் அதை வெகு நாட்களுக்கு முன் செய்தான்.

He did this *before*. = அவன் இதை முன்னமே செய்தான்.

He did this *already*. = அவன் இதை முன்னமேயே செய்தான்.

He is *now* sick. = அவன் இப்போது காயலாவாயிருக்கிறான்.

He was *then* sick. = அப்போது அவன் வியாதியோடிருந்தான்.

He came *early* and went *late* = அவன் நேரத்திற்குமுன் வந்து நேரஞ்சென்று போனான்.

He came *at last*. = அவன் கடைசியாக வந்தான்.

He came *at once.* = அவன் உடனே வந்தான்.

He came *to-day.* = அவன் இன்று வந்தான்.

He came *yesterday.* = அவன் நேற்று வந்தான்.

He will come *to-morrow.* = அவன் நாளைக்கு வருவான்.

He came *daily.* = அவன் நாள்தோறும் வந்தான்.

இவ்வாக்கியங்களிலுள்ள long ago, before already, now, then, early, late at last, at once, to-day, yesterday, to-morrow, daily இவைகள் எல்லாம் *Adverbs of time* எனப்படும்.

(e) இன்னும் சில அட்வெர்ப்கள் ஒரு காரியம் இன்ன இடத்தில் செய்யப்பட்டதென்பதைத் தெரிவிக்கும். அவைகளுக்கு *Adverbs of Place* என்று பெயர்.

உதாரணமாக:—

He stood *before.* = அவன் எதிரில் நிற்கிறான்.

He stood *behind.* = அவன் பின்னல் நிற்கிறான்.

He stood *forwards* and not *backwards.* = அவன் முன்னேக்கி நின்றானேயல்லாமல் பின்னேக்கி நிற்கவில்லை.

He stood *below*, but the birds flew *above.* = அவன் கீழே நின்றான், பறவைகள் உயரப் பறந்தன.

He is not *here* but *there.* - அவன் இங்கே இல்லை, அங்கேயிருக்கிறான்.

He was *nowhere* found. = அவன் எங்கும் காணப்பட [வில்லை.

We looked for him *everywhere* = நாங்கள் எல்லாவிடத்திலும் அவனைத் தேடினோம்.

He stood *apart* from us. = அவன் எங்களை விட்டு விலகி நின்றான்.

He stood *aside*. = ஒருபுறமாக அவன் நின்றான்.

I sent him *away*. = நான் அவனை வெளியே அனுப்பி விட்டேன்.

We sent him *off*. = நாங்கள் அவனைத் துரத்திவிட்டோம்.

I rode *onwards*. = நான் முன்னேக்கிச் சவாரி செய்தேன்.

He rode *along*. = அவன் நெடுகச் சவாரி செய்தான்.

I shall find him *outside* and not *inside*. = நான் அவனை வெளியே காண்பேனே யன்றி உள்ளே காணமாட்டேன்.

The goats were grazing *hither, thither, up and down* on the hill-side. = ஆடுகள் அந்த மலைச்சாரலில் இங்கும் அங்கும் மேலுங் கீழும் மேய்ந்துகொண்டிருந்தன.

We will go *hence* (from this place) if you will come *thence* (from that place) = நீ அவ்விடத்திலிருந்து வருவாயானால் நாங்கள் இவ்விடத்திலிருந்து போய் விடுவோம்.

They stood *afar off* at a great distance. = அவர்கள் வெகு தூரத்தில் நின்றார்கள்.

Some stood *near*, others *around* and others *beyond* = சிலர் அருகில் நின்றார்கள், மற்றும் சிலர் சுற்றி நின்றார்கள்; இன்னும் சிலர் தூர நின்றார்கள்.

Whence do you come? = எங்கிருந்து வருகின்றாய்?

எனவே before, behind, forwards - backwards, below-above, here-there, nowhere, everywhere apart, away, off, onwards, along, outside inside, hither - thither, up and down, hence-thence, afar off, near-around-beyond, whence, இவைகள் எல்லாம் இடத்தை (place)க் காட்டுவதனல் Adverbs of Place எனப்படும்.

(f) இன்னும் சில அட்வெர்ப்கள் 'ஆம்' என்ற உடன் பாட்டையேனும், 'இல்லை' என்ற எதிர்மறையையேனும் காட்டும். அப்படிப்பட்டவைகளுக்கு அட்வேர்ப்ஸ் ஆப் அ(f)ப்பர்மிங் (*Adverbs of Affirming*) என்றும், அட்வேர்ப்ஸ் ஆப் டினையிங் (*Adverbs of Denying*) என்றும் பெயர்.

உதாரணம்:—

He said *yes* = அவன் ஆம் என்று கூறினன். (Affirming).
He said *no* = அவன் இல்லை என்று கூறினன், (Denying)
Yes, aye என்பவைகள் Adverbs of Affirming (உடன்பாடு)
No, nay என்பவைகள் Adverbs of Denying (எதிர்மறை)

2 இன்ட்டெர்ராகேடிவ் அட்வெர்ப்ஸ் (**Interrogative Adverbs**) வினுப்பொருளில் வரும் அட்வேர்ப்கள்.

அட்வெர்ப்கள் (Adverbs) கேள்வி கேட்பதற்கு உபயோகிக்கப்படும்பொழுது இன்ட்டெர்ராகேடிவ் அட்வெர்ப்ஸ் (Interrogative Adverbs) என்று பெயர்பெறும்.

When Adverbs are used for asking questions, they are called Interrogative Adverbs.

அவைகள் ஆறு வகைப்படும்.

1. Manner = விதம்.
2. Quantity = பரிமாணம்.
3. Number = எண்.
4. Time = காலம்.
5. Place = இடம்.
6. Cause = காரணம்.

உதாரணம் :—

1. Manner (விதம்)

How did he do this? அவன் இதை எப்படிச் செய்தான்?
How is he to-day? அவன் இன்று எப்படி இருக்கிறான்? (நிலைமை)

2. Quantity (பரிமாணம்)

How far is this true? இது எவ்வளவு தூரம் உண்மை?
How near is your house? உன் வீடு எவ்வளவு அருகே இருக்கிறது?

3. Number (எண்)

How many persons came? எத்தனை பேர் வந்தார்கள்?
How many mangoes are there? எத்தனை மாம்பழங்கள் இருக்கின்றன?

4. Time (காலம்)

When did you come? நீ எப்பொழுது வந்தாய்?
When are you going? நீ எப்பொழுது போகின்றாய்?

5. Place (இடம்)

W*here* was he ? அவன் எங்கே யிருந்தான்? [தாய்

W*hence* hast thou come ? நீ எந்த இடத்திலிருந்து வந்

6. Cause (காரணம்)

W*hy* did you do this ? நீ ஏன் இதைச் செய்தாய்?

W*hy* were you absent yesterday ? நீ ஏன் நேற்று வர [வில்லை?

---

3. ரிலேடிவ் அட்வேர்ப்ஸ் (**Relative Adverbs**)

இனவினையுரிச்சொற்கள்

வினைப்பொருளில் வரும் Interrogative Adverbs கேள்வி கேட்காமலிருந்தால் அவைகள் எல்லாம் இன வினை யுரிச் சொற்களாம் (Relative Adverbs). அவை இரண்டு பாக வாக்கியங்களைச் சேர்க்கின்றன.

உதாரணம் :—

I know *when* you came. நீ எப்பொழுது வந்தா யென்று எனக்குத் தெரியும்.

இதில் 'when' என்ற பதம் 'I know' என்ற வாக்கியத் தையும், 'you came' என்ற வாக்கியத்தையும் இணைக்கிறது.

I will tell you *how* he did this. அவன் இதை எப்படிச் செய்தான் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

I will tell you *why* he did it. அவன் அதை ஏன் செய்தான் என்று உனக்குக் கூறுகிறேன்.

I will tell *when* he came and *where* he lived. அவன் எப்போழுது வந்தான் என்பதையும்; எங்கு வசித்தான் என்பதையும் உனக்குச் சொல்லுகிறேன்.

இவ் வாக்கியங்களிலுள்ள 'when, how, why, when-where' என்பவைகளும், whenever, wherever, however, whence, whither' முதலிய சொற்களும் இரண்டு வாக்கியங்களைச் சேர்ப்பதோடு மறைந்தும் வெளிப்படையாயும் வரும். (Antecedents) முன் தொழில்களைத் தழுவியும் வரும். எனவே, Relative Adverbs களுக்கு கன்ஜங்டிவ் அட்வெர்ப்ஸ் (Conjunctive Adverbs) என்றும் பெயர்.

ப்ரிபோஸிஷன்ஸ்: *Prepositions*—உருபிடைச் சொற்கள்

ப்ரிபொஸிஷன்ஸ் (Prepositions) என்னும் உருபிடைச் சொல் Noun-க்கு முன்னேயாவது, Pronoun-க்கு முன்னேயாவது இருந்து அந்தப் பெயரினல் குறிக்கப்பட்ட மனிதனுக்கும் அல்லது பொருளுக்கும் மற்றொன்றிற்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிவிக்கும் சொல்லாம்.

உதாரணம்:—

He placed the book *on* the table. = அவன் புத்தகத்தை மேஜையின் மேல் வைத்தான்.

முன்பு சொல்லியிருக்கிற பிரகாரம் நடந்து அந்தத் தொகையைச் செலுத்திவிடுங்கள்

Anticipate fall in price, sell at current rate
விலை இறங்குமென எதிர் பார்க்கிறோம், தற்காலத்திய விலைக்கே விற்றுவிடு

Steamer is available, can ship the required bags
கப்பல் கிடைக்கிறது, தேவையான மூட்டைகளைக் கப்பலேற்ற முடியும்

Wire your opinion about the goods on hand
கையிலிருக்கிற சரக்கைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தைத் தந்தி கொடுங்கள்

Try to ship within Monday
திங்கட்கிழமைக்குள்ளாகக் கப்பலேற்ற முயலுங்கள்

Everywhy has a wherefore = அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது

Local demand is dull, foreign demand is keen
உள்ளூர் கிராக்கி குறைவா யிருக்கிறது, வெளியூர் கிராக்கி மும்மூரமா யிருக்கிறது

Goods are sent without trade-marks
வியாபாரக் குறியில்லாமல் சரக்குகள் அனுப்பப்பட்டிருக்கின்றன

The company refuses to deliver goods without security
ஈடு காட்டாமல் சரக்குகளைக் கொடுக்கக் கம்பெனிக்காரர்கள் மறுக்கிறார்கள்

Receive the balance amount before delivery of goods
சாமான்களைக் கொடுக்குமுன் மீதித் தொகையைப் பெற்றுக் கொள்

Inferior sort cannot accept goods
மட்ட தினுசு, சரக்குகளை ஒத்துக்கொள்ள மாட்டோம்

Will not pay till the remaining goods are delivered
மீதிச் சரக்குகளைக் கொடுக்கிறவரையில் பணம் செலுத்த மாட்டோம்

Owing to the shortage of goods cannot receive
சரக்குகள் குறைவா யிருக்கிறபடியால் பெற்றுக்கொள்ள மாட்டோம்

Despacthed 500 bags on your responsibility
உங்களுடைய பொறுப்பின்மேல் 500 மூட்டைகளை யனுப்பியிருக்கிறோம்

Beggars can never be bankrupts = இரப்பவனுக்குப் பஞ்சம் ஒன்றுமே யில்லை

Don't sell for less than Rupees ten
பத்து ரூபாய்க்குக் குறைந்து விற்காதே

Ramu promises loan on low interest
குறைந்த வட்டிக்குப் பணம் கொடுப்பதாக ராமு சொல்கிறார்

Borrow two thousand on pro-note
பத்திரத்தின்மீது இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கு

Interest is high here, try there
இங்கே வட்டி அதிகமாயிருக்கிறது, அங்கே முயற்சி செய்

He presses for money
பணத்திற்கு அவர் தொந்திரவு செய்கிறார்

Pay on the mortgage of house
வீடு கொதுவை வைத்துக்கொண்டு கொடு

Given three month's time to return the loan
கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி மூன்று மாதம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது

Heavy demand for money, ask your agent
பணத்திற்கு அதிக கிராக்கி, உங்களது ஏஜண்டைக் கேளுங்கள்

Cannot get money, stop journey
பணம் கிடைக்கவில்லை, பிரயாணத்தை நிறுத்துங்கள்

Draw money from the bank
பாங்கியிலிருந்து பணம் வாங்கு

He says he cannot pay now
இப்போது கொடுக்க முடியாதென்று அவர் சொல்கிறார்

Good deeds are never lost = இட்டுக் கெட்டார் எங்குமே யில்லை

Raise loan on goods
சரக்கின்பேரில் கடன் வாங்கு

Promise to return the amount in a week
ஒரு வாரத்தில் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடுவ தாக வாக்களி

The company demands payment
கம்பெனிக்காரர்கள் பணத்தைக் கொடுக்கும்படி கேட்கிறார் கள்

Don't draw at one month after sight
ஒரு மாதத் தவணைக்குப் பணம் வாங்காதே

Pay the amount deducting the advance
முன்பணத்தைக் கழித்துக்கொண்டு பணத்தைச் செலுத்தி விடு

Remit the balance without delay
தடை செய்யாமல் மீதிப் பணத்தை உடனே அனுப்பு

What is the total amount including interest?
வட்டியைச் சேர்த்து மொத்த பணம் என்ன ?

Pay the principal, I shall excuse the interest
அசலைக் கொடுத்துவிடு, நான் வட்டியை மன்னித்துவிடு வேன்

Cannot draw money from the bank
பாங்கியிலிருந்து பணம் வாங்க முடியாது

Cleared the debts, inform the head office
கடனைத் தீர்த்துவிட்டோம், தலைமை ஆபீசுக்குத் தெரி வித்துவிடுங்கள்

Coming events cast their shadows before = யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே

Cannot raise fresh loan on the goods
அந்தச் சரக்குகளின்மேல் புதிய கடன் வாங்க முடியாது

If accepted, return the bond duly signed
சம்மதிக்கப்பட்டால், பத்திரத்தில் சரியாய்க் கையெழுத்திட்டு அனுப்பவும்

The original bond is returned
மூல பத்திரம் திருப்பி யனுப்பப்பட்டிருக்கிறது

Interest is 12 per cent per annum
வட்டி ஒரு வருஷத்திற்கு நூற்றுக்கு ரூபாய் 12

Arrange for immediate payment
உடனே பணம் செலுத்தும்படி ஏற்பாடு செய்யுங்கள்

Arrange for early payment
சீக்கிரம் பணம் செலுத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறேம்

Interest falls due next week
வருகிற வாரம் வட்டி செலுத்தவேண்டியதா யிருக்கிறது

Ask the company for the loss and recover it from them
நஷ்டத்திற்காகக் கம்பெனியாரைக் கேட்டு அவர்களிடமிருந்து வசூல் செய்யுங்கள்

What is the house tax?
வீட்டு வரி என்ன?

Tell them that your income is limited
உன்னுடைய வருமானம் குறைவாயிருக்கிறதென்று அவர்களுக்குச் சொல்

The net profit is very small
நிகர லாபம் மிகக் குறைவாயிருக்கிறது

Evil be to him, that evil thinketh=கெடுவான் கேடு நினைப்பான்

The company had undertaken the loss
அந்த நஷ்டத்தைக் கம்பெனிக்காரர்கள் ஏற்றுக்கொண்டார்கள்

We have suffered a heavy loss
நாங்கள் அதிக நஷ்டமடைந்தோம்

The business is useless
அந்த வேலை (வியாபாரம்) உபயோகமற்றதா யிருக்கிறது

Appeal for the reduction of tax ?
வரியைக் குறைக்கும்படி மனு கொடு

They exempted him from paying the tax
வரி கொடுப்பதிலிருந்து அவனை அவர்கள் தள்ளிவிட்டார்கள்

I ask for the refund of the excess tax
அதிகமாகக் கொடுத்த வரியைத் திருப்பிக் கொடுக்கும்படி நான் கேட்கிறேன்

Collector refuses to excempt or reduce the tax
வரியைத் தள்ளவும் அல்லது குறைக்கவும் கலெக்டர் மறுக்கிறார்

They are busy in reassessing
மறுபடியும் வரி விதிப்பதில் அவர்கள் சுறுசுறுப்பா யிருக்கிறார்கள்

I want time to pay the income-tax
வருமான வரியைச் செலுத்த எனக்குத் தவணை தேவை

Still the case is pending
இன்னமும் அந்த வழக்குத் தீராமல் தானிருக்கிறது

When Poverty comes in at the door, Love leap out of the window = கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்

I will meet the expenses, conduct the case
நான் செலவைப் பார்த்துக்கொள்கிறேன், வழக்கை நடத்து

The lawyer refused to take up the case
அந்த வழக்கை யெடுக்க அந்த லாயர் மறுத்துவிட்டார்

Wire particulars of the case
அந்த வழக்கின் விவரத்தைத் தந்தி கொடுங்கள்

Hearing eighth, start with witnesses
எட்டாந் தேதி விசாரணை, சாட்சிகளுடன் புறப்படு

Case is adjourned to sixth May
வழக்கு மே மாதம் ஆறுந்தேதி ஒத்திப் போடப்பட் டிருக் கிறது

Who is the eminent lawyer?
கைதேர்ந்த வழக்கறிஞர் யார்?

Authorize him to appear on our behalf
நம் பக்கமாகத் தோன்ற அவருக்கு அதிகாரங் கொடு

The short lawyer pleads on their behalf
அவர்கள் பக்கமாக அந்தக் குள்ளமான வழக்கறிஞர் வாதிக் கிறார்

The case has become more complicated
அந்த வழக்கு அதிக சிக்கலாய்விட்டது

Go and consult a lawyer
போய் ஒரு வழக்கறிஞருடன் யோசி

The opinion of the party is wrong
அந்தக் கட்சியாரின் அபிப்பிராயம் பிசகு

He that is only his own pupil, shall have a fool to his tutor = குருவில்லார்க்கு வித்தையு மில்லை, முதல் இல்லார்க்கு இலாபமு மில்லை

He is not concerned with the case
அந்த வழக்கில் அவன் சம்பந்தப்பட்டில்லை

The opinion of the lawyer was overlooked
வழக்கறிஞரின் அபிப்பிராயம் கவனிக்கப்படாமற் போய் விட்டது

They will win the case
அவர்கள் அந்த வழக்கை ஜயிப்பார்கள்

Decided to pay the court costs
கோர்ட் செலவுகளைக் கொடுக்கும்படித் தீர்மானித்தார்

The witnesses are not strong
சாட்சிகள் பலமாயில்லை

The judge wants to decide in their favour
அவர்களுக் கனுகூலமாகத் தீர்ப்புச் சொல்ல நீதிபதி விரும்புகிறார்

The whole party is against us
அந்தக் கட்சியார் முழுதும் நமக்குப் பிரதிகூலமா யிருக் கிறார்கள்

Secure the best lawyer and try your utmost to win the case
மேலான வழக்கறிஞரைச் சம்பாதித்து உன்னால் கூடிய முயற்சி செய்து வழக்கைக் கெலி

You may happen to forego the rent
அந்த வாடகையை நீ இழக்க நேரும்

Settle the dispute before going to the court
நியாய ஸ்தலத்திற்குப் போவதற்கு முன்பாக அந்த வழக்கைத் தீர்த்துவிடு

Give him an inch, he will take an ell = இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்

They are too stubborn, cannot compromise
அவர்கள் அதிகப் பிடிவாதமா யிருக்கிறார்கள், சமாதானம் செய்ய முடியவில்லை

Their conditions are too hard
அவர்களுடைய நிபந்தனைகள் அதிகக் கடினமா யிருக்கின்றன

Don't hesitate, file a suit against him
தாமதிக்காதே, அவன்மீது ஒருவழக்கைத் தாக்கல் செய்துவிடு

He had paid the money, withdraw the case
அவன் பணத்தைச் செலுத்திவிட்டான், வழக்கை வேண்டாமென்று வாங்கிக்கொள்

File the suit and wire
கேஸைத் தாக்கல் செய்துவிட்டுத் தந்தி கொடு

Issue summons personally
நீயே தேராகச் சென்று சம்மனைக் கொடு

Speak to the lawyer before the hearing
விசாரணைக்கு முன் வழக்கறிஞரிடம் பேசு

Their case came for trial first
முதலில் அவர்களுடைய வழக்கு விசாரணைக்கு வந்தது

They had applied for adjournment of the case
வழக்கிற்குத் தவணை போடும்படி அவர்கள் மனுப்போட்டார்கள்

That case is proceeding for the last one week
சென்ற ஒரு வாரமாக அந்த வழக்கு நடந்துகொண்டு வருகிறது

Love is blind = காமத்திற்குக் கண்ணில்லை

The trial is over, but the judgment is reserved
விசாரணை முடிந்துவிட்டது, ஆனல் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட் டிருக்கிறது

I fear the judgment will be in their favour
அவர்களுக் கனுகூலமா யிருக்குமென்று நான் பயப்படு கிறேன்

Is case yet proceeding?
இன்னும் கேஸ் நடந்துகொண்டிருக்கிறதா ?

The case is dismissed with costs
அந்த வழக்குச் செலவுகளுடன் தள்ளப்பட்டது

The stolen property is not traced
சொத்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை

The police are making vigorous attempts
போலீஸார் அதிக மும்முரமான பிரயத்தினங்கள் செய் கிறார்கள்

The rogue was caught yesterday
அந்தத் திருடன் நேற்றுப் பிடிக்கப்பட்டான்

Bail is refusd
ஜாமீன் மறுக்கப்பட்டது

We will get an exparte decree
ஒருதலைத் தீர்மானம் நாம் பெறுவோம்

The culprit has absconded
அந்தக் குற்றவாளி மறைந்துவிட்டான்

A fifth-born girl cannot be got though earnestly sought = அஞ்சாவது பெண் கெஞ்சினலும் கிடைக் காது.

His whereabouts are not yet known
அவனது இருப்பிடம் இன்னமும் தெரியவில்லை

They have concealed the movable property
அசையும் பொருள்களை அவர்கள் மறைத்துவிட்டார்கள்

Your previous telegram mislaid, wire contents again
தங்களுடைய முன் தந்தி கை தவறிவிட்டது, அதி லடங் கிய விஷயங்களை மறுபடியும் தந்தி கொடுங்கள்

Our first wire is cancelled. Read this wire
எங்களுடைய முதல் தந்தி ரத்து செய்யப்பட்டது. இந்தத் தந்தியைப் படியுங்கள்

Our last wire is confirmed, send goods
எங்களுடைய கடைசி தந்தி ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது, சரக்குகளை அனுப்புங்கள்

Your wire is not clear, wire again
உங்களுடைய தந்தி தெளிவாயில்லை. மறுபடியும் தந்தி கொடுங்கள்

Correct our last wire and read 700 bags
எங்களுடைய கடைசித் தந்தியைத் திருத்தி 700 மூட்டை கள் என்று படியுங்கள்

Magistrate insists on cash security
ரொக்க ஜாமீன் கட்டவேண்டுமென்று மாஜிஸ்டிரேட் வற்புறுத்துகிறார்

Receive if he pays the decreed amount in full
டிக்ரியான தொகை பூர்வும் அவன் கொடுத்தால் பெற்றுக் கொள்

A hungry man is an angry man = பசியுள்ள மனிதன் கோபமுள்ளவன்.

No fear for immovable property

அசையாப் பொருளுக்குப் பய மில்லை

They propose attachment before judgment

தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யும்படி அவர்கள் யோசனை சொல்கிறார்கள்

Intend appealing, wire your opinion

அப்பீல் செய்ய யோசிக்கிறோம், உங்களுடைய அபிப்பிராயத்தைத் தந்தி கொடுங்கள்

Cannot expect good business until goods are received

சரக்குகள் வந்து சேர்கிறவரையில் நல்ல வியாபாரத்தை எதிர்பார்க்க முடியாது

Market is filled with goods, no rapid sale

மார்க்கெட்டில் சரக்கு நிறைந்திருக்கிறது, சுறுசுறுப்பான விற்பனை இல்லை

Don't send goods, business is dull

சரக்குகளை அனுப்பவேண்டாம், வியாபாரம் மந்தமாயிருக்கிறது

Summon for the outstanding debts

வெளியில் நிலுவையாயிருக்கிற கடன்களுக்கெல்லாம் பிராது செய்துவிடு

Prices are increased owing to the difficulty of getting steamers

கப்பல் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறபடியால் விலை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது

Don't give loan without personal security

நபர் ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்கவேண்டாம்

A friend in need is a friend indeed = ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்.

Complete the work soon and send your bill

வேலையைச் சீக்கிரத்தில் முடித்துவிட்டு உங்களுடைய பட்டியை யனுப்புங்கள்

Complete the work within the specified time

குறித்த காலத்திற்குள் அந்த வேலையை முடித்துவிடு

Work finished, refund our advance

வேலை முடிந்துவிட்டது, முன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்

They will forfeit the amount

அவர்கள் அந்தத் தொகையை இழந்துவிடுவார்கள்

Failing to remit the balance they will forego the deposit

மீதியை அனுப்பத் தவறினால் அவர்கள் அந்த முதல் பணத்தை விட்டுவிட நேரும்

Am transferred to Birur, hence resigned the post

பீரூருக்கு மாற்றப்பட்டதினால் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன்

To-morrow we camp at Vellore, inform our servants

நாளைதினம் நாங்கள் வேலூரில் முகாமிடுகிறோம், எங்களுடைய வேலைக்காரர்களுக்குத் தெரிவியுங்கள்

Festival to-morrow, send some constables to Mayavaram

நாளைதினம் திருவிழா. சில போலீஸ் சேவகர்களை மாயவரத்திற்கு அனுப்புங்கள்

Never dream of getting success in that case

அந்த வழக்கில் ஜயமடைவாய் என்று ஒருபோதும் கனவு காணுதே

The use of ripe fruits purifies the blood = இனிப்பான பழதினுசுகள் புசிப்பதினால் இரத்தம் சுத்தி அடைகிறது

Bail application is not yet sanctioned
ஜாமீன் மனு இன்னும் உத்தரவாக வில்லை

Health very bad, pray one month extension of leave
தேகம் அதிக கேவலமா யிருக்கிறது, ஒரு மாத ரஜா அதிகம் கொடுக்கும்படி பிரார்த்திக்கின்றேன்

Arrived safe, things are alright
சுகமாகச் சேர்ந்தோம், சாமான்கள் எல்லாம் சரியாய் இருக்கின்றன

Resignation not accepted, report for duty at Madura
ராஜிநாமா ஒப்புக்கொள்ளப் படவில்லை, மதுரைக்குப் போய் வேலையில் சேர்

Degraded to second clerk's post for that impertinent behaviour
அந்த அடாத நடத்தைக்காக இரண்டாவது குமாஸ்தா வேலைக்கு இறக்கியிருக்கிறோம்

Promoted to Tahsildar's post on recommendation
சிபார்சின்பேரில் தாசில்தார் வேலைக்கு உயர்த்தி யிருக்கிறார்கள்

Received twenty rupees promotion this year
இந்த வருடம் இருபது ரூபாய் சம்பள உயர்வு பெற்றேன்

Refused to recommend promotion of salary
சம்பள உயர்வைச் சிபார்சு செய்ய மறுத்துவிட்டார்

He retired and enjoys pension
அவர் வேலையிலிருந்து நீங்கிவிட்டு உபகாரச் சம்பளத்தை யனுபவிக்கிறார்

Set a thief to catch a thief = திருடனைப் பிடிக்கத் திருடனை விடு

The wire remains undeliverd, write correct address
அந்தத் தந்தி கொடுக்கப்படாம லிருக்கிறது, சரியான விலா சத்தை எழுதுங்கள்

Joined duty, cancel the leave sanctioned
வேலையில் சேர்ந்துவிட்டேன், கொடுத்த ராஜாவை ரத்து செய்து விடுங்கள்

House settled, bring wife and children
வீடு தீர்மானமாயிற்று, மனைவியையும் குழந்தைகளையு மழைத்துவா

Cannot get a house, am put up in a hotel
வீடு கிடைக்கவில்லை, ஒரு சாப்பாட்டு விடுதியில் தங்கி யிருக்கிறேன்

Owner requires the house, hence vacate
சொந்தக்காரருக்கு வீடு தேவை, ஆனதால் காலி செய் யுங்கள்

Heavy work, cannot attend the ceremony
அதிக வேலை, காரியத்திற்கு வர முடியாது

Our office is removed to Vepery
எங்கள் காரிய ஸ்தலம் வேப்பேரிக்கு மாற்றப்பட் டிருக்கிறது

In future, address us as follows
இனிமேல் எங்களுக்கு அடியிற் கண்ட மாதிரி விலாச மெழுதுங்கள்

A small dose of pure honey every morning to boys and girls, will help them in their studies = கல்வி கற்றுக்கொள்ளும் சிறுவர் சிறுமிகள் பிரதிதினம் காலை யில் அப்பட்டமான மலைத்தேன் சாப்பிட்டுவந்தால் கல்வி சுறுசுறுப்பாக வரும்.

Anticipate their early reply

அவர்களுடைய அதிசீக்கிரமான பதிலை ஆவலுடன் எதிர் பாருங்கள்

Suspend all our business till the holidays are over

விடுமுறை நாட்கள் முடிகிறவரையில் நம்முடைய எல்லா வேலைகளையும் நிறுத்தி வையுங்கள்.

Plague is prevalent, do not send family

பிளேக் பரவியிருக்கிறது. குடும்பத்தினரை அனுப்பவேண் டாம்

Kamala delivered a female child yesterday six evening. Mother and baby are safe

நேற்று மாலை 6-மணிக்குக் கமலாவிற்கு ஒரு பெண் குழந் தை பிறந்தது. தாயும் குழந்தையும் க்ஷேமமா யிருக் கிறார்கள்

கூட்டப் பெயர்கள் (Collective Names)

எ (f)பார்ம் ஆப் மெர்ச்சென்ட்ஸ், A firm of merchants—ஒரு வர்த்தகர் கூட்டம்

அன் ஆர்மி, An army—ஒரு சேனை

எ (c)க்ரவுட்(d) ஆப் (p)பீபில், A crowd of people—ஒரு ஜனத்திரள்

எ (b)பெவி ஆப்(f) லேடீஸ், A bevy of ladies—ஸ்திரீ களின் கூட்டம்

Early to bed and a brisk walk in the early morning will promote health = பொழுதுடன் நித்திரை செய்து அதிகாலையிலெழுந்து சிறிது தூரம் நடந் தால் தேகத்துக்குச் சுகம் தரும்

எ (c)கவே ஆப் (b)பர்ட்ஸ், A covey of birds—பட்சிக் கூட்டம்

எ (d)டிரோவ் ஆப் (c)காட்டில், A drove of cattle—ஆடுமாடுகள் (கால்நடைகள்) கூட்டம்

எ (h)ஹெர்ட் ஆப் (c)கௌஸ், A herd of cows—பசுக் கூட்டம்

எ (f)ப்ளாக் ஆப் ஷீப், A flock of sheep—ஆடுகளின் கூட்டம் (மந்தை)

எ ஹய்வ் ஆப் (b)பீஸ், A hive of bees—தேன் ஈக் கூட்டம்

எ ஸ்வாரம் ஆப் ஆன்ட்ஸ், A swarm of ants—எறும்புக் கூட்டம்

எ (b)புரூட்(d) ஆப் (c)சிக்கன்ஸ், A brood of chickens—ஒரு வைப்புக்குஞ்சு

எ கம்பெனி ஆப் ஸோல்ஜர்ஸ், A company of soldiers—ஒரு படைத்திரள்

எ (t)ட்ரூப் ஆப் ஹர்ஸஸ், A troop of horses—ஒரு குதிரைப் படை

எ ஸ்டாக் ஆப் (g)கூட்ஸ், A stock of goods—சரக்கு இருப்பு

எ (c)கொயர் ஆப் ஸிங்கர்ஸ், A choir of singers—ஒரு பாடகர்கள் கூட்டம்

எ (b)பாண்ட் ஆப் ம்யூஸிஷியன்ஸ், A band of musicians—பாடகர்களின் கூட்டம்

Bathing in cold water just before sunrise gives health and expression—அதிகாலையில் குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்தால் தேகத்துக்குச் சவுக்கியமும், முகவசீகரமும் உண்டாகும்

எ (b)பாண்ட் ஆப் ரா(b)பர்ஸ், A band of robbers—ஒரு திருடர்களின் கூட்டம்

எ (t)டப்ட்(t) ஆப் ஹேர், A tuft of hair—மயிர்த் தொகுதி (குடுமி)

எ லாக் ஆப் ஹேர், A lock of hair—மயிர்ச் சிகை

எ (b)பொ(q)கே ஆப் (f)ப்ளவர்ஸ், A bouquet of flowers—ஒரு புஷ்பச்செண்டு

எ (g)கார்லண்ட் ஆப் ப்ளவர்ஸ், A garland of flowers—ஒரு பூமாலை

எ ரீத் ஆப் ப்ளவர்ஸ், A wreath of flowers—ஒரு பூமாலை

எ லைப்ரெரி ஆப் புக்ஸ், A library of books—ஒரு புஸ்தக சாலை

எ பென்ஸில் ஆப் ரேஸ், A pencil of rays—கதிர்களின் கத்தை

எ (c)ஸென்(t)சுரி ஆப் இயர்ஸ், A century of years—நூறு வருஷங்கள்

எ ட்ரெயின் ஆப் வா(g)கன்ஸ், A train of waggons—ஒரு வண்டிகளின் தொடர்

எ (c)க்ளம்ப்(p) ஆப் ட்ரீஸ், A clump of trees—ஒரு மரங்களடர்ந்த சோலை

எ (b)பன்ச் ஆப் (k)கீஸ், A bunch of keys—ஒரு சாவிகளின் கொத்து

எ (b)பன்ச் ஆப் (p)ப்ளான்டென்ஸ், A bunch of plantains—ஒரு வாழைக் குலை

எ (c)க்ளஸ்டர் ஆப் ஸ்டார்ஸ், A cluster of stars—நக்ஷத்திரங்களின் கூட்டம்

எ (f)பைல் ஆப் (p)பேபர்ஸ், A file of papers—ஒரு காகிதக் கோர்வை

எ ஹீப் ஆப் ஸ்டோன்ஸ், A heap of stones—கற்களின் குவியல்

எ (f)ப்ளைட் ஆப் ஸ்டெப்ஸ், A flight of steps—படிக்கட்டு

எ (f)பெஸ்டூன் ஆப் (f)ப்ளவர்ஸ், A festoon of flowers—புஷ்பத் தோரணம்

எ (c)செய்ன் ஆப் மவுன்டென்ஸ், A chain of mountains—ஒரு மலைத்தொடர்

எ ஸ்டாக் ஆப் (g)க்ரெயின், A stock of grain—ஒரு தாட்போர்

எ ஷீப்(f) ஆப் (c)காரன், A sheaf of corn—கதிர் கட்டு

எ ஸ்வாரம் ஆப்(f) ப்ளைஸ், A swarm of flies—ஈக்களின் கூட்டம்

ஜந்துக்களின் இறைச்சல்—Sounds of Animals

தி (c)கௌ லோஸ், The cow lows—பசு கதறுகிறது

தி (d)டாக்(g) பார்க்ஸ், The dog barks—நாய் குரைக்கிறது

தி (r)ராட் ஸ்கீரீச்சஸ், The rat screeches—எலி கீச்சிடுகிறது

தி (b)பீ ஹம்ஸ், The bee hums—தேனீ ரீங்கார மிடுகிறது

தி (a)அவுல் ஹூட்ஸ், The owl hoots—ஆந்தை அகவுகிறது

தி ஹென் (c)காக்கில்ஸ், The hen cackles—பெட்டைக் கோழி கொக்கரிக்கிறது

தி (p)பிக் (g)க்ரண்ட்ஸ், The pig grunts—பன்றி உறுமுகிறது

தி (c)காட்(t) ம்யூஸ், The cat mews—பூனை கத்துகிறது

தி (d)டாக்(g) ஹவுல்ஸ், The dog howls—நாய் ஊளையிடுகிறது

தி (f)ப்ராக்(g) க்ரோக்ஸ், The frog croaks—தவளை கத்துகிறது

தி (b)புல் (b)பெல்லோஸ், The bull bellows—எருது எக்காள மிடுகிறது

தி லயன் ரோர்ஸ், The lion roars—சிங்கம் கர்ஜிக்கிறது

தி (c)காக் (c)க்ரோஸ், The cock crows—சேவல் கூவுகிறது

தி (t)டைகர் (g)க்ரவுல்ஸ், The tiger growls—புலி உறுமுகிறது

தி ஸ்நேக் ஹிஸ்ஸஸ், The snake hisses—பாம்பு சீறுகிறது

தி ஷீப் (b)ப்ளீட்ஸ், The sheep bleats—செம்மறியாடு கத்துகிறது

தி மன்கி (c)சாட்டர்ஸ், The monkey chatters—குரங்கு கத்துகிறது

தி (j)ஜாகால் ஹவுல்ஸ், The jackal howls—நரி ஊளையிடுகிறது

தி (p)பாரெட்(t) ஸ்பீக்ஸ், The parrot speaks—கிளி பேசுகிறது

தி ஹைனா லாப்ஸ், The hyena laughs—கழுதைப்புலி சிரிக்கிறது

தி (h)ஹார்ஸ் நெய்ஸ், The horse neighs—குதிரை கனைக்கிறது

தி ஆஸ் (b)ப்ரேஸ், The ass brays—கழுதை கத்துகிறது

பழமொழிகள்—Proverbs

எக்ஸாம்பில் இஸ் (b)பெட்டர் தான் ப்ரிஸெப்ட்
Example is better than precept
சொல்லுவதிலும் செய்துகாட்டுவது மேலானது

எவ்வெரி ஒன் மஸ்ட் (b)பேர் ஹிஸ் ஒன் (c)க்ராஸ்
Every one must bear his own cross
ஒவ்வொருவரும் தன் பாட்டைத் தானே அனுபவிக்க வேண்டும்

(d)ட்ரான் வெல்ஸ் ஆர் ஸெல்டம் (d)டிரை
Drawn wells are seldom dry
இறைக்கும் கிணறு சுரக்கும்

எம்டி வெஸல்ஸ் மேக் தி (g)கிரேடெஸ்ட் (s)சவுண்ட்
Empty vessels make the greatest sound
அரை குடம் தளும்பும், நிறை குடம் தளும்பாது

ஏ (b)பர்ன்ட் சைல்ட் (d)ட்ரெட்ஸ் தி (f)பையர்
A burnt child dreads the fire
நெருப்பு சுட்ட குழந்தை நெருப்பைப் பார்த்தால் பயப் படும். சூடுண்ட பூனை அடுப்பங்கரை போகாது

(d)டிஸ்டன்ஸ் இஸ் தி என்சாண்ட்மென்ட் ஆப் வ்யூ
Distance is the enchantment of view
இக்கரைக்கு அக்கரை பச்சை

ஆல் இஸ் நாட் (g)கோல்ட் தட் (g)க்ளிட்டர்ஸ்
All is not gold that glitters
மின்னுவ தெல்லாம் பொன்னல்ல. வெளுத்த தெல்லாம் பாலல்ல

ஏ (g)குட் நேம் இஸ் பெட்டர் தன் ரிச்சஸ்
A good name is better than riches
நற்பெயரே பணத்தைவிட மேலானது

எ பென்னி ஸேவ்ட்(d) இஸ் எ பென்னி எர்ன்ட்(d)
A penny saved is a penny earned
ஒரு தம்பிடி மிச்சப்படுத்தினது ஒரு தம்பிடி சம்பாதித்த தாகும்

எ ஸ்டிச் இன் டைம் ஸேவ்ஸ் நைன்
A stitch in time saves nine
கிழிந்ததும் தைக்கிறது ஒன்பது தையலைக் காக்கும்

ஆஸ் யூ ஸோ யூ வில் ரீப்
As you sow you will reap
நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்

(c)கட் யுவர் (c)கோட் அக்கார்டிங் ட்டு யுவர் (c)க்ளாத்
Cut your coat according to your cloth
துணிக்குப் போதுமானபடி சொக்காய் வெட்டு, வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யாதே

(b)பார்கிங் (d)டாக்ஸ் வில் நெவர் (b)பைட்
Barking dogs will never bite
குரைக்கிற நாய்கள் கடிக்கா

(b)பெட்டர் பி அலோன் தான் இன் (b)பாட்(d) கம்பெனி
Better be alone than in bad company
துஷ்டருடன் சேருவதைவிட தனியே இருப்பது மேலானது

ப்ீ ஸ்லோ டு (p)ப்ராமிஸ் (b)பட் (q)க்யுக் டு (p)பெர்பார்ம்
Be slow to promise but quick to perform
வாக்குக் கொடுப்பது மெதுவாயும், செய்வது விரைவாகவும் இருக்கவேண்டும்

எ (b)பர்ட் இன் தி ஹாண்ட் இஸ் ஒர்த் (t)டூ இன் தி (b)புஷ்
A bird in the hand is worth two in the bush
கையில் இருக்கும் ஒரு பக்ஷி புதரிலிருக்கும் இரண்டைவிட விலை அதிகம், கையில் இருக்கும் களாப்பழம் நாளை வரும் பலாப்பழத்தைவிட மேலானது

(b)பெட்டர் லேட் தான் நெவர்
Better late than never
அடியோடு வராம லிருப்பதைவிடக் கொஞ்சம் நேரஞ் சென்று வருவது மேலானது

(d)டூ நாட் ஆட்(d) (f)பூயல் டு (f)பையர்
Do not add fuel to fire
எரியும் கொள்ளியை ஏறத்தள்ளாதே

(d)டூ ஆஸ் யூ உட்(d) பீ (d)டன் பை
Do as you would be done by
உனக்குப் பிறர் செய்ய விரும்புகிறபடி நீ அவர்களுக்குச் செய்

எர்லி டு (b)பெட்(d) அண்ட் எர்லி டு ரைஸ் மேக்ஸ் எ மான் ஹெல்த்தி, வெல்த்தி அண்ட் ஓய்ஸ்
Early to bed and early to rise makes a man healthy wealthy and wise
சீக்கிரம் படுக்கைக்குப் போவதும், அதிகாலையில் எழுந்திருப்பதும், ஒருவனுக்குச் சுகத்தையும்-செல்வத்தையும்-புத்தியையும் கொடுக்கும்

(f)பெய்த்புல் (f)ப்ரண்ட்ஸ் ஆர் ஹார்ட்(d) (டு) (f)பைண்ட்(d)
Faithful friends are hard to find
உண்மையான சிநேகிதர்கள் கிடைப்பது அரிது

(b)பர்ட்ஸ் ஆப் தி ஸேம் (f)பெதர் (f)ப்ளாக் டுகெதர்
Birds of the same feather flock together
இனம் இனத்துடன், வெள்ளாடு தன்னுடன்

ஹேஸ்ட் மேக்ஸ் வேஸ்ட்
Haste makes waste
ஆத்திரம் கஷ்டத்தைக் கொடுக்கும்

ஹீ தட் (g)கோஸ் (b)பாரோயிங் கோஸ் ஸாரோயிங்
He that goes borrowing goes sorrowing
கடன் படுகிறவன் எப்போதும் சஞ்சலப்படுகிறவனே

(g)குட் வைன் நீட்ஸ் நோ (b)புஷ்
Good vine needs no bush
நல்ல திராட்சை ரசத்திற்கு விலே கூறவேண்டியதில்லே

ஹாப்(f) லோப்(f) இஸ்(b)பெட்டர் தான் நோ (b)ப்ரட்(d)
Half loaf is better than no bread
முழு ரொட்டி இல்லாதிருப்பதைவிட பாதி ரொட்டி இருப்பது மேலானதே

ஹார்ம் ஸெட் ஹார்ம் (g)கெட்
Harm set harm get
கெடுவான் கேடு நினைப்பான்

(g)க்ரீட்(d) இஸ் என்வீஸ் (b)ப்ரதர்
Greed is envy's brother
பேராசை பொறுமைக்குச் சகோதரன்

(g)கிராஸ்ப் ஆல் லூஸ் ஆல்
Grasp all loose all
அதிக ஆசை அதிக கஷ்டம்

ஹானஸ்டி இஸ் தி (b)பெஸ்ட் (p)பாலிஸி
Honesty is the best policy
யதார்த்தமே உத்தமம்

இப் யூ லாப்(f) (t)டு-டே, யூ மே (c)க்ரை (t)டு-மாரோ
If you laugh to-day, you may cry to-morrow
இன்றைக்குச் சிரிப்பு, நாளைக்கு அழுகை

இட் இஸ் நாட் தி (g)கே (c)கோட் தட் மேக்ஸ் எ ஜென் டில்மன்
It is not the gay coat that makes a gentleman
குணமே (பெருந்தன்மை) அழகிய சட்டையல்ல ஒருவனைப் பெருந்தன்மை யாக்குவது

நோ யூஸ் ஆப் க்ரையிங் ஓவர் ஸ்பில்ட் மில்க்
No use of crying over spilt milk
சிந்திப்போன பாலைப்பற்றி அழுவதில் பயனில்லை, வெள்ளம் வருமுன் அணை போடவேண்டும்

நெவர் மேக் எ மவுண்டென் எ மோல் ஹில்
Never make a mountain a mole hill
தரும்பை மலையாக்காதே

மேக் ஹே ஒயல் தி ஸன் ஷைன்ஸ்
Make hay while the sun shines
வெய்யில் இருக்கையிலேயே புல்லை உலர்த்து, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

லவ் இஸ் (b)ப்ளைண்ட்(d)
Love is blind
காமத்திற்குக் கண் இல்லை, ஆசை வெட்க மறியாது

நெவர் லுக் ஏ (g)கிப்ட் ஹார்ஸ் இன் தி டீத்
Never look a gift horse in the teeth
தானம் வந்த குதிரையை பல்லைப் பிடித்துப் பார்க்காதே

மணி மேக்ஸ் மெனி திங்ஸ்
Money makes many things
பணம் அநேகவகைகள் செய்யும்

மிஸ்(f)பார்ச்சூன்ஸ் (s)ஸெல்டம் கம் ஸிங்கில்
Misfortunes seldom come single
கஷ்டங்கள் தனியே வருவது அரிது, பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்

மானர்ஸ் மேக் ஏ மான்
Manners make a man
ஒழுக்கமே மனிதனுக்கும், ஒழுக்கம் உயர் குலத்தினனன்று

மான் (f)ப்ரொபோஸெஸ், (g)காட்(d) டிஸ்போஸெஸ்
Man proposes, God disposes
மனுஷன் ஒன்று நினைக்கிறான், கடவுள் வேறு செய்கிறார்

(f)பேஸ் இஸ் தி இன்டெக்ஸ் ஆப் தி மைண்ட்
Face is the index of the mind
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ப்ரிவென்ஷன் இஸ் (b) பெட்டர் தான் (c)க்யூர்
Prevention is better than cure
குணப்பட விரும்புவதிலும் தீமைக்கு விலகி இருப்பதே மேலானது, வெள்ளம் வருமுன் அணை போடு

நோ ஸ்மோக் வித்தவுட் (f)பயர்
No smoke without fire
நெருப்பில்லாமல் புகை வராது

நோ (p)பெயின்ஸ், நோ (g)கெயின்ஸ்
No pains, no gains
கஷ்டப்படாவிட்டால் லாபமில்லை

(t)டு எர் இஸ் யூமன், டு (f)பர்கிவ் இஸ் (d)டிவைன்
To err is human, to forgive is divine
தப்புகிறது மனிதனுடைய சுபாவம், மன்னிக்கிறது கடவுளுடையது

(t)டு-மாரோ நெவர் கம்ஸ்
To-morrow never comes
நாளையதினம் ஒருபோதும் வராது

வால்ஸ் ஹாவ் ஈயர்ஸ்
Walls have ears
சுவர்களுக்கும் காதுகளிருக்கின்றன, பக்கம் பார்த்துப் பேசு

வெல் (b)பிகன் இஸ் ஹாப் (d)டன்
Well begun is half done
செம்மையாய் ஆரம்பித்த காரியம் பாதி நடந்ததுபோல

லிட்டில் ஸ்ட்ரோக்ஸ் (f)பெல் (g)க்ரேட் ஓக்ஸ்
Little strokes fell great oaks
சிறு துளி பெருவெள்ளம், சிறுகச்சிறுக வெட்டினால் பெரிய மரங்களும் வீழ்ந்துவிடும், அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும்

மணியார்டர்—Money Order

ஒருவர் இன்னொரு ஊரிலிருக்கும் வேறொருவருக்குப் பணம் அனுப்பவேண்டுமானால் தபால் ஆபீஸில் மணி ஆர்டர் பாரம் கேட்டால் இலவசமாகக் கொடுப்பார்கள்; அதை வாங்கி அதில் கீழே உதாரணமாகக் காட்டியிருக்கும் மாதிரி எழுதி தபாலாபீஸில் அனுப்ப வேண்டிய பணத்தையும், அவர்களுக்கு அதை அனுப்பக் கட்டணத்தையும் கொடுத்தால் அவர்கள் வாங்கிக்கொண்டு ரசீது ஒன்று கொடுப்பார்கள். அதைப் பணம் பெற்றுக்கொண்டவரிடமிருந்து ரசீது வருகிறவரையில் பத்திரமாய் வைத்துக் கொண்டிருக்கவேண்டும். பணம் சேராவிட்டாலாவது, அல்லது வேறு யாருக்காவது போஸ்டாபீஸார் கொடுத்திருந்தாலாவது, போஸ்டாபீசுக்குப் பிராது காகிதம் எழுத நாம் வைத்திருக்கும் ரசீதிலிருந்து நெம்பர், தேதி, போஸ்ட் செய்த போஸ்டாபீசு, எல்லாம் தெரிந்துகொள்ளலாம். பணம் அனுப்ப நாம் போஸ்ட்டாபீசில் அனுப்புகிற பணத்துடன் செலுத்தவேண்டிய கட்டண விகிதம்: எந்தத் தொகையாவது பத்து ரூபாய்வரைக்கும் 2 அணு; 10 ரூபாய்க்கு மேற்பட்டு 24 ரூபாய்வரையில் 4 அணு; 25 ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ்வொரு முழு 25 ரூபாய்க்கும் 4 அணு; 10 ரூபாய்க்குக் குறைந்ததானால் 2 அணு; பத்து ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணு.

மணி ஆர்டர் பாரம்—முன்புறம்.

இதனடியிலிருக்கும் பதிவுகளெல்லாம் பணம் அனுப்புகிறவரால் எழுதப்படவேண்டும்
(ஒரு தந்தி மணியார்டர் அனுப்பவேண்டியிருந்தால், இந்தப் பாரத்தில் குறுக்காக "தந்தி மூலமாக" என்று எழுதவும்.)

தொகை (எழுத்தால்)

Rupees Two-hundred only.

ரூபாய் இருநூறு.

பணம் பெற்றுக் கொள்பவர் (முழு) பெயரும் விலாஸமும்

E. M. Gopalakrishna Kone,
Bookseller,
158-A, Broadway, Madras.

இ. மா. கோபாலகிருஷ்ண கோன்,
புத்தக வியாபாரம்,
158-A, பிராட்வே, மதராஸ்.

தேதி 20—9—1934

Ramaswamy Iyengar
ராமசாமி அய்யங்கார்
பணம் அனுப்புகிறவர் கையெழுத்து.

தபால் ஆபீஸ் முத்திரை

ACKNOWLEDGEMENT.
(On Postal Service.)

பணம் பெற்றுக்கொள்பவர் பெயர். } E. M. Gopalakrishna Kone,
இ. மா. கோபாலகிருஷ்ண கோன்

மணியார்டரின் தொகை (எண்ணுல்) ரூ. 200

பணம் அனுப்புகிறவர் } Ramaswamy Iyengar,
24, Sannadhi St.,
Conjeevaram.

பெயரும் விலாசமும் } ராமசாமி அய்யங்கார்,
24, சன்னதி வீதி, காஞ்சீபுரம்.

Date stamp of the office of payment.

Name-stamp of the date of issue

COUPON.

பணம் அனுப்பு கிறவர் பெற்றுக்கொள்பவருக்கு ஏதாவது சங்கதியிருந்தால் அதை இங்கு எழுதலாம்.

ரூ. 200 அ. 0.

ஐயா,

இந்த இருநூறு ரூபாய்களையும் பெற்றுக்கொண்டு தயை செய்து உடனே என் விலாசத்திற்கு உம்முடைய 12-வது பதிப்பு "ஆங்கில ஆசான்" அல்லது ஆங்கில போதினியை ரயில் மூலம் 100 காபிகள் செலவு இல்லாமல் அனுப்புங்கள்.

இப்படிக்கு
ராமசாமி அயியங்காரீ,
24, சன்னதி தெருவு,
சின்ன காஞ்சீபுரம்.
பணம் அனுப்புகிறவர்.

[ஆங்கில போதினி

405

மணியார்டர் பாரம்—பின்புறம்

406

Received the sum specified on the reverse

Date—23—1—1926

E. M. GOPALAKRISHNA KONE

Signature (in ink) of payee or thumb impression, if payee is illiterate.

Signature of witness to be taken when the payee is illiterate or not known to the post office, and in all cases when payment is made by a village postman or to a pardanashin woman on her own signature.

Signature of witness.

Round M. O. stamp authorising payment.

Paid by me on _____

Signature and designation of officer who paid the amount.

Oblong M. O. stamp on payment.

பின்புறத்தில் கண்டிருக்கும் தொகையை _____ _____
தேதி பெற்றுக்கொண்டேன்.

E. M. Gopalakrishna Kone,

20—9—1934.

பணம் பெற்றுக்கொள்பவர்.
கையெழுத்து இங்கியில் அல்லது
பெருவிரல் ரேகை அடையாளம்.

பணம் பெற்றுக்கொள்பவர் மணியார்டரின் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முன் மணியார்டரிலும் அக்னலெட்ஜ மெண்டிலும் கையெழுத்து செய்து இக்கூபனைக் கிழித்து தனக்கு (பணம் பெற்றுக்கொள்பவர்) வைத்துக்கொண்டு, பாரத்தைத் தபாற் சேவகனிடம் கொடுத்துவிட வேண்டும்.

தபாற் ஆபீஸ்

TELEGRAMS

தந்தி முறைகள்

வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் மிகவும் உபயோகமான தந்திகளைக் கீழே முறையாகக் குறிப்பிட்டிருக்கின்றோம். அத்தந்திகளை நண்பர்கள் சற்றுக் கவனித்துப் படித்துக்கொள்வார்களாயின் பல வேறு விதமான தந்திகளைச் சுலபமாய் எழுதக்கூடும். பிறருதவியில்லாமலே அவைகளைப் படிக்கவுங்கூடும். பொதுமக்கள் தந்தி சேகவனைப் பார்த்தமாத்திரத்திலேயே உணர்ச்சியற்றுப் பெருந் திகிலடைகின்றனர். இது தவறு. பெரும்பான்மையாக வியாபார முறைகளுக்கே தந்திகள் உலாவுகின்றன. அவைகளுடைய உதவியினூற்றூன் பூலோகத்தில் வியாபாரம் நடந்தேறி வருகின்றது. வியாபாரிகள் அதிகக் கணக்கான வார்த்தைகளை உபயோகிக்காதபடி சுருக்கு முறையில் "கோட்" என்ற நயன பாஷையில் சில புஸ்தகங்களை "மேஜட்டு அறிஞர்" கோர்த்துக் கட்டியிருக்கின்றூர்கள். ("A. B. C. 5th Edition") முதலிய கோட் புஸ்தகங்கள் வியாபாரிகளுக்கு மிகவும் பயன்படும். கோட் வார்த்தைத் தந்திகள் எவ்விதம் தயாரிக்கப்பட வேண்டுமென்பது கீழ்க்கண்ட தந்திகளால் இனிது புலப்படும். மற்றொரு விதமான தந்திகளுக்கு "ஸைபர் பாஷை" (Cipher language) என்ற பெயருண்டு. அவைகள் கோட் தந்திகளைப்போல் இரகசியமான அர்த்தங்களை யுள்ளடக்கிக்கொண்டு வியாபாரிகளுக்கும் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கும் அதிக பயன் தருவதாகும். இந்த மாதிரியான தந்திகள் பெரும்

பான்மையாகக் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களால் தான் உபயோகப்படுத்தப்படுகின்றன. பின்னும் மற்றொரு விதமான தந்தியுண்டு. அதற்கு 'பிரஸ் தந்தி' (Press Telegram) என்று பெயர். ஓர் ஊரில் நிகழும் வர்த்தமானங்களைப் பிரதேசங்களி லுள்ளவர்களுக்குத் தெரிவிப்பதற்கான தந்திகளுக்கு அதிகமான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டியது அவசியம். ஆனதுபற்றி மற்றைய தந்திகளுக்கு வாங்கப்படும் கட்டணத்தைவிட மிகவும் சொற்பமான கட்டணம் விதிக்கப்படுகின்றது. அப்படி விதிக்கப்படுகிறதெனினும் இத்தந்திகள் மிகவும் முக்கியமானவைகளானபடியால் தகுந்த கவனத்துடன் தந்தி யதிகாரிகளால் விரைவாகக் கவனிக்கப்படுகின்றன. இம்மாதிரியான தந்திகள் எவ்விதம் தயாரிக்கப்படவேண்டும் என்ற முறைகளையும் சில உதாரணத் தந்திகளால் காட்டியிருக்கின்றோம். மேற் குறிப்பிட்ட தந்திகளை நண்பர்கள் தெரிந்து கொண்டால் போதுமென்று கருதுகின்றோம்.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அனுபவம், எல்லாம் புதிய போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. 80-பக்கங்கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த சஞ்சிகையும் இடையாது. 31000-சந்தாதாரர்கள் உள்ளது. வருஷ சந்தா உள்நாடு ரூ. 1. வெளிநாடு ரூ. 2–0–0. மாதிரி காபி இலவம்.

A Class Prefix } .....Code.....

தந்தி பாராங்கள் **POSTS & TELEGRAPHS**

Inland Telegram.

Stamp. ஸ்டாம்பு.

Office of Origin, Date and Service Instructions.

MADRAS மதராஸ்.

Nothing to be written by the Sender above this line.

Words 20-21 Charge Rs. A. 1 5

H. M.

Sent at.....

To.....

By.....

If this Telegram is to be classed EXPRESS write the class here. ORDINARY

If this telegram is on State business the word STATE should be written in this space.

When a reply is to be prepaid write words "Reply paid" and the amount in the space below. These words are not charged for

TO { Name E M. Gopalakrishna Kone,
Address North Chitrai Street,
Telegraph Office. Madura.

Appadurai's	Marriage	Settled
27th	Inform	Rajagopaul Naidu
Send	five-hundred	expense
start	earliest	

FROM Nagabushanam PLEASE SIGN OVERLEAF

Sender's name :—M. D. Nagabushanam, 50, Nammalwar Street, MADRAS.

[409] தந்திச் சேவைத் தபாற்தலை 409

A Class Prefix } .....Code.....

POSTS & TELEGRAPHS

Inland Telegrams

500

Stamp

ஸ்டாம்பு.

Office of Origin, Date and Service Instructions.	Words 15-16 Charge Rs. A.	H. M. Sent at..... To..... By.....
MADRAS,		
Nothing to be written by the Sender above this line.	0 15	

If this telegram is to be classed EXPRESS write the class here.	Ordinary	If this telegram is on State business the word STATE should be written in this space.

When a reply is to be prepaid write the words "Reply paid" and the amount in the space below. These words are not charged for

TO { Name E. M. Gopalakrishna Kone,
Address North Chitrai Street, Madura
Telegraph Office Madura

Hearty	Congratulation	Results
Out	yourself	elected
unopposed		-
		Nagabushanam

FROM

PLEASE SIGN OVERLEAF.

தந்தி வந்த விபரம்

[தமிழ்

A Class Prefix } .....Code.....

POSTS & TELEGRAMS

Inland Telegrams.

Stamp
ஸ்டாம்பு.

Office of Origin, Date and Service Instructions.	Words 19-20 Charge Rs. A.	H. M.
MADRAS.		Sent at.....
		To.....
Nothing to be written by the Sender above this line.	1 3	By.....

If this Telegram is to be classed EXPRESS write the class here.	Ordinary	If this telegram is on State business the word STATE should be written in this space.	

When a reply is to be prepaid write the words "Reply paid" and the amount in the space below. These words are not charged for

TO { Name E. M. Narayana Kone,
Address North Chitrai Street,
Telegraph Office. Madura.

God	bless	couple
long	life	continued
prosperity	innumerable	fair looking
intelligent	children	
		Rajagopaul Naidu.

FROM

PLEASE SIGN OVERLEAF.

[501

இந்த தந்தி சாதாரண தந்தியாகும். வார்த்தை யொன்றுக்கு ஒரு அணு வீதம் இருபது வார்த்தைகளுக்கும் ஒன்றே கால் ரூபாயாகும். வார்த்தை ஒன்றுக்குப் பதினைந்து எழுத்துக்குமே லிருக்கக்கூடாது. அனுப்புகின்றவருடைய விலாசம் இந்தப் பக்கத்தின் அடியில் எழுதியிருப்பதைப் பார்க்கவும். தந்தி எழுதும்போது அவசியமான வார்த்தைகளே யெழுதாதபடி கவனிக்கவேண்டியது. மேற்கண்ட தந்தியையே அவசரத் தந்தியாக அனுப்ப வேண்டியிருந்தால் வார்த்தை யொன்றுக்கு இரண்டு அணு வீதம் கட்டணம் வாங்கப்படும். சாதாரண தந்தியிலாவது அவசரத் தந்தியிலாவது எந்த ஊரிலிருந்து அது அனுப்பப் படுகின்றதோ அந்த ஊரைக் குறிப்பிக்கும் வார்த்தைக்கும் கட்டணம் விதிக்கப்படுவதில்லை. உதாரணமாக மேற்கண்ட தந்தியில் குறிப்பிட்ட 'மதராஸ்' என்ற வார்த்தைக்குக் கட்டணம் கிடையாது.

CLASS O POSTS & TELEGRAPHS.

Villupuram.	words 14/15	
6	RS. A. 1 9	

Reply Paid. To { Name Kandaswamy
Ads. North Mada Street,
Telegraphic Office Pasumalai

Kuppusami died Seven
O'clock Corpse waiting
RAMANI

Ramani, Near Railway quarters, Arkonam.

CLASS O POSTS & TELEGRAMS

Pasumalai 31	Words 13/12	
	RS. A. 2 12	

TO
Name : Ramani
Address : Near Railway Quarters
Telegraph Office : Arkonam.

Sorry	Starting	Boatmail
Keep	Corpse	Arrival

PADMANABHAN

CLASS O POSTS & TELEGRAPHS

Kumbakonam	Words. 20	
	Rs. A. 1 4	

Reply Paid
TO
Name : Principal Ratnaswami
Address : Pachaiyappa's College
Telegraph Office : Madras

School final 62046	eligible	College-Course
Pray	admit	or
Reply	seat	unavailable

VASUDEVAN

மேற்கண்ட தந்தியில் விலாசதாரருக்கு முன்பணமாக ஒரு சாதாரண தந்திக்குரிய கட்டணத்தைத் தந்தி யனுப்புகின்றவர் ரிப்ளை பெய்ட் "Reply paid" என்ற குறிப்புப் படி செலுத்தியிருப்பது நன்கு விளங்கும். இத்தந்தியைப் பெற்றுக்கொண்ட பசுமலையிலுள்ள விலாசதாரர் தந்திச் செலவில்லாமல் பதில் தந்தியனுப்பலாம். ஆனால் அவர் எவ்வளவு தொகைக்குத் தந்தியனுப்பும்படி விடப்பட்டிருக்கின்றனரோ அதற்குமேல் அனுப்ப முடியாது. சாதாரணமான தந்தி யொன்றுக்கு முக்கால் ரூபாய்க்குக் குறைந்து (அதாவது) பன்னிரண்டு வார்த்தைகளுடைய கட்டணத்துக்குக் குறைந்து வாங்குவதில்லை யாகையால் பன்னிரண்டு வார்த்தைகளுக்குமேல் பதில்("Reply paid") ரிப்ளைபெய்ட் முறையில் அனுப்பவேண்டுமானால் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு அணா வீதம் அதிகமாய்க் கட்டவேண்டும். உதாரண பதில் தந்தி பின் வருமாறு.

CLASS O POSTS & TELEGRAPHS

Madras 6	Words. 17/18 Rs. A.	

To { Name : Pakkiriswami Pillai
Address : Sembanar Kovil
Telegraph Office : Near Mayavaram }

Venkataraman	arrested	ten thousand
Stolen	treasury	Help
indispensable		

KRISHNAMOORTHY

மேற்குறித்த தந்தியில் விலாசதாரர் தந்தியாபீஸ் இல்லாத ஒரு நாட்டுப்புறத்திலிருந்தால் சமீபத்திலிருக்கிற தந்தியாபீசிலிருந்து விலாசதாரர் இருக்குமிடத்திற்குத் தந்தியெடுத்துக்கொண்டு போவதற்காகச் செலுத்தப்படும் கூலி வசூலிக்கப்படுகிற முறை கண்டிருக்கின்றது. (Service Instruction) என்ற பிரிவில் இன்ன கூலி யென்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கூலியைத் தந்தி டிபார்ட்மெண்டார் பெற்றுக்கொண்டு விலாசதாரரிடம் அந்தத் தந்தியைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

CLASS X POSTS & TELEGRAPHS

Thiruparankunram.	Words. 16
L. F. Trans Dist.	Rs. A. 4 10

To { Name : Veeraragavachariar
Bommivadu Chatram
Telegraph Address Nellore

Your	wife	dangerously
ill	start	immediately

RAJAGOPALACHARI

மேற்கண்ட தந்தி மிகவும் முக்கியமானதொரு தந்தியாகும். திருப்பரங்குன்றத்தில் ஒருவருக்கு உடம்பு அதிக அபாயகரமான நிலையில் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அந்த வியாதியஸ்தருடைய உறவினரொருவர் நெல்லூரிலிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். திருப்பரங்குன்றத்துத் தபாலாபீஸ் மூடியிருந்தால் அந்த முக்கிய தந்தியை அவசர தந்தியாக அனுப்பலாம். அப்படியனுப்பும்போது மூடியுள்ள திருப்பரங்குன்ற தந்தியாபீஸ் சிக்னலருக்கு ஒரு ரூபாய் லேட் பீ (Late fee) என்ற கட்டணத்தைச் செலுத்தவேண்டும். அந்த ஆபீஸ்காரர் அவசர விகிதத்தில் அந்தத் தந்தியைப் பெற்றுக்கொண்டு மதுரை மூலமாகவும் சென்னை மூலமாகவும் நெல்லூருக்கு அனுப்பவேண்டும். இந்தத் தந்தி யடிக்கப்படுகிற நேரத்தில் மதுரைத் தந்தியாபீஸ் மூடியிருந்தால் அத் தந்தியாபீஸ்காரருக்கும் (Late fee) விகிதம் கட்டினால் அவர்கள் அந்த ஆபீஸைத் திறந்து அதைத் திருப்பரங்குன்ற ஆபீஸிடத்திலிருந்து பெற்றுக்கொண்டு சென்னை ஆபீஸுக்கு அடித்துவிடுவார்கள். சென்னை ஆபீஸ் 24 மணி நேரமும் திறந்திருப்பதால் அதற்கு லேட் (f)பீ விகிதம் கட்டப்படுவதில்லை. திருப்பரங்குன்றத்துக்கும் மதுரைக்கும் இரண்டு லேட் (f)பீக்கள் கட்டிவிட்டுச் சென்னையை யடைந்த அவசரத் தந்தி நெல்லூருக்குப் போகவேண்டுமல்லவா? அந்தச் சமயத்தில் நெல்லூராபீஸ் மூடியிருக்கும் பட்சத்தில் அதற்கும் ஒரு லேட் (f)பீ விகிதம் செலுத்தப்படுமாயின் நெல்லூர் ஆபீஸ்காரர் தமது ஆபீஸைத் திறந்து

அந்தத் தந்தியைப் பெற்றுக்கொண்டு விலாஸதாருக்கு அனுப்பிவிடுவார்கள். எனவே, தந்தி ஆபீஸ்கள் மூடியிருக்கிற காலத்தே தந்திகளை யனுப்பவேண்டுமாயின் முதலில் அத்தந்திகள் அவசரத் தந்திகளாக அனுப்பவேண்டும். அத்தந்தி போகிற ஆபீஸ்கள் மூடப்பட்டிருக்கின்றனவாயின் ஒவ்வொரு ஆபீஸுக்கும் லேட் (f)பீ (Late fee) கட்டித் தந்தியை மேற்செலுத்திவிடலாம். லேட் (f)பீ (Late fee) கட்டணம் எப்போதும் ஒரு ரூபாயென்று மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

CLASS O POSTS & TELEGRAPHS

	Words.	
Karachi. Six Address.	Rs. 3	A. 11

To
Name : Diamond Cochin Himalaya Cochin
Address : Katab Cochin Singh Cochin
Telegraph Office : Plantain Cochin
Bell Cochin

Kadalai first rate 10/6 pepper superior limited
6/8 Thuvarai Second 9/7 99/8 inferior Market pressure
9/2 Bengal gram Coriander 25/2 85/2 stock merchants

RAMTOOLA

மேலே குறிப்பிட்ட தந்தியில் ஒரு சமாசாரத்தை ஒரே ஊரில் உள்ள பல வியாபாரிகளுக்கு அனுப்பும் விதம் எழுதப்பட்டிருக்கின்றது. அந்தத் தந்தியானது வியாபாரிகளுக்கு அதிக பயனைத் தருவதாகும். கராச்சியிலுள்ள ஒரு பெருத்த வியாபாரி கொச்சியிலுள்ள பல வியாபாரிகளுக்குத் தம்மிடம் புதிதாக வந்துள்ள சரக்குகளையும் அவைகளுடைய விலை விகிதங்களையும் ஒரே தந்தியில் வெளியிட அனுகூலமாயிருக்கிறது. சாதாரணத் தந்தியாக இருந்தால் பொதுவாக எல்லா வார்த்தைகளுக்கும் ஓர் அணா வீதம் மொத்தம் கணக்கிட்டு நூறு வார்த்தைகளுக்கு உட்பட்டு இருந்தால் விலாசமொன்றுக்குக் கால் ரூபாய் வீதம் விகிதங்கள் கட்டப்படவேண்டும். மேற்கண்ட தந்தியில் எல்லா வார்த்தைகளுமடங்க 35 வார்த்தைகளாகின்றன. இவைகளுக்குக் கட்டணம் 4-6-0 ஆகும். ஆறு விலாசங்களுக்கும் $6 \times 8 = 48$ அணா, அதாவது ரூ. 3-0-0 ஆகும். இவை இரண்டு கட்டணங்களுமாக மொத்தம் ரூ. 7-6-0 ஆகின்றது. இவ்விதமாகப் பல விலாச தந்திகள் ஒரு விலாச தாரிடமிருந்து அனுப்பக்கூடும் என்பது நன்கு விளங்கும்.

அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை.

இது ஓர் அபூர்வமான துப்பறியும் நாவல். 350-பக்கங்கள் கொண்டது. இக்கதாநாயகியின் குணங்கள் யாவராலும் பின்பற்றக்கூடியது. லாவண்யமான கதாநாயகியின் காதற்றிறமும், அவளது கற்பின் உயர்வும், அவளை மாற்றி மணமாட மற்றவர் செய்யும் சூழ்ச்சிகளும் வெகு உன்னதமாயிருக்கும். கதாநாயகியாகிய அங்கயற்கண்ணியின் கற்பை வாசிக்க வாசிக்க நமது சகோதர சகோதரிகளுக்கு மிக்க ஆச்சரியத்தையும் நன்னடக்கையையும் உண்டுபண்ணும். இதன் விலை ரூ. 1-12-0.

CLASS O POSTS & TELEGRAPHS

Madras.	Words. 10 Rs. A. 0 12.	
To	Camel Akyab	
Oztvvrhcda	Skryzxoght	Fobrhcmrdx
Tromkndgsk	Rmnotfdgxp	Lrtmxpqida
Goxtxydnrp	Morg	Fropst

கோட் தந்திகள்.

இந்தத் தந்திக்குக் கோட் வார்த்தை தந்தியாகும். மறைவான அர்த்தங்களையுடைய வார்த்தைகளுக்குக் கோட் (code) வார்த்தைகளென்று பெயர். மற்ற தந்திகளுக்குரிய விதிகளே இத்தந்திக்குமாகும். இம்மாதிரியான கோட் தந்திகளினால் அதிக லாப முண்டு. வார்த்தைகளும் குறைகின்றன. அதனால் சார்ஜும் குறைகின்றது. சாதாரணமான தந்தியாகக் கொடுத்தால் மற்றவர்களுக்கு அதன் பொருள் தெரிந்துவிடும். வியாபார ரகசியம் வெளியாகிவிடும். இரகசியம் வெளியாகாதிருக்க கோட் தந்திகள் அனுகூலமாக இருக்கின்றன.

POSTS & TELEGRAPHS

To		
Name	Panneer	
Address	Rangoon	
0000	3238	4486
7071	8237	5948
6978	4354	3237
6004	5968	0002

வைபர் தந்திகள்

இந்தத் தந்தியில் வார்த்தைகளை உபயோகிப்பதற்குப் பதிலாகப் பரிபாஷையாக நம்பர்களை யுபயோகப்படுத்தலாம். இது சாதாரணமாகக் கவர்ன்மென்ட் அதிகாரிகளால் உபயோகிக்கப்படுகின்றது. இன்னின்ன நெப்பர் இன்னின்ன நெம்பருக்குப் பக்கத்தில் வந்தால் இன்னின்ன பொருளாகும் என்று அர்த்தங்கொண்டு விளங்கும். இவ்விதத் தந்திகளால் தந்தி விகிதச்செலவு குறைவதுமன்றி விஷயங்களும் யாவர்க்கும் புலனுகாதவாறு காணும். அனுப்புகிறவரும் விலாசதாரும் மாத்திரம் அந்தத் தந்தியின் உட்பொருளை அறிந்துகொள்ளலாம். இப்பாஷைகளையுடைய சில தந்தி புஸ்தகங்கள் வியாபாரங்களுக்காக விற்பனையாகின்றன. அதை வாங்கிப் பார்த்தால் இம்முறையை எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

CLASS M. O. POSTS & TELEGRAPHS

Rangoon Post Office	Words. 18/25 Rs. A.	

To { Name Madras. Address / Telegraph Office

Two hundred	Krishnamoorthy	68th Street
M S 6872	E. M. Gopalakrishna	Kone
Bookseller	Broadway Post	Send hundred
copies	Angila Asan	

மணியார்டர் தந்திகள்.

மேற்கண்ட தந்தியால் எவ்விதம் ஒருவர்க்கொருவர் தந்தி மணியார்டர்கள் அனுப்பப்படலாம் என்பது தெரியக்கூடும். இரங்கூனிலுள்ள 68-வது தெருவில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி சென்னையிலுள்ள புத்தக வியாபாரிகளுக்கு தந்தி மணியார்டர் அனுப்பவேண்டுமானால் அந்த கிருஷ்ணமூர்த்தி முதலில் ரங்கூன் தந்தியாபீசுக்குப் போகாமல் ரங்கூன் தபாலாபீசுக்குப் போய் ரூபாய் இருநூற்றையும் இத் தந்திக்குரிய கட்டணத்தையும் மணிஆர்டர் கமிஷனையும் சேர்த்துச் செலுத்திவிட்டால் அந்தத் தபாலாபீஸ்காரர் மேற் குறித்த விதமாகத் தயார் செய்து தந்தியாபீசுக்கு அனுப்புவார்கள். முதலில் அந்த ஆபீசினுடைய சீரியல் தொடர்ச்சி நெம்பரும், இதன் பின்னர் அனுப்பப்படுகிற தொகையும்,

அதன் பின்னர் ஏதாகிலும் விஷயமிருந்தால் அவ்விஷயம் எழுதப்பட் டிருக்கும். அத்தந்தி ரங்கூன் தந்தியாபீசி லிருந்து சென்னைத் தந்தியாபீசுக்கு அடிக்கப்பட்டதும் சென்னைத் தந்தியாபீசுக்காரர்கள் சென்னைத் தபாலாபீசுக் காரர்களுக்கு அனுப்பிவிடுகின்றார்கள். அவர்கள் உடனே அத்தந்தியையும் அதில் குறிப்பிட்டுள்ள ரொக்கத்தையும் ஒரு தபால்காரனிடம் விலாசதாருக்கு அனுப்பிவிடுகின்ற னர். விலாசதாராகிய இ. மா. கோபாலகிருஷ்ண கோன் பணத்தைப் பெற்றுக்கொண்டு அடுத்த தபாலில் தம்மிட முள்ள 'ஆங்கில ஆசான்' என்ற புத்தகத்தை இரங்கூனி லுள்ள கிருஷ்ணமூர்த்திக்கு அனுப்ப நேருகிறது. ஆகை யால், இத்தகைய தந்தி இப்புஸ்தகத்தை வாசிப்பவர்களுக்கு மிகவும் பயன்படுவதன்றி இம்மாதிரியான தந்திகளை இப் புஸ்தகத்தை வெளியிடுகிற இ. மா. கோபாலகிருஷ்ண கோனுர் பெறுவாரென்றும் கருதுகின்றோம். இம்மாதிரி தந்தி மணியார்டர் செய்தால் நேரம் குறைகிறது.

பதினெட்டாம் பாஷை என்னும் அபூர்வ தமிழ் பரிபாஷை.

இதுகாறும் வெளிவராத தமிழ் நூதனம். அபூர்வ ரகசிய பாஷை 15-நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேச ஆரம்பித்துவிடலாம். தந்தியும் அனுப்பலாம். கடிதங் களும் எழுதலாம். இந்தப் பாஷையை டயிரியில் எழுதினால் எவருமே படிக்க முடியாது. வியாபார ரகசியங்களும், விலை ரகசியங்களும் இந்தப் பாஷையில் குறித்துக்கொண்டால் வெகு நன்முக வர்த்தகம் நடத் தலாம். விலை அணு 8.

கெடியாரத்தில் போட்டிருக்கும் எண்கள் அடியில் வருமாறு:

I	1	VII	7
II	2	VIII	8
III	3	IX	9
IV	4	X	10
V	5	XI	11
VI	6	XII	12

இந்த எண்களுக்கு ரோமன் எண்கள் என்று பெயர்.

L=50	XL=40
C=100	LX=60
D=500	XC=90
M=1000	CX=110

ஒன் ஒ'க்ளாக் (One o' clock)=ஒரு மணி

குவார்ட்டர் பாஸ்ட் டூ (Quarter past two)=இரண்டேகால்

ஆப் (f)பாஸ்ட் த்ரீ (Half past Three)=மூன்றரை

த்ரீ குவார்ட்டர் (p)பாஸ்ட் த்ரீ=(Three Quarter past Three)=மூன்றே முக்கால்

ஸெவன் ஒ'க்ளாக் (Seven o'clock)=ஏழுமணி

ஸிக்ஸ்-டென் (Six-ten)=6-10

எயிட்-ட்வெண்ட்டி (Eight-twenty)=8-20

கடிதங்கள்

கடிதத்தின் மேல்விலாசம் சிறுவர்களுக்கு எழுதும் போது (மாஸ்டர்) Master என்றும், கல்யாண மாகாத பெண்களுக்கு எழுதும்போது (மிஸ்) Miss என்றும், கல்யாணமான ஸ்திரீகளுக்கு எழுதும்போது (மிஸெஸ்) Mrs. என்றும், யாதொரு பட்டமுமில்லாத பெரியவர்களுக்கு (ம-ரா-ரா-ஸ்ரீ) M.R.Ry. என்றும், பட்டம் பெற்றவர்களுக்கு அவர்களின் பட்டத்தின்படி (ராவ்பகதூர்)

Rao Bahadur, (திவான் பகதூர்) Dewan Bahadur. (ராஜா சர்) Raja Sir என்றும் எழுதவேண்டும். பிறகு அவர்களது பெயரை எழுதி அதன் பக்கத்தில் அவர்களுக்கேற்றவாறு (அவர்கள்) Avergal, (காரு) Garu என்று எழுதவேண்டும். ஆங்கிலேயர்களுக்கு எழுதும்போது (எஸ்கொயர்) Esquire என்று அவர்களுடைய பெயரின் கடைசியில் எழுதவேண்டும். பேருக்கு முடிவில் இதை எழுதினால் முதலில் M.R.Ry. அல்லது Mr. என்று எழுதக்கூடாது. வியாபாரக் கம்பெனிகளுக்கு எழுதும் போது Messrs என்றும் ஆங்கில அரசர்களுக்கு His Majesty என்றும், இந்திய அரசர்களுக்கு His Highness என்றும், ஜகத் குருக்களுக்கு His Holiness என்றும், கவர்னருக்கு His Excellency என்றும் எழுதவேண்டும். விலாசதார் வேறு ஒருவருடைய வீட்டில் குடியிருந்தால் (கேர் ஆப்) c/o என்று எழுதி அவர் யாருடைய வீட்டில் குடியிருக்கிறாரோ அவருடைய பெயரை எழுதவேண்டும். உதாரணமாக: M. நாராயணசாமி முதலியார் என்ற ஒரு B.A., B.L., பாஸ் செய்த லாயர் C. V. Gurusamy Pillai என்ற M.B. & C.M. பாஸ் செய்த ஓர் டாக்டர் வீட்டில் தங்கியிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவருக்குக் கடிதமெழுதும்போது:

To

M.R.Ry.

M. Narayanasami Mudaliar Avl., B A., B.L.,

c/o

M.R.Ry. C. V. Guruswamy Pillai Avl., M B & C. M. என்று எழுதவேண்டும்.

c/o என்பது care of என்று கூறும் ஆங்கிலச் சொற்களின் சுருக்கம். அவற்றின் பொருள் 'மேல் பார்த்து' என்று ஆகும்.

இவை யெல்லாம் எழுதிய பின் அவ்விலாசதாரின் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

மாதிரிக்காகச் சில விலாசங்கள் கீழே எழுதப்பட்டிருக்கின்றன.

To

M.R.Ry.

V. R. Ramaswamy Mudaliar Avl.,

Head Clerk,

Messrs. Lawrence & Co., Ltd.,

Bombay.

To

A. M. Joseph Esquire.

c/o M.R.Ry. A. Kothandapani Naidu,

17, Municipal Street,

Coonoor.

To

Mr. Ratnaswamy, B.A.,

History Professor,

Wesley College,

Rangoon.

To

Miss. Ratnabai

Student,

Junior Intermediate,

Women's College,

Madras.

கலியாணமான பெண்களுக்கு விலாசம் எழுதும்போது Mrs, என்று போட்டு அத்துடன் பெண்களின் பெயரையாவது அவர்களுடைய கணவர்களின் பெயரையாவது எழுதலாம். சாதாரணமாக ஷண்முக முதலியார் என்பவருடைய மனைவி துங்காபாய் அம்மாள் என வைத்துக்கொள்வோம். அப்போது துங்காபாய் அம்மாளுக்குக் கடிதமெழுதுவதா யிருந்தால்

Mrs. Thungabai Ammal என்று எழுதவேண்டும். அல்லது Mrs. Shanmuga Mudaliar என்று எழுதினாலும் ஷண்முக முதலியார் மனைவி எனப் பொருள்படும்.

இதே விதமாக விவாகமாகாத பெண்களுக்குக் கடிதம் எழுதும்போது Miss என்று எழுதி அத்துடன் அப்பெண்ணின் பெயரையாவது, அவளுடைய தந்தையின் பெயரையாவது எழுதலாம். உதாரணமாக:—முனிசாமி முதலியார் என்பவருக்குக் கனகாம்புஜம் என்ற ஒரு பெண் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பெண்ணிற்குக் கடிதம் எழுதுவதா யிருந்தால் Miss. Kanakambujam என்றாவது, Miss. Muniswami Mudaliar என்றாவது எழுதலாம்.

To

Master Ratnavelu
s/o M. R. Ry. A. Ramalinga Mudaliar Avl.
2-nd Assistant Surgeon,
Hassan.

மேலே எழுதிய விலாசத்தில் Master என்றதால் அத்துடன் எழுதப்பட்ட பெயர் இரத்தினவேலு என்பவன் சிறு பிள்ளை (விவாகமாகாதவன்) என விளங்கும். ஆயினும் Master—மாஸ்டர் என்று எழுதியிருப்பதால் அத்துடன் எழுதப்பட்டிருக்கும் பெயராகிய ம-ரா-ரா-ஸ்ரீ ஏ. இராமலிங்கமுதலியாருக்கு அவன் பிள்ளை என்பதும் புலப்படும். ஏனெனில் s/o என்றால் son of அதாவது இன்னவருடைய பிள்ளை என்று அர்த்தமாகும்.

To

His Excellency
The Governor of Madras,
Madras.

To

His Highness
The Maharaja of Mysore,
Mysore.

To

His Majesty
King George V,
London.

To

The Honourable
W. Janes. C. S. J.,
Madras.

To

Rai Bahadur
A. Ramaswami Mudaliar Avl.,
Tuticorin.

To

Messrs. Higginbothams Ltd,
Book-sellers,
Madras.

To

The Editor
"*Amirtha Gunabodhini*"
158-A, Broadway, Madras.

Sriman E. M. Gopalakrishna Kone Avl,
Publisher and Bookseller,
158-A, Broadway, Madras.

கடிதங்கள் எழுதும் முறை:—

உத்தியோகத்திற்கு மனு

Application for an appointment

(I)

Madras
27th May 1934

To

The Manager,
Messrs Crompton & Co, Ltd.,
Madras.

Sir,

Being given to understand that there is a vacancy of a clerk's post in your office, I beg to offer myself as a candidate for the same.

As regards my qualification I beg to state that I have studied up to V Form and since my parents are poor I could not continue my studies.

I beg you to kindly favour with the appointment.

I am of good character as you will see from the enclosed certificates.

I beg to remain,
Sir,
Your most obedient servant,
Kuppuswamy Naicker,
12, Lala Kuttai Street, Chintadripet, Madras.

---

(1) மதராஸ்,
24-5-1934.

மானேஜர்,
மெஸர்ஸ் க்ராம்டன் அண்டு கம்பெனி, லிமிடெட்,
மதராஸ்.

ஐயா,

தங்களுடைய ஆபீஸில் குமாஸ்தா வேலை காலியாயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதற்கு நான் ஒரு அபேட்சகனாக நிற்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஐந்தாவது பாரம் வரையில் வாசித்திருக்கின்றேன். என் தாய் தந்தையர் ஏழைகளாயிருப்பதால் அதற்கு மேல் வாசிக்க என்னால் முடியவில்லை. தயவுசெய்து காலியாயிருக்கும் மேற்படி உத்தியோகத்தை எனக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள ஊழியன்,
குப்புசாமி நாயகர்

12, லாலாகுட்டை தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

புஸ்தகம் இரவல் கேட்டல்.

Letter asking to lend a book

(2) Madras,
17-3-1934.

My dear Krishnamoorthy,

Will you kindly lend me your book entitled Shakespeare's "Hamlet" as I should like to read it. I shall take great care to it and return the same in a few days.

Yours affectionately,
M. V. Vasudevan.

(2)

சென்னை,
17-3-1934.

என்! அன்பார்ந்த கிருஷ்ணமூர்த்திக்கு,

தயை செய்து உன்னிடமுள்ள ஷேக்ஸ்பியர்ஸ் "ஹாம்லெட்" என்னும் பெயரினையுடைய புஸ்தகத்தை எனக்கு இரவலாக அனுப்பிவைக்கவும். நான் அதைப் படிக்க விரும்புகிறேன். சில தினங்களில் நான் அதை மிகவும் ஜாக்கிரதையோடு உனக்குத் திருப்பி யனுப்பி விடுகிறேன்.

உன் அன்புள்ள,
——— மா. வீ. வாசுதேவன்.

(3)

Madura
23-5-1934.

My dear Leela,

May I trouble you to kindly let me have the loan of your 'Angayarkanni' by Mr. A. R. Madhavaraya Mudaliar, for a few days as I am very anxious to read it? I shall be careful with the book and return the same to you as soon as I am finished with it.

Yours very sincerely,
——— Dhanammal.

(3)

மதுரை
23-5-1934.

என் அன்பார்ந்த லீலா,

உன் வசமிருக்கும் அ. ரா. மாதவராய முதலியார் எழுதிய "அங்கயர்கண்ணி" என்னும் நாவலை எனக்குச் சில தினங்களுக்கு இரவலாகக் கொடுக்க முடியுமா என்பதைத் தெரிவிக்கவும். நான் அதை வாசிக்க மிகவும் ஆவலுடையவளா யிருக்கிறேன். அதை நான் படித்து முடித்தப் பிறகு ஜாக்கிரதையாக உனக்குத் திருப்பி யனுப்பிவிடுகின்றேன்.

உன் விஸ்வாசமுள்ள,
தனம்மாள்.

(4) Madurantakam,
17-3-1934.

My dear Cunniah Raj,

I am very happy to let you have the book of "*Ambalavanan*". You can have it as long as you wish as I have no time to read it for sometime. Hoping you are doing well and with kind regards.

I remain
Yours faithfully,
Krishnamoorthy.

---

(4) மதுராந்தகம்,
17-3-1934.

என் அன்பார்ந்த கன்னையய்ய ராஜு,

உனக்கு "அம்பல வாணன்" என்னும் புஸ்தகத்தை இரவலாகக் கொடுப்பதற்கு நான் சந்தோஷ முடையவனு யிருக்கிறேன். எனக்குச் சில காலம் வரையில் வாசிப்ப தற்கு நேர மிராதாகையால் அப் புஸ்தகத்தை உனக்கு விருப்பமான காலம் வரையில் நீ வைத்திருக்கலாம். நீ சுகமாய் இருக்கிறாய் என்று நான் பட்சத்துடன் நம்பு கிறேன்.

உன் எச்சரிக்கையும்
அன்புள்ள,
கிருஷ்ணமூர்த்தி.

பதில்—Reply

(5) Rangoon
10-6-34.

My dear Dhanammal,

Regret to inform you that I am unable to lend you the book you require. I have got a copy of "***Manickavalli***" with me which I believe will be equally well to occupy your leisure hours for a few days. I shall send the same if you want.

Truly yours,
Leelavathy.

---

(5) ரங்கூன்,
10-6-34.

என் அன்பார்ந்த தனம்மாளுக்கு,

தாங்கள் கேட்ட புஸ்தகத்தைக் கொடுக்க முடியா தென்று எழுத நேர்ந்தமைக்காக வருந்துகிறேன். நீ கேட்ட புஸ்தகத்திற்குச் சமானமான "மாணிக்கவல்லி" என்னும் ரசமுள்ள நாவலொன்று என்னிடம் இருக் கின்றது. சில நாளைக்கு உங்களுக்கு ஒழிந்த நேரங்களில் படிப்பதற்கு அது உதவுமென்று நினைக்கிறேன். உங்களுக் குத் தேவையானால் அதை நான் அனுப்பி வைக்கிறேன்.

உமது அன்புள்ள,
லீலாவதி.

Grove Villa,
(6) Bangalore.
16—I—34

My dear Amir,

I am very sorry I cannot let you have the book you ask for, as I require it for my own use just now. Sultan Mohideen, who had left the college, will I think let you have his copy if you ask him. Trusting you will excuse my inability to oblige you and with best wishes.

I am,
Very sincerely yours,
Abdulla.

குரோவ் வில்லா,
(6) பெங்களூர்.
16-1-34.

என் அருமை வாய்ந்த அமீர்,

நீ கேட்ட புஸ்தகம் எனக்குத் தற்காலம் தேவையா யிருப்பதால் நான் அதை உனக்குக் கொடுக்க முடியாததற் காக மிகவும் விசனிக்கிறேன். இப்பொழுதுதான் சுல்தான் முகைதீன் காலேஜை விட்டுவிட்டார். அவரைக் கேட்டால் அவருடைய புஸ்தகத்தை அவர் உனக்குக் கொடுப்பார். நான் உனக்குக் கொடுத்து உதவ முடியாமைக்கு மன்னிப் பாயாக.

உனது விஸ்வாசமுள்ள,
அப்துல்லா.

(7) Madras,
27-8-34.

My dear Linganna,

I received your letter this morning in which you ask me for the loan of my ***Telugu*** "***Angila Asan***". I am sorry I cannot oblige you as I object on principle to lending books. I have lost so many books lending them and so I have been obliged to make up my mind not to lend any book to any one. As a matter of fact I have refused to lend books to several of my friends already and you know, it would not be fair on my part to refuse some and oblige others. Hoping you will not misunderstand my reason for not letting you the book.

I remain,
Yours sincerely,
M. Varadarajalu Thambiran.

---

(7) சென்னை,
27-8-34.

என் அன்பார்ந்த லிங்கண்ணனுக்கு,

நான் இன்று காலையில் உன் கடிதம் வரப்பெற்றேன். அதில் நீ என்னுடைய தெலுங்கு "ஆங்கில ஆசானை" இரவலாகக் கேட்டிருக்கிறாய். நான் புஸ்தகத்தை இரவல் கொடுக்கும் வழக்கமுடையவனல்ல. ஆதலால், அதை உனக்குக் கொடுக்க முடியாததைப்பற்றி விசனிக்கிறேன். நான் இரவல் கொடுத்து எத்தனையோ புஸ்தகங்களைத் தொலைத்துவிட்டேன். ஆகையால், இனி யாருக்கும் புஸ்தகத்தை இரவல் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். இதுவரை

யில் புஸ்தகத்தை இரவல் கேட்ட நண்பர்களுக்கெல்லாம் நான் இல்லையென்று சொல்லிவிட்டேன். அதுவும் உனக்குத் தெரியும். சிலருக்கு அபபடிச்சொல்லி வேறு சிலருக்குக் கொடுப்பது நன்றுயிராது. நீ கேட்ட புஸ்தகத்தை நான் கொடுக்காமையினல் என் கருத்தை நீ வேறுவிதமாக அர்த்தம் செய்துகொள்ள மாட்டாய் என்று நான் நம்புகிறேன்.

உனது விஸ்வாசமுள்ள,
மு. வரதராஜுலு தம்பிரான்.

புஸ்தகத்தைத் திருப்பிக் கொடுத்தல்.
Returning the Book

(8) Madras,
27-8-34.

Dear Narayana Kone,

I herewith return the book you lent me sometime ago. Many thanks for your ready compliance with my request for the loan of it. I hope I have not kept it too long.

I am,
Yours truly,
Nagabushanam.

---

(8) சென்னை,
27-8-34.

பிரியமுள்ள நாராயணகோன்,

இக் கடிதத்துடன் நீ எனக்குச் சில காலத்திற்கு முன் இரவலாகக் கொடுத்த புஸ்தகத்தை அனுப்பியிருக்கிறேன். நான் கேட்டவுடன் அதை நீ எனக்குக் கொடுத்தமைக்காக உனக்கு அநேக வந்தனம் செலுத்துகிறேன். அதை நான் வெகு காலம் வைத்திருக்க வில்லையென்று நம்புகிறேன்.

உன் உண்மையுள்ள,
நாகபூஷணம்.

(9) Kalavai.
25-9-34.

My dear Krishnaswami Raju,

I am sorry I kept your book long. I could not avoid the delay as I had been to Bangalore to spend a week of my holidays with my uncle and could read it only after returning home. I send it by my friend and hope you will accept this apology for the delay. I hope you spend a happy holiday and that you are quite ready for office once again. With kind regards.

I am,
Yours sincerely,
L. Arimuthu Nayagar.

---

(9) கலவை,
25-9-34.

எனது கிருஷ்ணசாமிராஜு,

நான் வெகுநாளாக உன் புஸ்தகத்தை வைத்துக்கொண் டிருந்ததைப்பற்றி வருந்துகிறேன். என்னுடைய விடுமுறை நாட்களில் ஒரு வாரத்தைக் கழிப்பதற்காக நான் என் சிறிய தகப்பனாரோடு பெங்களூருக்குப்போய் இருந்தேன். திரு ம்பிவீடு வந்தபிறகே வாசிக்க முடிந்தது. அதை நான் என் நண்பர் மூலமாக அனுப்புகிறேன். தாமதத்திற்கு மன் னித்துப் பெற்றுக்கொள்ளவும். நீ உன் விடுமுறை நாட் களைச் சந்தோஷமாகக் கழித்து மறுபடியும் ஆபீசுக்கு போகத் தயாராயிருக்கிறா யென்று நம்புகிறேன்.

உனது விஸ்வாசமுள்ள,
எல். ஆரிமுத்து நாயகர்.

பணம் கடன் கேட்டல்

Asking a loan of Rupees

(10) Perambur,
27-10-34.

Dear Sir,

I have a great favour to ask you which you will be able to grant. Do you think you can spare me rupees five for a week? I have not received my remittance from home yet, but I am daily expecting it and shall punctually reply you on receiving it. I feel very reluctant to make this request and the only extreme urgency to the case induces me to do so.

Yours very sincerely,
M. M. Elumalai Pillai

பெரம்பூர்,
27–10–34

அன்புள்ள ஐயா,

நான் உங்களிடம் ஒரு உதவியை நாடுகிறேன். அவ் வுதவியை நீங்கள் செய்யக்கூடுமென்று நம்புகிறேன். ஒரு வார கெடுவில் நீங்கள் ஓர் ஐந்து ரூபாய் எனக்குக் கொடுக்க முடியுமா? என் வீட்டிலிருந்து எனக்கு இன்னும் மணி யார்டர் வரவில்லை. ஒவ்வொரு தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். வந்தவுடன் கொடுத்துவிடுகிறேன். இவ்வாறு நான் தங்களைக் கேட்கக் கூசுகின்றேனெயினும் சந் தர்ப்பமும் அவசரமும் கேட்கும்படி செய்கிறது.

உங்கள் விஸ்வாசமுள்ள,
மழுவை. எம். ஏழுமலைப் பிள்ளை.

(11) Viyasarpadi,
26-10-34

My dear sir,

Will you be so good as to let me have a loan of Rupees one hundred for six months at the end of which time I promise faithfully to return the same.

I am obliged to ask you for the loan of this amount owing to unforeseen difficulties into which I have fallen on account of continued illness in my family.

You know I never trouble my friends for favours and I trust you will believe when I say nothing but absolute necessity would have made me ask you this favour which I hope you will be able to do me. If however, you will be inconvenienced by lending me the money, do not trouble yourself as I would not like to put you in trouble by obliging me.

I am,
Yours sincerely,
Varadarajalu Nayagar

---

(11) வியாசர்பாடி,
20-10-34.

எனது அருமை ஐயா,

தாங்கள் தயவுசெய்து எனக்கு ஆறுமாத தவணையில் நூறு ரூபா கடனுகக் கொடுப்பீர்களானுல் ஆறுவது மாதக் கடைசியில் நான் அதைத் தங்களுக்குத் திருப்பிக்கொடுத்து விடுகிறேன்.

என் குடும்பத்தில் எதிர்பாராது நேரிட்ட நோய் தொந்தரவினால் ஏற்பட்ட கஷ்டத்தினால் இந்தத்தொகையை நான் சிநேகிதர்களைக் கேட்கும்படி நேர்ந்தது. நான் சிநேகிதர்களிடம் உதவிக் கெதிர்பார்த்து அவர்களுக்குத் தொந்தரவு விளைவிப்பவனல்ல என்பது உங்களுக்குத் தெரிந்ததே. என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை யுண்டாகுமாகையால் நான் அதிகமாகச் சொல்லவேண்டிய தில்லை. முற்றிலும் அவசியம் நேரிட்டபடியினால்தான் நான் தங்களைக் கேட்டேன். தாங்கள் எனக்கு இந்த உதவியைச் செய்ய முடியுமென்று நான் நம்புகிறேன். ஆயினும், மேற் கண்ட தொகையைக் கொடுக்க உங்களுக்குச் சௌகரிய மில்லாவிட்டால் அதற்காக நீங்கள் கஷ்டப்படவேண்டாம். அவ்வகையில் என்னால் உங்களுக்குக் கஷ்டமுண்டாக நான் பிரியப்படமாட்டேன். தொந்தரவுக்கு மன்னிக்கவும்.

தங்கள் விஸ்வாசமுள்ள,
எம். வரதராஜுலு நாயகர்,
வியாசர்பாடி.

அதற்குப் பதில்—Reply to it

(12) Mysore,
20-10-34.

My dear Varadarajulu,

I have just received your note asking for the loan of rupees one hundred and it gives me a great pleasure to see that it lies in my power to oblige to a sincere friend as yourself. I enclose a cheque upon the Imperial Bank of India for the above sum and hope it will reach you in time for your needs. Believe me to be as ever.

Yours faithful friend,
A. R. Arunachalam.

(12)

மைசூர்,
26-10-34.

எனதருமை வரதராஜுலு,

நீ எனக்கு கடனாக நூறு ரூபா வேண்டுமென்று எழுதிய கடிதம் இப்பொழுதுதான் கிடைத்தது. உன்னைப் போன்ற உண்மையான நண்பனுக்கு உதவி செய்யக்கூடிய சக்தி எனக்கிருந்ததைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இம்பீரியல் பாங்க் செக் ஒன்று ஷே தொகைக்காக அனுப்பியிருக்கிறேன். அத்தொகை உன்னுடைய அவசரத்துக்கு வந்து சேருமென்று நம்புகிறேன்.

உனது நம்பிக்கையுள்ள
சிநேகிதன்,
அ. ரா. அருணாசலம்.

---

(13)

Villuvachavadi,
28-11-34.

My dear Tholasingam,

I am sending you through the bearer the amount you require. As to re-payment I shall ask you to kindly return the amount earlier as I am taking it out of the money reserved for presenting to my niece during her wedding which falls just about the time you have promised to return the money. Hoping you will soon get over your difficulties and that you are quite well.

I am,
Yours sincerely,
M. V. Krishnaswami Mudaliar.

(13)

வில்லுவச்சாவடி,
28-11-34.

என் அருமையுள்ள துளசிங்கம்,

நீ விரும்பிய தொகையை ஆள்வசம் அனுப்பி வைக்கிறேன். நீங்கள் எப்பொழுது அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னீர்களோ அப்பொழுது என் உடன் பிறந்தார்மகளின் கல்யாணம் வருகிறது. இந்தப் பணம் அந்தக் கல்யாணத்திற்கு வைத்திருந்த தொகையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். ஆகையால், இந்தத் தொகையைக் கூடிய சிக்கிரம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டியது. கூடிய சிக்கிரம் உங்கள் துன்பங்களெல்லாம் ஒழிந்து சுகமடைவீர்களென்று நம்புகிறேன்.

உமது விசுவாசமுள்ள,
எம். வி. கிருஷ்ணசாமி முதலியார்.

(14)

Siruthavour,
29-11-34.

My dear Govindarajalu,

Regret very much to see that you write to me for money at a time when I am greatly in need of it. If you had applied to me a week before, I would not have disappointed you. I purchased a necklace last week with the money I had. For the present I am quite unable to help you with the loan. Hoping that yon will excuse my inability to help you.

I remain,
Yours sincerely,
B Krishnaswamy Raju.

(14)

சிறுத்தாஞர்,
29-11-34.

என் அருமை கோவிந்தராஜலு,

எனக்குப் பணம் மிகவும் அவசரமாயிருந்த சமயத்தில் நீ உனக்குப்பணம் வேண்டுமென்று எனக்குக் கடிதம் எழுதினாய். நீ ஒரு வாரத்துக்கு முன் எழுதியிருந்தால் நான் தடையில்லாமல் கொடுத்திருப்பேன். சென்ற வாரத்தில் தான் என்னிடமிருந்த பணத்திற்கு அட்டிகை யொன்று வாங்கிவிட்டேன். தற்சமயம் நான் உனக்குக் கடன் கொடுக்க முடியாதவனு யிருக்கிறேன். நான் உனக்கு உதவி செய்ய முடியாமைக்கு நீ என்னை மன்னிப்பாயென்று நான் நம்புகிறேன்.

உனது நம்பிக்கையுள்ள,
பி. கிருஷ்ணசாமி ராஜு.

---

(15)

Tanjore
19-10-34.

My dear Elayaperumal,

To-day I came after completing my tour and saw the letters that came during my absence and from which I found one from you.

I have exhausted the contents of my purse during the tour and have not got a pie that I can call my own for the present. I hope to get my travelling allowance by the end of this week and shall be pleased to give the loan required.

Yours sincerely,
G. Krishnamurthy Rao.

---

(15) தஞ்சாவூர்,
12-12-34.

எனது அருமை இளைய பெருமாளுக்கு,

இன்றையதினம் தான் நான் என்னுடைய பிரயாணத்திலிருந்து, திரும்பி வந்து, நான் இல்லாத காலத்தில் எனக்கு வந்த கடிதங்களைப் பார்க்க நேர்ந்ததில், அவற்றிலொன்று உன் கடிதமாயிருப்பதைக் கண்டேன். என்னுடைய பிரயாணத்தில் என் பையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்து போயிற்று. தற்சமயம் என்னுடையதென்று சொல்வதற்கு ஓர் காசேனும் என் வசம் இல்லை. இந்த வாரக்கடைசியில் நான் என்னுடைய பிரயாணப் படியைப் பெறுவேன். அப்போது கடனுக நீ கேட்ட தொகையைக் கொடுக்கிறேன்.

உனது அன்புள்ள,
ஜி. கிருஷ்ணமூர்த்தி ராவ்.

கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டல்

Asking to return the loan.

(16) Madras,
13-12-34.

My dear Gopalakrishnan,

I pen this short note to remind you of your promise of returning the amount borrowed from me last month. Though it is two months past, nothing is heard from you and since the marriage of my niece, has already intimated to you, falls on the 29th instant, I request you to kindly return me the amout this week.

Hoping to be excused for troubling you,
I remain,
Yours faithfully,
G. Krishnamurthi Rao.

சென்னை,
13-12-34.

எனது அருமை கோபாலகிருஷ்ணனுக்கு,

சென்ற மாதத்திலேயே நீ திருப்பிக்கொடுப்பதாக வாக்களித்து என்னிடம் வாங்கிய தொகையை ஞாபக மூட்டும் பொருட்டு இக்கடிதத்தை நான் உனக்கு எழுதுகிறேன். ஏறக்குறைய இரண்டுமாதமாகியும் உன்னிடமிருந்து ஒரு செய்தியும் கேள்விப்படவில்லை. என் உடன் பிறந்தார் மகளின் கலியாண மென்பதையும் உனக்குத் தெரிவித்திருக்கிறேன். அக்கல்யாணம் 29-ந் தேதி வருகிறது. தயை செய்து மேற்படி தொகையை இந்த வாரத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிடவும். தொந்தரவுக்கு மன்னிப்பா யென்று நினைக்கிறேன்.

உனது விஸ்வாசமுள்ள,
ஜி. கிருஷ்ணமூர்த்தி ராவ்

(17) Madura,
14-12-34.

My dear Govindan,

I am this day sending through my brother the amount you were good enough to lend me in time of need. I most heartily thank you for the timely help you have done me.

Yours sincerely,
Venkatachalam.

(17) மதுரை,
14-12-34.

எனது அருமை கோவிந்தனுக்கு,

நீ என் அவசர காலத்தில் எனக்குக் கொடுத்து உத விய தொகையை நான் என் சகோதரன் மூலமாக அனுப்பி யிருக்கிறேன். சமயத்தில் நீ எனக்குச் செய்த உதவிக்காக நான் உனக்குப் பெரிதும் வந்தனம் செய்கிறேன்.

உனது நன்றியறிதலுள்ள,
வெங்கடாஜலம்.

---

(18) Purasawalkam,
16-12-34.

My dear Nagabushanam,

I regret owing to unforeseen calamities in my family I have to delay in returning your money. I request you to kindly allow me some time, at least a month, as I hope to get my insurance commission within that period. I shall reserve that amount for you, without taking it to meet any other demand.

I remain,
Yours sincerely,
Elayaperumal.

---

(18)

புரசவாக்கம்,
16-12-34.

என் அருமை நாகபூஷணத்திற்கு,

எதிர் பாராது என் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பத்தினால் தங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் விஷயத்தில் தாமதம் ஏற்பட்டமைக்காக நான் விசனிக்கிறேன். தயை செய்து இன்னும் ஒரு மாதமாவது எனக்கு அவகாசம் கொடுத்தால், எனக்குக் கிடைக்கக்கூடுமென்று நான் நம்புகிற 'இன்ஷியூரன்ஸ்' கமிஷன் தொகையை வேறு செலவுக்கு உபயோகிக்காமல் தங்களுக்காகச் சேர்த்து வைக்கக்கூடும்.

உனது
நன்றியறிதலுள்ள,
இளையபெருமாள்.

(19)

Pondicherry,
18-12-34.

My dear Varadarajalu,

I request you to kindly pardon me for not repaying you the amount in time, though you have readily lent me when I wanted it.

The reason for the delay is that I did not get my pay in time, as the head of our office has gone out and came only yesterday.

I remain,
Yours sincerely,
A. R. Arunachalam.

(19)

புதுச்சேரி,
18-12-34.

ஏன் அருமை வரதராஜுலுக்கு,

நான் கேட்டபொழுது நீ எனக்குக் கொடுத்த தொகையைக் குறித்த காலத்தில் நான் உனக்குத் திருப்பிக் கொடுக்காமற் போனமைக்காக நீ மன்னிப்பாயென்று நான் நம்புகிறேன். நான் சமயத்தில் சம்பளம் வாங்காமையினாலும், நமது ஆபீஸ் தலைவர் வெளியில் போய் இருந்து நேற்றுத்தான் வந்தமையினாலும் தாமதமாயிற்று.

உனது உண்மையுள்ள,
அ. ரா. அருணாசலம்.

விவாகத்தின்போது ஆசீர்வதித்தல்

Blessing during the Marriage.

Manimangalam,
19-12-34.

My dear Elayaperumal,

Most heartily do I congratulate you on your marriage and wish you and your life-partner a peaceful and happy wedded life.

May the All Powerful Almighty shower on you and your beloved His choicest blessing is the sincere prayer of

Your loving friend,
Naghabushanam.

மணிமங்கலம்,
19-12-34.

என் அருமை இளையபெருமாளுக்கு,

உனது புதுமண வாழ்க்கையில் உன் மனைவியோடு உனக்குச் சந்தோஷ முண்டாகவேண்டுமென்று நான் மனப் பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் உனக்கும் உன் மனைவிக்கும் அருள் செய்வாராக.

உனது அன்புள்ள நண்பர்,
நாகபூஷணம்.

பதில்—Reply.

Purasawalkam,
20-12-34.

My dear Naghabushanam,

Permit me to thank you on behalf of my wife and myself for your warmest congratulations on our marriage. In your letter you did not make mention of your presents. However I received it and find that it is valuable in itself, but I value it still more for having come from so true and dear a friend as I know you to be.

Yours sincerely,
Elayaperumal.

புரசவாக்கம்,
20-12-34.

எனது அருமை நாகபூஷணத்திற்கு,

என் மனைவிக்காகவும், எனக்காகவும், எங்கள் கல்யாணத்தை முன்னிட்டு எங்கள் க்ஷேமத்தைக் கருதி தாங்கள் ஆசீர்வதித்ததற்காக வந்தன மளிக்கிறேன். தங்களுடைய கடிதத்தில் உமது வெகுமதியைப்பற்றி தாங்கள் ஏதும் குறிப்பிடவில்லை. எப்படியாயினும் நான் அதைப் பெற்றுப் பார்த்ததில் அது மிகவும் உயர்ந்ததென்று அறிந்தேன். தாங்கள் உண்மையும் அருமையும் உடைய நண்பரென்று எனக்குத் தெரியுமாகையால், உம்மிடத்திலிருந்து வந்த அவ் வெகுமதி பின்னும் உயர்வுடையதே யாகும்.

உனது நம்பிக்கையுள்ள,
இளையபெருமாள்.

மரண விஷயமான கடிதம்.

Letter Intimating Death.

Town
My dear Uncle, Date

I am extremely sorry to inform you that my second son Balaram aged about 7 years expired on the morning of the 6th instant. He was attacked on influenza which developed into Pneumonia and in spite of the best medical aid his soul left his body.

My pen fails to write anything more.

With deep sorrow
I remain, Yours affectionately,
Jayaraman.

---

*Uncle என்னும் பதத்திற்குச் சிற்றப்பன்—பெரியப்பன்—அம்மான்—மாமன் என்று நான்கு அர்த்தங்களுண்டு.

ஊர்
தேதி

எனது அருமை சிறிய தகப்பனருக்கு,

ஆறும் தேதி காலை எழுவயதூள்ள என்னுடைய இரண்டாவது மகன் பலராமன் என்பவன் இறைவன் திருவடியை அடைந்தான் என்பதை நான் மிகவும் விசனத்துடன் தெரிவித்துகொள்ளுகிறேன். முதலில் விஷஜுரம் ஆரம்பமாகி, அது விருத்தியாகி நிமோனியா என்னும் வியாதியாக மாறியது. தேர்ந்த சிகிச்சை செய்தும் குணப்படாமல் அவன் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்தது.

இன்னும் எதாவது எழுதுவதற்கு என் பேனா ஓடவில்லை.

துக்கத்தில் மூழ்கிக் கிடக்கும்
தங்கள் பிரியமுள்ள,
ஜெயராமன்.

Reply—Condolence Letter

Town
Date

My dear Thangavelu,

I am extremely shocked to hear of the sudden death of our Balaram. Though young he was a promising boy and I had great hopes in him. He was intelligent indeed but what can that do when the inevitable hour comes? Do not feel disheartened. Summon up all your courage and try to forget the blow earlier.

May he who dispenses with our happiness and sorrow give you consolation.

I remain
Yours affectionately,
S. Rathakrishna Naidu.

உபசார லிகிதம்—பதில்

ஊர்
தேதி

என் அருமைத் தங்கவேலுக்கு,

திடீரென்று நமது பலராமனின் மரணத்தைக் கேட்ட வுடன் நான் மிகவும் திடுக்கிட்டுப்போனேன். அவன் மிகவும் சிறியவனு யிருந்தாலும் அவன் முன்னுக்கு வருவா னென்னும் நம்பிக்கை எனக்கு இருந்தது. அவன் மிகவும் புத்திசாலிதான். ஆனல், காலம் வந்தபோது அப் புத்தி சாலித்தனம் என்ன செய்யும்? மனம் சலித்துப் போகாதே. உன் தைரியத்தை யெல்லாம் ஒருங்கு சேர்த்து ஏற்பட்ட துன்பத்தை விரைவில் மறந்துவிட வேண்டும்.

நமது சுகதுக்கங்களுக்குக் காரணமான கடவுள் உனக்குத் துக்கத்தைப் போக்கித் துணை செய்வாராக.

உன் பிரியமுள்ள,
எஸ். ராதாகிருஷ்ண நாயுடு.

விருந்திற் கழைத்தல்—Invitation for Dinner

(1)

Town
Date

My dear Jayaram,

I and my wife request the plesure of your company at dinner on Monday the 6th at 10 A. M.

Yours truly,
Cunniah Naidu.

என் அருமை ஜெயராம்,

ஆருந் தேதி திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு எங்களோடு சேர்ந்து பகற்போஜனம் சாப்பிடும்படி உன்னை நானும் என் மனைவியும் அழைக்கிறோம்.

உன் உண்மையுள்ள,
கன்னையப்ப நாயுடு.

---

(2)

Town
Date

Dear Elumalai,

May I request you to kindly come to our house for supper to-morrow at about 7 P.M. I have invited a few more of our friends and hope the occasion will be made happy by their presence.

Yours sincerely,
L. Arimuthu.

ஊர்
தேதி

அருமை ஏழுமலைக்கு,

நாளை இரவு ஏழு மணிக்கு நீ நம்முடைய வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு வரும்படியாய் நான் உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் சில நண்பர்களையும் வருமாறு சொல்லியிருக்கின்றேன். அவர்கள் வருகையால் அச் சமயம் மிகுந்த குதூகலம் உண்டாகக் கூடுமென்று நம்புகிறேன்.

உனது நம்பிக்கையுள்ள,
எல். ஆரிமுத்து.

பதில்—Reply

Town
Date

Dear Arimuthu,

Received your kind invitation. I shall positively go to your house and enjoy the company of your friends.

Yours sincerely,
M. Elumalai pillai.

ஊர்
தேதி

அருமை ஆரிமுத்துக்கு,

உன்னுடைய அன்பார்ந்த அழைப்புக் கடிதம் வரப் பெற்றேன். நான் அவசியம் உன்னுடைய வீட்டிற்கு வந்து உன்னுடைய நண்பர்களோடு சேர்ந்து இன்பமனுவிப்பேன்.

உனது நம்பிக்கையுள்ள,
எம். ஏழுமலைப்பிள்ளை.

Town
Date

Dear Arimuthu,

As I am not keeping good health, I am sorry I cannot come over to your place for supper as erquested.

I am
Yours sincerely,
M. Elumalai Pillai.

ஊர்
தேதி

அருமை ஆரிமுத்துக்கு,

எனக்குத் தேகம் சுகமாக இல்லாத படியால் உன் விருப்பப்படி உன் வீட்டிற்கு உண்ண வரமுடியாததால் நான் வருந்துகிறேன்.

உன் நம்பிக்கையுள்ள,
எம். ஏழுமலைப்பிள்ளை.

உபந்யாசத்திற்கு அழைத்தல்

Invitation to attend Lecture

The Madras Teacher's Association.

Sir,

Under the auspices of the above Society, Professor T. R. Sesha Aiyangar, Avergal; M.A., M.R. A.S., F.R.H.S., (London) will deliver a lecture in English on "Some aspects of ancient Dravidian Culture" in the Pachaiappa's College Hall at 5 p.m. on Saturday the 26th December 1934. M.R.Ry. Hon'ble Dewan Bahadur T. N. Sivagnanam Pillai Avergal, Minister for Development, has kindly consented to preside on the occasion.

Your presence is earnestly solicited.

Yours sincerely,
RAMANUJA IYENGAR
Honorary Secretary.

மதராஸ் ஆசிரியர் சங்கம்.

ஐயா,

மேற்படி சங்கத்தின் ஆதரவில் 1935-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 26-ந் தேதி சனிக்கிழமை மாலை 5-மணிக்குப் பச்சையப்பன் கலாசாலை ஹாலில் கல்வியாளர் டி. ஆர். சேஷ ஐயங்கார் அவர்கள், எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ்., எப். ஆர். எச் எஸ்., (லண்டன்) ஆங்கில பாஷையில் 'திராவிடர்களின் பூர்வகால சில பழக்க வழக்கங்கள்' என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யாசம் செய்வார்கள். அவ்வமயம் அபிவிருத்தி இலாகா மந்திரியாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆனரபில் திவான் பகதூர் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகிக்க மனமுவந்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் வரவு ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் நம்பிக்கையுள்ள,
இராமாநுஜ அய்யங்கார்,
கௌரவ காரியதரிசி.

சம்பளத்தை உயர்த்த மனு.

Application for increment of Salary.

To

The Proprietor,
Amirtha Gunabodhini Office,
158/A Broadway
Madras.

Sir,

I am a clerk in your office for the last ten years and am given an increment of five rupees four years ago.

When I had laid before you my financial difficulties last year, you had promised to consider it after six months.

I write this as an humble reminder of your promise and request you to kindly consider my case earlier.

I beg to remain,
Sir,
Your most obedient servant,
C. G. Thiruvengadam

22—10—34

ஸ்ரீமான் புரொப்ரைட்டர்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
158-A, பிராட்வே மதராஸ்.

ஐயா,

நான் உங்களுடைய ஆபீஸில் கடந்த பத்து வருட காலமாகக் குமாஸ்தாவாக இருக்கிறேன். நான்கு வருடங்களுக்கு முன்னர் என் சம்பளத்தில் ஐந்து ரூபா அதிகப் படுத்தினீர்கள். சென்ற வருடம் தங்களிடம் என் பணக் கஷ்டத்தைப்பற்றிச் சொல்லியபோது ஆறுமாதங்களுக்குப் பிறகு கவனிப்பதாகச் சொல்லியிருந்தீர்கள். நீங்கள் வாக்களித்தபடி என் விஷயத்தைச் சீக்கிரம் கவனிக்கும்படி நினைவுண்டாகும் பொருட்டு இதை எழுதினேன்.

தங்கள் தாழ்மையும் கீழ்ப்படிதலுமுள்ள,
ஊழியன்,
சி. ஜி. திருவேங்கடம்.

22-10-34

ரஜா கொடுக்கும்படி மனு

Application for leave

To (1) Residence

The Headmaster, Date

Central College,

Bangalore.

Sir,

As I am suffering from severe fever and head-ache since last Saturday, I am unable to attend the School. So I request you to kindly grant me a week's leave.

I am

Your obedient Student,

V. R. Kannabiran,

V Form.

ஹெட்மாஸ்ட்டர், குடியிருக்கும் விலாசம்

சென்ட்ரல் காலேஜ், தேதி

பெங்களூர்.

ஐயா,

நான் சென்ற சனிக்கிழமையிலிருந்து தலை வலியாலும் கொடிய காய்ச்சலினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற படியால் என்னால் பள்ளிக்கூடத்திற்கு வர முடியவில்லை. ஆகையால், எனக்குத் தயை செய்து ஒரு வாரம் ரஜா கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,

வி. ஆர். கண்ணபிரான்,

5-வது பாரம்.

(2)

Madras,
11-5-34.

Dear Sir,

This morning I have received a wire from my father asking me to start at once with my mother, as my sister is badly laid up with influenza. I am starting by 10-30 train and so I request you to kindly grant me casual leave for four days.

I remain,
Your obedient servant,
R. Doraiswamy Pillai,
M. C. P. No. 1907, C. 3. Div.

சென்னை,
11-5-34.

அன்பு மிகுந்த ஐயா,

என் சகோதரிக்குக் கொடுமையான விஷஜ்வரம் கண்டிருப்பதாகவும் என்னை என் தாயாரோடு உடனே புறப்பட்டு வரும்படியாகவும் இன்று காலையில் என் தந்தையாரிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது. நான் 10-30 மணிக்குப் புறப்படும் ரெயிலில் பிரயாண மாகிறபடியால் தயை செய்து எனக்கு நான்கு நாள் சம்பளத்தோடு லீவ் கொடுக்கும்படியாகக் கோருகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன்,
ஆர். துரைசாமி பிள்ளை,
டவுன் கான்ஸ்டேபிள்.

(3) Chinnamanovaram,
11-8-34.

Sir,

As I have to go to Tiruvannamalai (a religious place) to celebrate some vows during the Karthigai Deepam festival, I request you to kindly grant me 15 days privilege leave.

I beg to remain,
Sir,
Your obedient servant,
R. Thangavelu Pillai.

சின்னமனோவரம்,
11-8-34.

ஐயா,

சில பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு நான் கார்த்திகை தீப உற்சவத்தன்று திருவண்ணாமலைக்கு (மத சம்பந்தமான ஓர் இடம்) போகவேண்டியதா யிருப்பதால் தயை செய்து 15-நாள் பிரிவிலேஜ் லீவ் தரும்படியாகக் கோருகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன்,
ஆர். தங்கவேலு பிள்ளை.

தந்தை எழுதியது—**Father's writing**

(4) Residence,
Date.

Sir,

As my son, V. R. Kannan, is suffering from diarrhoea, I request you to grant him two days leave from this date.

Yours faithfully,
V. Rajagopal.

குடியிருக்கும் விலாசம்,
தேதி.

ஐயா,

என்னுடைய மகன் அஜீர்ணத்தால் உண்டான வயிற்றுப் போக்கினால் கஷ்டப்படுகிற படியால் அவனுக்கு இன்றைய தேதியிலிருந்து இரண்டு நாட்கள் ரஜா தரும்படியாகக் கோருகிறேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள,
வி. ராஜகோபால்.

வியாபாரக் கடிதங்கள்—Trade Letters

To

The Manager, Amirtha Gunabodhini office,
Post Box 164, Madras.

Gentlemen,

As I should like to purchase a few things from your company, I shall be obliged if you would send me a copy of your illustrated catalogue.

I remain, Gentlemen,
Yours faithfully,
G. Ramakoti.

மானேஜர், அமிர்த குணபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி 164, மதராஸ்.

பெரியீர்,

நான் தங்கள் கம்பெனியிலிருந்து சில சாமான்களை வாங்க விரும்புகிற படியால் தாங்கள் தயை செய்து படம் உள்ள தங்கள் கம்பெனியின் சாமான்கள் விவர மடங்கிய ஜாபிதா ஒன்றை அனுப்புவீர்களானால் நலமாயிருக்கும்.

தங்கள் உண்மையுள்ள,
ஜி. ராமகோட்டி.

Madras.
15-10-34

To

Messrs. E. M. G. Kone Book Depot,
158-A, Broadway, Madras.

Dear Sirs,

Will you please let me know the prices at which you can supply me with the following:—

(1) Printer's Ink Bronze Blue per lb Tin.
(2) do Violet do
(3) do Black do

I shall feel obliged to you for an early reply.

Yours faithfully,
V. S. Rajabathar.

சென்னை,
15 10-34.

மெஸர்ஸ். இ. எம். ஜி. கோன் புஸ்தகசாலை,
158-A, பிராட்வே, சென்னை.

அருமை வாய்ந்த ஐயன்மீர்,

நீங்கள் கீழ்க்கண்ட சாமான்களை என்ன விலை வீதம் எனக்குக் கொடுக்க முடியுமென்பதைத் தெரியியுங்கள்:—

(1) அச்சடிப்பவர்கள் உபயோகிக்கும்
ப்ரான்ஸ் ப்ளூ இங்க் 1 பவுண்ட் டின்
(2) மேற்படி காபிங் ,, 1 பவுண்ட் டின்
(3) மேற்படி கறுப்பு ,, 1 பவுண்ட் டின்

சீக்கிரமாகப் பதிலெழுதுவீர்களானல் நலமாயிருக்கும்.

உங்கள் நம்பிக்கையுள்ள,
வி. எஸ். ராஜாபாதர்.

பதில்—Reply

158-A, Broadway,
Madras, 16-10-34.

Dear Sir,

We are in receipt of your letter dated 15th and have great pleasure in giving you the following quotations:—

(1)	Printer's ink	Bronze blue	Rs.	3-8-0	per lb.
(2)	do	Violet	,,	3-8-0	do
(3)	do	Black	,,	1-4-0	do

Hope you will place your orders earlier.

We remain
Dear Sir,
Yours faithfully,
E. M. G. Kone.

158-A, பிராட்வே, சென்னை.
16-10-34.

அன்புள்ள ஐயா,

தாங்கள் எழுதிய 15-10-34 கடிதம் கிடைத்தது. பின் வருமாறு நாங்கள் சந்தோஷத்துடன் விலை விவரத்தைத் தெரிவிக்கிறோம்:—

(1)	அச்சடிப்பவர்கள் உபயோகிக்கும் ப்ரான்ஸ் ப்ளூ இங்க்	1 பவுண்ட் டின்		3-8-0
(2)	மேற்படி காபிங்	1 பவுண்ட் டின்		3-8-0
(3)	மேற்படி கறுப்பு	1 பவுண்ட் டின்		1-4-0

உங்கள் ஆர்டரைச் சீக்கிரம் அனுப்புவீர்க ளென்று, நம்புகிறோம்.

உங்கள் உண்மையுள்ள,
இ. மா. கோபாலகிருஷ்ண கோன்.

பத்திரிகைக்கு—To Newspaper

Washermenpet,
The Manager, Madras, 18-11-34.
"Amirtha Gunabodhini" Office,
158-A, Broadway, Madras.

Sir,

Please enrol me as a subscriber to your new Tamil monthly '***Amirtha Gunabodhini***' from the beginning of this year and recover the subscription by V. P. P., and be sending the copies regularly until countermanded.

Awaiting your V. P. P.

Yours truly,
C. M. Govindaswamy.

வண்ணாரப்பேட்டை, சென்னை.
18-11-34.

மானேஜர்,
"அமிர்த குணபோதினி" ஆபீஸ்.
158-A, பிராட்வே, சென்னை.

ஐயா,

தங்களது அருமையும் உபயோகமுள்ள புதுமாதிரி தமிழ் மாதசஞ்சிகை "அமிர்த குணபோதினி"க்கு என்னை ஒரு சந்தாதாரனாகச் சேர்த்துக்கொண்டு இவ்வருஷ ஆரம்ப முதல் பிரதிகளை அனுப்பி, வருஷச்சந்தாத் தொகைக்கு வி. பி. பி. செய்யவும். பிரதிகளைத் தவறாமல் மாதாமாதம் வேண்டாம் என்று சொல்லும் வரையில் அனுப்பிவர வேண்டும்.

தங்களுடைய வி. பி. யை எதிர்பார்க்கும் நன்றியுள்ள,
சி. எம். கோவிந்தசாமி.

பதில்—Reply

"Amirtha Gunabodhini" Office,
158-A, Broadway, Madras.

Dear Sir, Madras, 19-11-34.

With reference to your letter, we are sending you our "***Amirtha Gunabodhini***" by V. P. P. for Re. one and annas four only, which please honour as soon as it reaches you. We shall be sending you the monthly issues regularly. Yours truly,

E. M. Gopalakrishna Kone.

"அமிர்த குணபோதினி" ஆபீஸ்,
158-A, பிராட்வே, சென்னை.

அன்பார்ந்த ஐயா, சென்னை, 19—11—34.

உமது கடிதப்பிரகாரம் எங்களுடைய "அமிர்த குண போதினி" சஞ்சிகையை, வி. பி. பி. யில் ரூ. 1—4—0-க்கு அனுப்புகிறோம். அது உமக்குச் சேர்ந்ததும் அங்கீகரிக்க வும். சஞ்சிகையை மாதாமாதம் சரியாய் அனுப்பிக் கொண்டு வருகிறோம், உண்மையுள்ள,

இ. மா. கோபாலகிருஷ்ண கோன்.

புஸ்தகமனுப்பும்படி எழுதுதல்.

Order to send books.

To (1)

Messrs. E. M. G. Kone,
158-A, Broadway, Madras.

Dear Sirs,

Please send me through V. P. P. 12 (Twelve) copies of your novel "Angayarkanni or The Loving Maid" by Mr. A.R.Madhavaraya Mudaliar and oblige.

"Mannady" } Yours sincerely,

8—4—34. } V. S. Rajabathar.

மெஸர்ஸ். இ. மா. கோபாலகிருஷ்ண கோன்,
158-A, பிராட்வே, மதராஸ்.

அருமையுள்ள ஐயா,

தயை செய்து மிஸ்டர் அ. ரா. மாதவராய முதலியார் அவர்கள் எழுதிய "அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை என்னும் நாவலில் 12 (பன்னிரண்டு) காபிகள் வி. பி. பி. மூலமாக எனக்கு அனுப்பக் கோருகிறேன்.

"மண்ணடி"
8—4—34

உங்கள் நம்பிக்கையுள்ள,
வி. எஸ். ராஜாபாதர்.

Gentlemen, (2)

Please send me the following Tamil novels through bearer Thangavelu who will pay you cash for them.

1 Copy of Angayarkanni
1 ,, Manikkavalli
1 ,, Ambalavanan
1 ,, 1000 Thalaivangi Athisaya Chintamani

26/ Cemetery Road
Washermenpet,
Madras.

Yonrs faithfully,
C. G. Thiruvengadam.

பெரியீர்,

தயை செய்து கீழ்க்கண்ட புஸ்தகங்களை இக்கடிதத்தைக் கொண்டுவரும் தங்கவேலு என்பவர் வசம் கொடுத்தனுப்பவும். அவர் அதற்காகக் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்து விடுவார்.

1 காப்பி அங்கயற்கண்ணி
1 ,, மாணிக்கவல்லி
1 ,, அம்பலவாணன்
1 ,, ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி.

26-சிமிட்டரிரோட்,
வண்ணைரப்பேட்டை
சென்னை.

தங்கள் நம்பிக்கையுள்ள,

சி. ஜி. திருவேங்கடம்.

To

(3)

Messrs. E. M. G. Kone Book Depot,
158-A, Broadway, Madras.

Sirs,

Please send me two copies of Reynold's 'Soldier's Wife" through V.P.P. at your earliest convenience.

"Guha Vilas"
Perambur.
3-11-1934.

Yours sincerely,

Subramania Bharathi.

மெஸர்ஸ். இ. எம். ஜி. கோன் புக் டிபோ,
158-A, பிராட்வே, சென்னை.

ஐயன்மீர்,

உங்கள் சௌகரியப்படி கூடிய சீக்கிரத்தில் ரேனல்ட்ஸ் என்னும் துரைமகனார் எழுதிய "ஷோல்ஜர்ஸ் ஒயிப்" என்னும் நாவலில் இரண்டு காப்பிகளை எனக்கு வி. பி. பி. மூலம் அனுப்பக் கோருகிறேன்.

குஹ விலாஸ்
பிரம்பூர்.
3—11—1934.

தங்கள் நம்பிக்கையுள்ள,

சுப்பிரமணிய பாரதி.

பதில்—Reply

Madras,
5-11-1934.

Dear Sir, (1)

In accordance with your letter of the 3rd instant, we have this day despatched by V. P. Post to your address, the books ordered by you, which we trust will reach you in good order.

Awaiting your further esteemed orders.

We remain,
Dear Sir,
E. M. G. Kone.

மதராஸ்,
(1) 5-11-1934.

ஐயா,

3-ந் தேதியிட்ட உங்கள் கடிதப்படி நீங்கள் குறிப்பிட்ட புஸ்தகத்தை இன்றையதினம் வி. பி. தபால் மூலமாக உங்கள் விலாசத்திற்கு அனுப்பி யிருக்கிறோம். அது சரியாக உங்களுக்கு வந்து சேருமென்று நம்புகிறோம்.

தங்களுக்கு வேண்டிய வேறு புஸ்தகங்களுக்கும் எழுதுவீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
இ. எம். ஜி. கோன்.

(2) Conjeevaram,
17-11-34.

Dear Sir,

In reply to your esteemed favour of the 15th instant, we are sorry to inform you that we are unable to execute your order, as the book required by you is out of stock at present. We expect our fresh consignment by the end of this month and shall let you know as soon as we get it.

Anticipating a continuance of your orders,

We remain,
Yours faithfully,
Prince & co.,

காஞ்சீபுரம்,
17-11-34.

ஐயா,

பதினைந்தாம் தேதியிட்ட உங்கள் கடிதப்படி உங்கள் ஆர்டரை நாங்கள் அங்கீகரிக்க முடியாதவர்களா யிருக்கிறோம். தற்சமயம் நீங்கள் கேட்ட புஸ்தகம் எங்கள் கைவசத்தில் இல்லை. எங்களுக்குப் புதிய சரக்கு இந்த மாதக் கடைசியில் வரும், வந்தவுடன் உங்களுக்குத் தெரிவிக்கிறோம். தொடர்ச்சியாக உங்கள் ஆர்டர்களைப் பெற ஆவலுடையவர்களா யிருக்கிறோம்.

உங்கள் நம்பிக்கையுள்ள,
பிரின்ஸ் அண்ட் கம்பெனி.

---

(3)

Conjeevaram,
19-11-34.

Dear Sir,

We are to-day sending you the books you require. We are sorry for the delay. As we had not got all the books required by you, we thought it wise to wait and send the whole by obtaining the rest from the publishers.

Soliciting your future commands.

We remain,
Dear Sir,
Yours faithfully,
Prince & Co.,

காஞ்சீபுரம்,
19-11-34.

ஐயா,

நீங்கள் கேட்ட புஸ்தகத்தை இன்றையதினம் நாங்கள் உங்களுக்கு அனுப்புகின்றோம். தாமதத்திற்காக நாங்கள் மிகவும் வருந்துகின்றோம். நீங்கள் கேட்ட எல்லாப் புஸ்தகங்களும் எங்களிட மில்லாமையால், அவைகளை அவைகளின் பிரசுரகர்த்தரிடமிருந்து பெறுகிற வரையில் பொறுத்திருந்து அனுப்புவதே உசிதமென்று நாங்கள் நினைத்தோம்.

உங்களுடைய மற்ற ஆர்டர்களுக்கு எதிர்பார்க்கின்றோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
பிரின்ஸ் அண்ட் கம்பெனி.

---

(4)

Dear Sir,

We have great pleasure in sending you the books you require and hope it will reach you safely. As directed by you, we have placed the value of the same towards your account.

Hoping to be favoured with your further orders.

We are, Dear Sir,
Yours faithfully,
Mc Donald & Co.,

Ootacamund,
16—11—34.

ஐயா,

நாங்கள் மிகுந்த சந்தோஷத்துடன் உங்களுக்கு வேண்டிய புஸ்தகங்களை உங்களுக்கு ஜாக்கிரதையாக வந்து சேருமென்னும் நம்பிக்கையுடன் அனுப்புகின்றோம். நீங்கள் கட்டளை யிட்டபடி அவைகளின் தொகையை உங்கள் கணக்கில் பற்று செய்திருக்கின்றோம். உங்களுடைய மற்ற ஆர்டர்களையும் கொடுத்து உதவுவீர்களென்று நம்புகிறோம்.

உதகமண்டலம்,
16—11—1934.

உங்கள் நம்பிக்கையுள்ள,
மெக்டனல்ட் அண்ட் கம்பெனி.

எமக்கு ஆர்டர் அனுப்புவோர் இம்மாதிரியான கடிதம் ஆங்கிலத்தில் எழுதவேண்டியது.

Specimen letter of order to be sent to us.

To

M. R. Ry. E. M. Gopalakrishna Kone Avl.
158-A, Broadway, Madras.

Sir,

I read in the local Newspaper that your English Tutor" ("ஆங்கில ஆசான் அல்லது ஆங்கிலபோதினி")

is a very valuable book to learn English and I will be much thankful to you if you will kindly send me 300 copies per Railway Goods and R/R by V. P. P. at your earliest convenience. I will distribute them to my friends and instruct to read them carefully.

Yours sincerely,
Narayana Iyer,
South Indian Book Depot,
Srirangam.

Srirangam,
Date 15-11-34.

ம-ரா-ரா-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ண கோன் அவர்கள்,
158-A, பிராட்வே, சென்னை.

ஐயா,

இங்கிலீஷ் கற்றுக் கொள்வதற்கு உங்களுடைய "ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி" என்னும் புஸ்தகம் மிகவும் உயர்ந்ததென்று உள்ளூர் வர்த்தமான பத்திரிகையில் படித்தேன். தயைசெய்து உங்கள் சௌகரியப்படி சிக்கிரத்தில் 300 காப்பிகளை ரயில்வே கூட்ஸ் மூல்யம் அனுப்பி, ரயில் ரசீதை வி. பி. பி. மூலமாக அனுப்புவீர்களானால் நான் உங்களுக்கு மிகவும் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டவனாவேன். நான் அவைகளை என் நண்பர்களுக்குக் கொடுத்துக் கவலையுடன் படிக்கும்படி அவர்களுக்கு விவரிப்பேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
நாராயண ஐயர்,
தென் இந்தியா புஸ்தக டிபோ,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீரங்கம்,
15-11-34.

எமது பதில்—Our reply

To 19-11-34

M. R. Ry. Narayana Iyer,
South Indian Book Depot,
Srirangam.

Sir,

With reference to your kind letter dated the 15th instant, we have sent you 300 copies of our English Tutor through Railway goods and R/R by V. P. P., which please acknowledge receipt and oblige. We are really thankful to you for your kind patronage of it.

158-A, Broadway, Madras. } Yours sincerely, E. M. Gopalakrishna Kone.

19-11-34.

ம-ரா-ரா-ஸ்ரீ நாராயண ஐயர்,
தென்னிந்தியா புஸ்தக டிபோ,
ஸ்ரீரங்கம்.

ஐயா,

தங்கள் 15-ம் தேதி கடிதப்படி யாம் இன்று எமது "ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி" 300-காப்பிகளை செயில்வே கூட்ஸ் மூல்யமாக அனுப்பி ரயில் ரசீதை வி. பி. பி. மூலமாக அனுப்பியுள்ளோம். பெற்றுக் கொள்ளவும். அவ்விஷயத்தில் தங்கள் பேருதவியைக் குறித்து உண்மையிலேயே நாங்கள் தங்களுக்கு வந்தனம் செய்கின்றோம்.

158-A, பிராட்வே, சென்னை. } தங்கள் நம்பிக்கையுள்ள, இ. மா. கோபாலகிருஷ்ண கோன்.

குடிக்கூலிக்கு வீடு கேட்டல்.

Asking a house for rent.

Residence

To Date

M. R. Ry. V. S. Gnanasundaram Chettiar Avl.,
36, Malayappen Street, Mannady.

Sir,

I come to know that you are the owner of the house No. 3, Dispensary Road, which is at present vacant.

As I wish to occupy that house I request you to let me know if you are willing to rent it to me.

On receipt of your letter, I shall speak to you in person.

Yours faithfully,
Narayanaswamy Nayagar.

குடியிருக்கும் விலாசம்,

தேதி.

ம-ரா-ரா-ஸ்ரீ

வி. எஸ். ஞானசுந்திர செட்டியார், அவர்கள்,
36, மலையப்பன் தெரு, மண்ணடி.

ஐயா,

ஆஸ்பத்திரி வீதியில் தற்சமயம் காலியாயிருக்கும் மூன்றும் நெம்பர் வீட்டிற்குத் தாங்கள் சொந்தக்காரர் என்று தெரிய வருகிறது.

அவ் வீட்டில் நான் வசிக்க விரும்புகிறபடியால் அதை எனக்கு வாடகைக்கு விட முடியுமா என்பதைத் தயை செய்து தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
நாராயணசாமி நாயகர்.

வீட்டை ரிப்பேர் செய்ய.

To repair the House.

Dear Sir,

I, the tenant of your house at No. 17, Seppings Road, have to inform you that the house is urgently in need of repairs. Owing to the heavy rains we have been having lately, the out-house has fallen and also damaged some of our furniture.

I am put to great inconvenience for want of a house and hence hope you will attend to the repairs of construction earlier.

Viyasarpadi,
15-11-34.

Yours faithfully,
Balakrishnan.

ஐயா,

செப்பிங்ஸ் வீதி 17-ம் நெம்பருள்ள தங்களுடைய வீட்டில் குடித்தனக்காரராய் இருக்கும் நான் தெரிவிப்பது:- மேற்படி வீட்டை அவசரமாய்ப் பழுது பார்க்கவேண்டுவது அவசியம். சமீபத்தில் பெய்த பெரு மழையினல் வீட்டின் வெளிப்பாகம் விழுந்து எம்முடைய மரச்சாமான்களில் சிலவற்றை நாசமாக்கிவிட்டது.

நான் வீட்டிற்காகப் பெரிதும் தேவையுற்று அசௌகரியப்பட்டுக்கொண் டிருக்கின்றதினல் நீங்கள் சீக்கிரம் கவனித்துக் கட்டி முடிப்பீர்களென்று நம்புகிறேன்.

வியாசர்பாடி,
15-11-34.

உங்கள் நம்பிக்கையுள்ள,
பாலகிருஷ்ணன்.

வீட்டைக் காலி செய்துவிடல்

Vacating the House

Sir,

I am quite tired of writing to you about the condition of your house, in which I live, but you have not paid any attention.

Please take notice that I have vacated your house this morning, having shifted to No. 22, Dickenson Road, where you can meet me and take the rent due to you.

Bangalore,
25-11-34

Yours faithfully
L. Subramanya Nayagar.

ஐயா,

நான் வசித்துக்கொண்டிருக்கும் தங்கள் வீட்டின் நிலை மையைப்பற்றி நான் தங்களுக்குப் பலமுறை எழுதி அலுத் துப் போனேன். நீங்கள் என்னமோ கவனிக்கவில்லை.

நான் இன்று காலையில் உம்முடைய வீட்டைக் காலி செய்துவிட்டு டிக்கன்ஸன் வீதியில் உள்ள 22-ம் நெ. வீட் டிற்குக் குடி போய்விட்டேன் என்பதை அறியவும். அங்கு வந்து நீர் என்னைச் சந்தித்து உமக்குச் சேரவேண்டிய வாடகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பங்களூர்,
25-11-34.

உமது நம்பிக்கையுள்ள,
எல். சுப்பிரமணிய நாயகர்.

வாடகை கேட்டல்—Demanding Rent

To

Mrs. Kamalammal,
Pallavaram Cantonment.

Madam,

I am sorry you have not paid the house-rent for the last three months. So I request you to make an early settlement of the same.

Madras
26-11-34

Yours truly
Nagarathinammal.

ஸ்ரீமதி கமலம்மாள் அவர்களுக்கு,
பல்லாவரம் கன்டோன்மென்ட்.

அம்மணீ,

சென்ற மூன்று மாதங்களாகத் தாங்கள் வீட்டு வாடகையைக் கொடுக்காததைப்பற்றி நான் விசனப்படுகிறேன். ஆகையால், தயவு செய்து கூடியசீக்கிரம் ஒரு முடிவு செய்யுமாறு கோருகிறேன்.

சென்னை,
26-11-34.

தங்கள் உண்மையுள்ள,
நாகரத்தினம்மாள்.

பதில்—Reply

I enclose a cheque on the Bank of Imperial for Rs. 120 in full settlement of our account towards the rent.

Please send me a receipt for the same and oblige.

Pallavaram,
28-11-34.

Yours sincerely,
R. Kamalammal

அம்மணீ,

வாடகை சம்பந்தமாக உங்களுடைய முழுக் கணக்கின் படி இம்பீரியல் பாங்குக்கு நான் இதனோடு ஒரு செக் வைத்தனுப்பி யிருக்கிறேன்.

தயை செய்து அதற்காக ஒரு ரசீது அனுப்புமாறு கோருகிறேன்.

பல்லாவரம், 28-11-34. } உங்கள் உண்மையுள்ள, ஆர். கமலம்மாள்.

கணக்கை அனுப்பும்படி எழுதுதல்

Asking to send accounts

Dear Sirs,

Will you please let me know my accounts for January and February 1934 as I want to settle them. I would have called for them earlier had I been in town.

Bangalore, 28—11—34. } Yours faithfully, L. Saravana Nayagar.

அன்புள்ள ஐயன்மீர்,

நீங்கள் தயைசெய்து 1934-ம் வருஷத்திய ஜனவரி பிப்ரவரி மாதத்தில் என்னுடைய கணக்கை எனக்குத் தெரிவியுங்கள். நான் அதை முடிவு செய்யப் போகிறேன். நான் ஊரில் இருந்திருந்தால் இதற்கு முன்னரே அதைப் பற்றிக் கேட்டிருப்பேன்.

பெங்களூர், 28—11—34. } தங்கள் நம்பிக்கையுள்ள, எல். சரவண நாயகர்.

கணக்குப் பிழையை அறிவித்தல்

Informing the mistake in the account.

Gentlemen,

I am herewith returning your bill, sent to me this morning. Three of the articles placed on my account were never purchased by me. I have ticked the items in red pencil and believe you will find the errors you have made in looking to your account book.

On receipt of a corrected bill, I shall be happy to clear my account.

Madras.
15—12—34.

Yours faithfully,
Nithyakalyani Ammal.

பெரியீர்,

இன்று காலையில் நீங்கள் எனக்கு அனுப்பிய சாமான்களின் விவரமடங்கிய பட்டியை இதோடு அனுப்பியிருக்கின்றேன். அதில் என் கணக்கில் குறிக்கப்பட்டிருக்கின்ற மூன்று சாமான்கள் என்னால் வாங்கப்படவில்லை. அந்தச் சாமான்கள் இன்னவை என்று அறிவதற்காக நான் அவற்றைச் சிவப்பு பென்ஸலால் அடையாளம் செய்திருக்கிறேன். நீங்கள் உங்கள் கணக்குப் புஸ்தகத்தைப் பார்ப்பீர்களானால் நீங்கள் செய்த தவறை நீங்கள் கண்டுபிடிப்பீர்களென்று நான் நம்பிகிறேன்.

சரியாகத் திருத்தின பட்டி எனக்குக் கிடைத்தவுடன் நான் என்னுடைய கணக்கைச் சந்தோஷத்துடன் தீர்த்து விடுவேன்.

சென்னை,
15—12—34.

தங்கள் நம்பிக்கையுள்ள,
நித்தியகல்யாணி அம்மாள்.

மன்னிப்புக் கேட்டல்—Apology Letter

Sir,

I request you to kindly accept my sincere apology for my misbehaviour of yesterday. I am sorry for it and promise never to let such a thing occur again.

Your obedient servant,
R. Thangavelu Pillai.

Kondithope.

ஐயா,

நான் நேற்றையதினம் ஒழுங்கீனமாய் நடந்துகொண்டமைக்காக நான் தங்களை மனமுவந்து மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன். நான் மிகவும் மனம் வருந்துவதோடு அவ்விதமான விஷயம் மறுபடியும் நடவாதென்று உறுதி கூறுகிறேன்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன்,
ஆர். தங்கவேலு பிள்ளை.

கொண்டிதோப்பு.

அறிமுக மாக்குவித்தல்—*Letter of Introduction*

Dear Sir,

The bearer of the notice is the brother of one of my intimate friends. He is trying for a job in the local workshop. I have assured him that he will find in you a true friend and that he can depend on you for any assistance.

So I request you to kindly do him all the help that lies in your power and procure him the place sought for.

Yours very truly,
Kuppuswamy Pillai.

Chinna Manovaram,
14—12—34

அருமை ஐயா,

இக்கடிதத்தைக் கொண்டுவருகிறவர் என்னுடைய அருமை நண்பர்களில் ஒருவருடைய சகோதரராவர். அவர் உள்ளூரில் உள்ள தொழிற்சாலையில் ஏதாவது ஒரு வேலைக்காக முயற்சி செய்கிறார். உங்களை ஓர் உண்மை சிநேகராக மதித்து உங்களிடம் எந்த உதவியையும் எதிர்பார்க்கலாமென்று நான் அவருக்கு உறுதி கூறியிருக்கிறேன். ஆகையால், தயைகூர்ந்து உங்களால் கூடிய வரையில் முயற்சி செய்து அவருக்குக் குறிப்பிட்ட இடத்தில் வேலை கிடைக்குமாறு செய்வீர்களென்று நம்புகிறேன்.

சின்ன மலைவரம், 14—12—34. } தங்கள் முழு உண்மையுள்ள, R. குப்புசுவாமி பிள்ளை.

நற்சாக்ஷிப் பத்திரம்—Testimonial.

"Sundara Villa"
Madras, 17—12—34.

I know the bearer Mr. Krishnamurthi Rao for the last 3 years and have much pleasure in stating that I have a very high opinion of his abilities. He was an account clerk in the office of Amirtha Gunabodhini for nearly two years and left it of his own accord. He then joined the Military Department as a Store-keeper, but owing to ill-health he resigned it. I have no doubt he will give entire satisfaction to his superiors. He has a quick and fair hands and his conduct is good.

Ramanuja Iyengar.

"சுந்தர வில்லா"
மதராஸ், 17-12-34.

மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி ராவ் அவர்களை நான் கடந்த மூன்று வருட காலமாக அறிவேன். அவருக்குள்ள திறமையைப்பற்றி எனக்கு மிகவும் உயர்ந்த அபிப்பிராயம் உண்டென்பதை நான் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர் அமிர்த குணபோதினி ஆபீஸில் இரண்டு வருடம் குமாஸ்தாவாக யிருந்து அவராகவே விட்டுவிட்டார். பிறகு அவர் இராணுவ இலாகாவில் பண்டசாலையாளராக அமர்ந்து பின்னர் தேக அசௌக்கியத்தினால் அவ்வேலையை இராஜினாமா செய்துவிட்டார். தமக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு அவர் முழுத் திருப்தியையும் உண்டாக்கத் தக்கவர் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அவர் ஒழுங்கும் சுறுசுறுப்பும் உடையவர். அவர் நடத்தை மிகவும் உயர்வானது.

ராமானுஜ ஐயங்கார்.

ராஜினாமா கொடுத்தல்—Resignation Letter.

(1)

Dear Sir,

I request you to kindly accept this as my immediate resignation for the post I hold in your office. I am much disappointed to see that my case was entirely overlooked in the time of promotion while my far juniors were considered favourably.

I beg to remain,
Dear Sir,
Your most obedient servant,
Shanmugam Pillai.

Kalpakkam,
16—11—34.

அருமை ஐயா,

தயை செய்து இதை நான் தங்கள் ஆபீசில் வகித் திருக்கும் உத்தியோகத்தின் இராஜிநாமாவாக எண்ணி விரைவாக அங்கீகரிக்கும்படி வேண்டுகிறேன். சம்பளத்தை உயர்த்தும் காலத்தில் எனக்குப் பின் வந்தவர்களுக் கெல் லாம் நன்மை செய்திருக்க, என் விஷயத்தில் முற்றிலும் பராமுகம் செய்தமையால் நான் மிகவும் ஏமாறிவிட்டவ னுயினேன்.

தங்கள் எச்சரிக்கையும்
கீழ்ப்படிதலுமுள்ள ஊழியன்,
ஷண்முகம் பிள்ளை.

கல்பாக்கம்,
16-11-34.

---

(2)

Dear Sir,

I am really sorry to inform you that I must tender my resignation of the post I hold under you for the last two years. I have to do so as I have procured a better appointment with better prospects.

I request you to accept my thanks for all the kindness shown to me by you while serving under you.

I beg to remain
Dear Sir,
Your most obedient servant,
Ramaswamy Pillai.

Kathervedu,
14—12—34.

அருமை ஐயா,

சென்ற இரண்டு வருட காலமாக நான் தங்களிடம் வகித்திருந்த உத்தியோகத்தை இராஜினாமா செய்வதை உங்களிடம் தெரிவிப்பதற்கு உண்மையிலேயே வருந்துகிறேன். நல்ல முன்னேற்றத்திற்காக நல்லதொரு உத்தியோகத்தை நான் தேடிக்கொண்டமையால் நான் இவ்வாறு செய்ய நேர்ந்தது. நான் தங்களிடம் வேலை செய்த காலத்தில் தாங்கள் என்னிடம் காட்டிய பேரன்புக்காக நான் செலுத்தும் வந்தனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தங்கள் எச்சரிக்கையும்,
கீழ்ப்படிதலுள்ள ஊழியன்,
ராமசாமி பிள்ளை.

காதர்வேடு,
14—11—34.

சிபார்சு கடிதம்—**Recommendation Letter.**

My dear Thangavel,

The bearer informs me that there is a vacancy of a Shroff's post in your bank and has asked me to recommend him to you. I have great pleasure in doing so as I consider him honest, intelligent and hard working. I have no doubt he will prove a good Shroff.

Hope you would kindly help him.

Yours sincerely,
R. Naga Pillai.

Chinnamanovaram,
27—12—34.

என் அருமை தங்கவேலுக்கு,

இக் கடிதத்தைக் கொண்டு வருகிறவர் உன்னுடைய பாங்கியில் ஒரு ஷராப் வேலை காலியாயிருக்கிறதாகக் கூறி, உன்னிடம் தம்மைச் சிபார்சு செய்யும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் யோக்கியதையும், புத்திசாலித்தனமும், கஷ்டப்பட்டு உழைக்கும் குணமும் உடையவராதலின் அவர் இஷ்டப்படி சிபார்சு செய்ய எனக்கு எவ்வளவோ சந்தோஷ முண்டாகிறது. ஷராப் உத்தியோகத்தில் தாம் சிறந்தவர் என்பதை அவர் நடத்தையில் காட்டுவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நீ அவருக்கு உதவி செய்வாயென்று நம்புகிறேன்.

சின்னமனூர், 27—12—34.

உனது உண்மையான,
ஆர். நாகப் பிள்ளை.

குறிப்பு:—

ஆங்கிலத்தில் கடிதம் எழுதும் மாதிரிகள் சிலவற்றையும், அவை எவ்வெப்போது யார் யாருக்கு எழுதப்பட வேண்டுமென்பதையும் தெளிவாகக் காட்டியிருக்கிறும். படிப்போர் விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே ஒவ்வொன்றுக்கும் தமிழ் அர்த்தமும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது.

அவசரகாலத்தில் டாக்டருக்கு கடிதமெழுதுதல்

Urgent Letter to a Doctor

To (1)

Dr. V. S. Sambandham Chettiar, L. M. P.
Mallesvaram Dispensary, Bangalore.

Sir,

Will you be good enough to call at my residence No. 5. Avenue Road, to examine my younger brother Venkatachalam who is suffering from fever for the past three days. The charge of your visit will be borne by me.

Yours sincerely,
S. Gnanasundaram.
5, Avenue Road.

Bangalore,
15—12—34.

டாக்டர் வி. எஸ். சம்பந்தம் செட்டியார், எல். எம். பி,
மல்லேஸ்வரம் டிஸ்பென்சரி, பெங்களூர்.

ஐயா,

ஒரு துறவியைத் தலையின்மீது கல்லால் கோபத்துடன் அடித்ததாக ஓர் உத்தியோகஸ்தனைப்பற்றி ஒரு கதை சொல்லப் பட்டிருக்கிறது. அப்போது பழிக்குப் பழி வாங்க அந்த மனிதனுக்கு வலுவில்லாமலிருந்தது. ஆனல், அந்த உத்தியோகஸ்தன் மீது அரசன் கோபமடைந்து அவனை ஒரு பள்ளத்தில் அடைத்துவைக்கும் காலம் வரும் வரையில் அவர் (அந்தத் துறவி) அந்தக் கல்லைத் தன்னருகிலேயே வைத்திருந்தார்.

அப்பால் அந்தத் துறவி வந்து அந்தக் கல்லினுலேயே அந்த உத்தியோகஸ்தனைத் தலையின்மீது அடித்தார், "நீயார்? ஏன் என்னைத் தலையின்மீது ஒரு கல்லால் தாக்கினுய்?" என்று அந்த உத்தியோகஸ்தன் கேட்டான்.

"நீ அந்த நாளில் என்மீது எறிந்த கல் இதுவேதான்" என்ருர்.

"இந்த நீண்டகாலமாக நீ எங்கே போயிருந்தாய்?" என்று உத்தியோகஸ்தன் மறுபடியும் கேட்டான்.

"உன்னுடைய அந்தஸ்தைக் கண்டு யான் பயமடைந்திருந்தேன். ஆனல் இப்போது உன்னை இந்தக் குகையில் கண்டதும் உனக்குத் தகுமானபடி திருப்பியளிக்க இச் சமயத்தை யான் கைக்கொண்டேன்" என்று மற்றவர் (துறவி) பதிலளித்தார்.

The King's son and the Teacher.

A king handed over his son to a teacher and said, "This is my son; educate him as one of thine own sons." The teacher spent some years without success in trying to teach him, but his own sons

became more and more clever every day.

The king was angry with the teacher and said, "Thou hast not been faithful to thy promise."

He replied, "Oh king! The teaching is the same, but minds differ.

அரசனது மகனும் உபாத்தியாயரும்

ஒரு அரசன் தன்னுடைய குமாரனை ஓர் உபாத்தியாயரிடத்தில் ஒப்புவித்து, "இவன் என்னுடைய குமாரன்; இவனை தங்களுடைய குமாரர்களில் ஒருவரைப்போலக் கருதி இவனுக்குக் கல்வி கற்பியுங்கள்" என்று சொன்னன் அவனுக்குப் பாடம் கற்பிப்பதில் யாதொரு பயனுமில்லாமல் சிலவருட காலத்தை உபாத்தியாயர் கழித்தார். ஆனல், அவருடைய சொந்தப் பிள்ளைகள் பிரதி தினமும் அதிக கெட்டிக்காரர்களாய்க் கொண்டிருந்தார்கள்.

அரசன் உபாத்தியாயர் மீது கோபங்கொண்டு, "உன்னுடைய வாக்குத் தத்தத்திற்கு நீ உண்மையாய் நடக்கவில்லை" என்றன்.

"ஓ அரசனே! நான் போதிக்கும் கல்வி ஒரே மாதிரியானதுதான். ஆனல் மூளைகள் வித்தியாசப்படுகின்றன" என்று உபாத்தியாயர் பதிலளித்தார்.

The Blind Boy

1. Oh! say, what is that thing called light
Which I must never enjoy?
What are the blessings of the sight?
Oh, tell a poor blind boy!

2. You talk of wondrous things you see;
You say the sun shines bright;
I feel him warm, but how can he
Or make it day or night?

3. My day or night myself I make
Whene'er I sleep or play,
And could I always keep awake,
With me'twere always day.

4. With heavy sighs I often hear
You mourn my helpless woe;
But sure with patience I can bear
A loss I never can know.

5. Then let not what I cannot have
My cheer of mind destroy ;
While thus I sing I am a king,
Although a poor blind boy.

குருட்டுப் பையன்

1. நான் ஒருபோதும் அனுபவிக்க முடியாத வெளிச்சம் என்று சொல்லப்படுகிற அந்த வஸ்து என்ன என்பதை, ஓ! எனக்குச் சொல்லுங்கள். கண்ணினுடைய ஆசீர்வாதங்கள் (நன்மைகள்) என்ன? ஓ! ஒரு ஏழைக் குருட்டுப் பையனுக்குச் சொல்லுங்கள்.

2. நீங்கள் பார்க்கிற ஆச்சரியமான வஸ்துக்களைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள் ; சூரியன் வெளிச்சமாகப் பிரகாசிக்கிறதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள் ; நான் அது உஷ்ணமாயிருப்பதை அறிகிறேன். ஆனால், அது எப்படிப் பகலையாவது இரவையாவது செய்யக்கூடும் ?

3. நான் தூங்கும்போதாவது விளையாடும்போதாவது என்னுடைய பகலையாவது இரவையாவது நானே செய்து கொள்கிறேன். நான் எப்போதும் விழித்துக்கொண்டேயிருப்பேனுகில் எனக்கு எப்போதும் பகலாகவே யிருக்கும்.

4. என்னுடைய சந்தோஷமற்ற துன்பத்தைப்பற்றி அதிக பெருமூச்சுடன் நீங்கள் துக்கிப்பதை நான் அடிக்கடி கேள்விப்படுகிறேன். ஆனால், நான் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாத ஒரு நஷ்டத்தைப்பற்றிப் பொறுமை யுடன் உண்மையில் நான் சகித்துக்கொள்ளக்கூடும்.

5. அப்படியானால் யான் அடைய முடியாததைப் பற்றி (நினைத்து) என் மனத்தின் ஆனந்தத்தை அழித்து விடவேண்டும். நான் ஓர் ஏழைக் குருட்டுப் பையனாயிருந்த போதிலும் இப்படி நான் பாடும்போது நான் ஓர் அரசனைப் போலிருக்கிறேன்.

The Three Rules

1. What is the Iron Rule?
The rule of savage men,
If evil is done unto you
Evil do thou again
This is the Iron rule.

2. What is the Silver Rule?
The rule of the worldly men,
If good your neighbour does to you
Do good to him again,
This is the Silver rule?

3. What is the Golden Rule?
The rule of righteous men,
If evil is done unto you,
Return thou good again,
This is the Golden Rule.

மூன்று விதிகள்

1. மூரடர்களுடைய விதியா யிருக்கிற இரும்பு (அதம) விதி என்ன? உனக்குக் கெடுதி செய்யப்பட்டால் நீ மறுபடியும் கெடுதியையே செய். இதுதான் இரும்புவிதி.

2. லௌகீக மனிதர்களுடைய விதியாகிய வெள்ளி (மத்திம) விதி என்ன? உன்னுடைய அயலான் உனக்கு நன்மையைச் செய்தால் அவனுக்கு மறுபடியும் நன்மையையே செய். இதுதான் வெள்ளி விதி.

3. நீதிமான்களுடைய விதியாகிய பொன் (உத்தம) விதி என்ன? உனக்குக் கெடுதி செய்யப்பட்டாலும் நீ மறுபடியும் நன்மையையே திருப்பிச்செய். இதுதான் பொன் விதி.

The Fox and the Goat

A fox and a goat travelling together on a sultry day found themselves very thirsty. Looking round the country in order to find a place where they might get water, they at length saw a clear spring at the bottom of a pit. They both eagerly descended and having quenched their thirst, thought it was time to consider how they should get out.

They formed many plans but could not agree upon any. At last the crafty and selfish fox cried out with great joy "A thought has just come into my head; Do you," said he to the goat, "Rear yourself on your hinder legs, pnd rest your forefeet against the side of the ait; I will then climb up to your head from

which I shall be able to reach the top and when I can go once there it will be easy enough for me to pull you out by the horns''.

The simple goat forgot that the fox had not strength to drag him up; so he placed himself at once as directed.

Then the fox, as he had proposed, climbed on his companion's back, stepped on his head and gained the top of the well in safety.

"Now then," said the goat "You are to give me the help you spoke of."

"You old fool." replied the fox, "If you had but half as much sense as you have beard, you would never have believed that I will risk my own life to save yours. However, I will give to you hereafter. If you should ever have the good luck to escape from his danger, never venture into a pit again till you have will considered how to get out of it."

"True, said a crow who was perched on the top of the well and had seen all that had taken place; "but I, for my part, would rather be the good-natured though imprudent goat at the bottom of the well than the selfish crafty fox at the top of it".

நரியும் வெள்ளாடும்

கோடைக் காலத்தில் ஒருநாள் நரியும் வெள்ளாடும் ஒன்றுப்போய்க் கொண்டிருந்தபோது தாக மடைந்தன. தண்ணீர் பெறக்கூடிய ஓர் இடத்தைக் கண்டு பிடிப்பதற்காக அந்த நகரத்தைச் சுற்றிக் கடைசியில் ஒரு பள்ளத்தின் கீழ்

பரிசுத்தமான ஓர் ஊற்றைக் கண்டன. அவை யிரண்டும் ஆவலுடன் இறங்கின. தங்களுடைய தாகத்தைத் தணித்துக்கொண்டபிறகு, அவைகள் எப்படி வெளியே வரக்கூடுமென்பதைப்பற்றி யோசிக்க நேரமாயிற்றென நினைத்தன.

அவைகள் பலவித யோசனைகள் செய்தன. ஆனால், ஒன்றிற்கும் சம்மதப்படவில்லை. கடைசியில் தந்திரமும் சுயநலமுமுடைய அந்த நரி அதிக சந்தோஷத்துடன் "இப்போது என் புத்திக்கு ஓர்யோசனை எட்டிற்று," என்று உரக்கக் கூறியது. "நீ உன்னுடைய பின்காலை யூன்றி நின்று கொண்டு முன்கால்களை இந்தப்பள்ளத்தின் ஓரத்தில் வைத்துக்கொள். அப்பால் நான் உன்னுடைய தலைவரையில் ஏறி, மேற்புறத்தை அடைந்துவிடக்கூடும். நான் மேலேயிருக்கும்போது உன் கொம்புகளைப் பிடித்து உன்னை இழுத்துக்கொள்ள அதிக சுலபமாயிருக்கும்" என்று அதுவெள்ளாட்டிற்குச் சொல்லிற்று.

கள்ளங்கபடமற்ற அந்த வெள்ளாடு தன்னை மேலே இழுத்துக்கொள்ள நரிக்குப் பலமில்லை என்பதை மறந்துவிட்டது. ஆகையால், அது நரி சொன்னபடியே நின்றது.

அப்பால் நரி தான் யோசித்ததுபோலவே தன் கூட்டாளியின் முதுகின்மேல் ஏறித் தலைவரையில் வந்து சுகமாகக் கிணற்றின் மேற்புறத்தைச் சேர்ந்தது.

"அப்படியானால் இப்போது நீ சொன்ன மாதிரியாக எனக்கு உதவி செய்யவேண்டியிருக்கிறது," என்று வெள்ளாடு சொல்லிற்று.

"அடகிழமூடமே! உனக்குத்தாடியிருப்பதுபோல அதில் பாதி அவ்வளவு மூளையிருந்தால் உன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக என்னுடைய உயிரை நான் ஆபத்திலிடுவேன் என்பதை நீ ஒருபோதும் நம்பியிருக்கமாட்டாய், என்று நரி பதிலளித்தது. "எப்படியான

போதிலும், இனிமேல் உனக்கு உபயோகமா யிருக்கக் கூடிய ஒரு சிறு புத்திமதியை யான் கொடுக்கிறேன். இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய நல்லதிர்ஷ்டம் உனக்கிருக்குமானால், "எப்படி வெளியில் வருவது என்பதை நன்றாக யோசித்து முடிகிறவரை ஒரு பள்ளத்தில் எப்போதும் இறங்காதே" என்றது.

அந்தக் கிணற்றின் மேற்புறத்தில் உட்கார்ந்து நடந்தவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு காக்கை, "அது உண்மைதான்; ஆனால் நான், என்மட்டில் மேற்புறத்திலிருக்கும் தந்திரமும் சுயநலமுமுடைய நரியைப்போலிருப்பதைவிட மதியற்ற போதிலும் நற்குணமிருந்து கிணற்றின் அடிப்புறத்திலிருக்கும் வெள்ளாட்டைப்போலிருப்பேன்" என்று சொல்லிற்று.

Knowledge and Feeling

There are two important faculties in man namely the heart and the intellect. Each of these must be developed, but not the one at the expense of the other. They are placed together that each may help and guide the other, like a pair of horses drawing a carriage. The business of the heart is to feel, and to love; but it often makes mistakes; then reason comes to its help and corrects it. For example the old man in his death-bed weeps for the children born and yet unborn he is leaving behind; but reason tells him, that he is trusting to broken reeds, that children, friends, relatives, wealth, and lands follow him not beyond his grave, that he has to make his journey all alone. It is the business of reason to discriminate, argue and to

judge, and left to itself, it also makes mistakes, which the heart corrects. "Stay," says an alchemist to his weeping wife in a novel, "stay I have decomposed tears, they contain a little phosphate of lime, some chloride of soda, some mucus and some water." To him weeping meant only that much. Here the heart says, "Learned idiot! Look behind it is the heart that weeps." Thus the heart and the head correct and develop each other and produce a perfect man, who is a beautiful combination of the head and heart.

அறிவும் உருக்கமும்

மனிதனிடம் இரண்டு சக்திகள் இருக்கின்றன; அவை இருதயமும் புத்தியுமே. இவற்றில் ஒவ்வொன்றும் விருத்தியடையவேண்டுமே யல்லாது, ஒன்று மற்றொன்றைவிட அதிகமாக விருத்தியடையக் கூடாது. ஒரே வண்டியை இழுக்கும் இரட்டைக்குதிரைகளைப்போல ஒன்று மற்றொன்றுக்கு உதவி புரிந்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்றே, இவை இரண்டும் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. உருகுவதும் அன்பு பாராட்டுவதுமே இருதயத்தின் தொழில். ஆனல், அது அடிக்கடி தவறுகிறது. அப்பொழுது புத்தி அதற்கு உதவியாக வந்து அதைத் திருத்துகிறது. உதாரணமாக: ஒரு கிழவன் இறக்கும் தருணத்தில் தான் விட்டுப்போகும் சிறு குழந்தைகள், இனிப் பிறக்கும் குழந்தைகள் ஆகிய இவையெலலாம் மயானம் தாண்டி வருமா? நீ தனித்துத்தான் போகவேண்டும் என்று கூறும், புத்தியின் தொழில் பகுத்தறிவது, தர்க்கம் செய்வது தீர்மானிப்பது ஆகிய இவைகளே. இது தனித்து விற்குங்கால் இதுவும் தவறிவிடும். இதை இருதயம் திருத்தும், ஒரு நாவலில் ஒரு ரஸாவதி கண்ணுங் கண்ணீருமாக யிருந்த தன் மனைவியை நோக்கி, "இரு! நிறுத்து! நான் கண்

ணீரைப் பிரித்தறிந்துவிட்டேன்; அதனுள் எலும்புச் சாம் பல், உப்பு, களி, கொஞ்சம் தண்ணீர் ஆகிய இவைகள் தான் உள்ளன," என்றான். இவனுக்கு அழுகை என்றால் இது தான் என்று தோற்றியது. இங்கு இருதயம் புகுந்து, "கற்றறிமூடா! உற்றுப்பார்! இருதயமல்லவோ கரைகின் றது" என்று கூறித் திருத்தும். இவ்வாறு ஒருவனிடமிருக் கும் இருதயமும் புத்தியும் ஒன்றை ஒன்று திருத்திவிருத்தி யாகி இரண்டும் வெகு அழகாகச் சேர்ந்து அமைந்துள்ள வனாகிய தேர்ந்த மனிதனை உண்டாக்கும்.

What changes the way of the wind ?

Like almost everything else, the air is always moving more or less, and changes in the direction of its movements are due to many different things. There is, for instance, the movement of the earth on itself, and also is changing position in regard to the sun, as it goes round the sun. These movements mean that different parts of the earth are exposed to the sun at different times ; and that means of course, that different parts of the air are exposed, to the sun at different times; When the sun shines on the air, it makes it warm and warm air is lighter than cold air, and will rise while cold air will flow in to take its place. But there is a great deal more in it than this. Besides the fact that the surface of the earth is not smooth, but has mountains and hills that turn the wind as the earth turns and tracts of water which cool the air as it passes over them, there are all sorts of electrical changes always going on in the air, and these possibly affect its weight-perhaps

even the proportion of the various gases in it—even as much as the heat of the sun affects it. You can scarcely ask more difficult questions than these about wind, rain and weather.

காற்றின் போக்கை மாற்றுவது யாது?

மற்றைய வஸ்துக்களைப்போல வாயுவும் ஓயாது சற்றேறக்குறைய அசைந்துகொண்டே இருக்கிறது. இந்த அசைவுகளின் போக்கு மாறுவது பல விஷயங்களைப் பொறுத்தது. உதாரணமாக, பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வது, சூரியனைச் சுற்றிப் போகுங்கால் அது விஷயமாக உண்டாகும் இடம் மாற்றம் ஆகிய இவைகளை எடுத்துக்கொள்ளலாம்; இந்த மாற்றங்களால் வெவ்வேறு காலங்களில் பூமியின் வெவ்வேறு பாகங்கள் சூர்யனுக்கு எதிரே வருகின்றன; அதாவது சூர்யனுக்கு எதிரே சாதாரண வாயுவின் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு காலங்களில் வருகின்றன என்பதாகிறது. சாதாரண வாயுவில் வெயில் காயும்பொழுது அது சூடாகின்றது; சூடானவாயு குளிர்ந்த வாயுவைவிட இலேசாக மேலே கிளம்புப்; அப்போது அது இருந்த இடத்தை நிரப்ப குளிர்ந்தவாயு ஓடிவரும். இந்தக் கேள்வியின் விடையில் இதைவிட ஏராளமான விஷயங்கள் அடங்கியுள்ளன. மட்டமாக இல்லாது மலைகளையும் குன்றுகளையும் யுடைய பூமியின் மேற்பரப்பு அது சுற்றுங்கால், வாயுவின் போக்கை மாற்றுகின்றது; இங்குள்ள நீர் நிலைகள் மேலே ஓடும் காற்றைக் குளிரவைத்து அவைகளின் போக்கை மாற்றுகின்றன; இவைகளோடுங்கூட வாயுவில் பலவிதமான மின்சார மாறுபாடுகள் ஓயாது நடைபெறுகின்றன. ஆதலால் இவைகளும், சூர்ய உஷ்ணத்தைப்போல சாதாரண வாயுவின் நிறையையாவது, அதனுள் அடங்கியிருக்கும் வாயுக்களின் அளவையாவது பாதிக்கலாம்; காற்று, மழை, வாயுவின் நிலை இவைகளைப்பற்றி இதைவிடக் கடினமான கேள்விகள் கேட்கவே முடியாது.

Earliest Grief

The first sense of sorrow I ever knew was upon the death of my father, at which time I was not quite five years of age; but was rather amazed at what all the house meant, than possessed with a real understanding way nobody was willing to play with me. I remember I went into the room where his body lay, and my mother sat weeping along by it. I had my battledore in my hand, and fell abeating the coffin, and calling pappa, for I know not how I had some slight idea that he was locked up there. My mother caught me in her arms, and transported beyond all patience of the silent grief she was before in, she almost smothered me in her embraces: and told me in a flood of tears, 'Pappa could not hear you, and would play with you no whence he could never come to us again." She was a very beautiful woman, of a noble spirit, and there was a dignity in her grief amidst all the wildness of her transport, which thought struck me with an instinct of sorrow, that before I was sensible what it was to grieve, seized my very soul and has made pity the weakness of my heart ever since.

துயரத் தொடக்கம்

துயர உணர்ச்சி எனக்கு முதலில் தோன்றியது என் தகப்பனார் இறந்தபோதுதான். அப்பொழுது எனக்கு வயது ஐந்துகூட முடியவில்லை. என்னுடன் விளையாட ஒருவரும் வராததற்குக் காரணம் இன்னது என்ற நிஜ உணர்வைவிட, என் மனத்தில் வீட்டிலுள்ளோர் கருத்து விளங்காமையால் ஏற்பட்ட வியப்பே மிகுந்திருந்தது

அவரது சவமிருந்த அறைக்குள் போனதுபோல ஞாபகம் வருகிறது. என் தாய் தனிமையாக அதனருகே இருந்து அழுதுகொண்டிருந்தாள். என் கையில் பந்தடி மட்டை இருந்தது. "அப்பா! அப்பா!" என்று கூவிக்கொண்டு பிணப் பெட்டியை அடிக்கத் தொடங்கிவிட்டேன். 'அங்குத்தான் பூட்டப்பட்டிருக்கிறார் அவர்' என்று எனக்கு அப்பொழுது ஒருவாறு விளங்கியது. இவ்வாறு என்றுகூற முடியவில்லை. என் தாய் என்னை வாரிச்சேர்க்க, அவள் அனுபவித்து வந்த உள் துயரம் பொறுக்க முடியாமல் வரம்பு மீறிவிட, என்னை மூச்சுவிட முடியாது கட்டி அணைத்து, "அப்பாவுக்கு நீ சொல்வது கேளாது; உன்னோடு இனி விளையாட வரவே மாட்டார்; எல்லோரும் அவரைக் குழியில்போட்டு மூடிவிடுவார்கள்; அவர் நம்மிடம் திரும்பியும் வரமாட்டார்" என்று கண்ணுங் கண்ணீருமாய்க் கூறினாள். அவள் மிகுந்த அழகும் பெருந்தன்மையும் வாய்ந்தவள்; அவளிடமிருந்த வரம்பு மீறின கொடிய துக்கத்தில் இருந்த மேன்மை, துக்க உணர்ச்சியை என்னிடம் புகுத்தி விட்டதுபோலத் தோற்றிற்று. துயரப்படுவது இன்னது என்று விளங்கும் முன்னரே என் மனத்தைத் துயரம் நேரே கொள்ளைகொண்டு விட, அன்றுமுதல் இரங்குவதே என் கோழை மனத்தின் மூக்கியமான தளர்ச்சியாகிவிட்டது.

Greatness of Man

Man has been called the 'roof of creation' but he can hardly be so called if we take his body alone into account. Though he is 'admirable,' as Shakespeare puts it 'in form and moving' animal there are which are stronger, more beautiful, more majestic

and better than he is, in the qualities of the body. *Huxley* considers the horse the best built animal in creation. There is a majesty about the tusked Indian elephant to which the best wrestler can lay no claim. The bearing of a Lion is more royal than that of a born king. The gait of a wellbread bull of Southern India would shame that of a warrior. The peacock's spreading its feathers is a splendid festival. Not even Nurjehan had the soft complexion of a parrot, the skylark is much more free than man chained down to earth. The cobra that spreads its hood at the sound of music, is almost divine while Garuda bird that sails majestically across the sky is certainly so. The pride of man then is not therefore his body. The dignity he has and the majesty of his heaven erect face are primarily due to the gardner of the spirit that shines from within.

மனிதனின் சிறப்பு

மனிதன் சிருஷ்டியுள் சிறந்தவன் என்று மதிக்கப் படுகிறான். ஆனால், அவன் உடலை மாத்திரங் கருதுங்கால் இவ்வாறு மதிக்க இடமே இல்லை. ஷேக்ஸ்பியர் கூறுவது போல அவன் வடிவிலும், நடையிலும் வியக்கத் தகுந்தவனாக இருந்தபோதிலும் பலம், அழகு, காயம், காம்பீர்யம், சிறப்பு முதலிய உடல் குணங்களில் அவனைவிட மேன்மையான ஜந்துக்களிருக்கவே இருக்கின்றன. குதிரைதான் சிருஷ்டியில் நல்ல உடற்கட்டுடையது என்று அக்ஸ்லி, மதிக்கிறார். நம் தேசத்துத் தந்தமுள்ள யானையின் காம்பீர்யம் நல்ல மல்லன் கூடத் தன்னிடமிருப்பதாகக் கருதமாட்

டான். ஹிம்ஹத்தின் ராஜ பார்வை நல்ல வம்சத்திற் பிறந்த அரசனுக்குக்கூட வாராது. கொழுத்த தென்னாட்டு எருதின் நடை போர்வீரன் நடையைப் பழிக்கும் திறனுடையது. மயில் தோகையை விரித்தாடுவது கண்குளிரும் திருவிழாப்போல் இருக்கும். கிளிபின் மினுக்கு நூர்ஜஹானுக்குக் கூட இல்லை. பூமியே கதியாகக் கிடைக்கும் மனிதனைவிட வானம்பாடி மிகுந்த ஸ்வதந்திரமுடையது. பாட்டுக் கேட்டுப் படமெடுக்கும் நாகப் பாம்பு தெய்வீகமாக விருக்கும் ஆகாயத்தில் அசையாது ஊடுருவிச் செல்லும் கருடனும் அத்தகையதே. ஆதலால், மனிதன் சிறப்பு அவன் உடலால் ஏற்படுவதல்ல. நிமிர்ந்த முகத்தால் அவனுக்கு ஏற்படும் கம்பீரமும் மேன்மையும் முக்கியமாக அவன் உள்ளே ஒளிரும் ஆத்மாவின் சிறைப்பையே பொறுத்தது.

நானாவிதமானவை—Miscellaneous

Sugar and sand may be mixed together, but the ant rejects the sand and goes off with the sugar. So pious men sift the good from the bad

மணலையும் சர்க்கரையையும் ஒன்றுகச் சேர்த்துவிட்டாலும், எறும்பானது மணலை நீக்கிச் சர்க்கரையை விரும்பிச் சொல்லுகிறது; அப்படியே நல்ல மனிதன் கெட்டவைகளில் இருந்து நல்லவைகளைக் கிரகித்துக்கொள்கிறான்.

It is true that God is even in the tiger, but we must not go and face the animal. So it is true that God dwells even in the most wicked, but it is not good that we should associate with the wicked.

புலியினிடத்திலும் கடவுள் இருக்கின்றார் என்பது உண்மையே. ஆனல், நாம் அம்மிருகத்தின் எதிரே போகக் கூடாது. அவ்விதமாகவே, துஷ்டனிடத்திலும் கடவுள் இருக்கின்றாயினும் நாம் அத் துஷ்டனோடு கூடிக் குலாவ வேண்டுமென்பது புத்திசாலித்தன மாகாது.

The soiled mirror never reflects the rays of the sun, and the impure an unclean in heart who are subject to Maya never perceive the glory of the Lord. But the pure in heart see the Lord as the clear mirror reflects the sun. Be holy, then.

அழுக்கடைந்த கண்ணுடி சூரியனது பிரகாசத்தைப் பிரதிபலிக்கச் செய்யாது. மாயை வசப்பட்டுப் பரிசுத்த மற்று மலினமடைந்த மனமுடையோர் கடவுளின் பேரானந்தத்தை அடையார்கள். எப்படிச் சுத்தமான கண்ணுடி சூரியனுடைய பிரகாசத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறதோ, அதுபோலவே பரிசுத்தமான மனமுடையவன் கடவுளைப் பார்க்கிறன். ஆகையால் பரிசுத்தமா யிரு.

You see many stars at night in the sky, but find them not when the sun rises. Can you say that there are no stars in the heaven during day time? So, O man! Because you behold not God in the days of your ignorance, say not that there is no God.

இரவில் வானத்தில் எத்தனையோ நட்சத்திரங்களைப் பார்க்கின்றாய். ஆனல் சூரியோதயமானவுடன் அவைகளைப் பார்க்க முடிவதில்லை. அதனல் பகலில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இல்லையென்று சொல்லக்கூடுமா! ஓ மனிதனே! அப்படியே உன்னுடைய அறியாமையினல் நீ கடவுளை அறியாவிட்டால் கடவுளே இல்லையென்று சொல்லி விடாதே.

It is the nature of the lamp to give light. With its help some may cook food, some may forge a deed, and the third may read the word of God. So with the help of the Lord's names some try to attain salvation, others try to serve their evil purposes and so on. His holy name, however, remains unaffected

வெளிச்சத்தைத் தருவது விளக்கின் இயற்கையாகும். அதன் உதவியைக்கொண்டு அநேகர் சமைக்கலாம், அநேகர் பத்திரத்தில் கள்ளக் கையெழுத்திடலாம், சிலர் கடவுளின் வாக்கியங்களை வாசிக்கலாம். அப்படியே கடவுளின் திருநாமத்தின் உதவியைக்கொண்டு சிலர் கிருதார்த்தராக முயல்கிறார்கள். சிலர் சில துர்க்காரியங்களைச் செய்கின்றனர். இன்னும் சிலர் எத்தனையோ காரியங்களை நடத்துகின்றனர். ஆயினும், இதனால் கடவுளின் திருநாமம் ஒரு சிறிதும் கெடாமலே இருக்கின்றது.

As one and the same material, water is called by different names by different people, one calling it *water*, another *Aqua*, a third *pani*, so the one Sat-chit-ananda, the everlasting—Intelligent—Bliss is invoked by some as *God*, by some as *Allah*, by some as *Jehovah*, by some as *Hari*, and by others as *Brahmam*.

தண்ணீர் ஒன்றுயிருந்தாலும் இதைப் பலவித ஜனங்கள் பலவிதமான பெயரிட்டு அழைக்கின்றார்கள். ஒருவர் தண்ணீ ரென்றும், மற்றொருவர் ஆக்வா என்றும், வேறு ஒருவர் பானி என்றும் பெயரிட்டழைக்கின்றனர். அப்படியே என்று யிருப்பதும், அறிவு மயமாய் விளங்குவதுமாகிய சத்-சித்-ஆனந்தத்தைச் சிலர் கடவுள் என்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஜீஹோவா என்றும், சிலர் ஹரி என்றும், வேறு சிலர் பிரம்மம் என்றும் சொல்லுகிறார்கள்.

The Merchant of Venice

There lived in the beautiful city of *Venice*, a jew named *Shylock*, who had made an immense fortune by lending money at enormous interest, to christian merchants. He exacted the payment of the money with such severity that everybody hated him, and particularly *Antonio* a young merchant. Shylock also hated Antonio in return and wanted to wreak vengeance upon him for all hatred he had shown against him.

Antonio had a bosom friend by name *Bassanio*. One day Bassanio came to Antonio and told him that he wanted to marry a rich lady whom he dearly loved. He wanted money for the same and requested Antonio to lend 3000 ducats. Antonio had no money in his hand at that time and so the two friends went to the hated jew. Antonio asked Shylock to lend 3000 ducats promising to return them with interest as soon as his ships returned back.

Shylock thought for a time, and agreed to give it on one condition that if Antonio could sign a bond stating that if the money were not paid within a certain time, Shylock is entitled for a pound of flesh from any part of the body. Antonio signed the bond for his friend's sake fully expecting the safe arrival of his ships.

Bassanio married the rich lady *Portia* and was living happily. One day he received a letter from Antonio containing fearful tidings. It said: "Sweet Bassanio! My ships were lost. My bond is forfeited; I must die. I wish to see you before my death." Bassanio with all the money he had, set out in great haste to Venice.

The day of payment had already passed. Antonio was in prison. He was brought before the *Duke of Venice* to be tried. Bassanio at that time offered to the hard hearted jew many times the sum paid by him, but the latter was stubborn. When the case was proceeding a young lawyer (no other than Portia in male dress) came to the court with a letter of recommendation from a famous lawyer. She took the case into her hands and began to argue about it. She asked the jew to be kind and merciful to Antonio. But he did not yield. Finding that all her entreaties were of no avail, she said that though the jew was entitled to a pound of flesh, he was not entitled to a drop of blood. Hence she asked him to cut off a pound of flesh without shedding a drop of blood. The jew was at his wit's end. He became mad. His lands were confiscated to the state for having attempted on the life of an innocent man. Antonio was set free, and Antonio and Bassanio praised the new lawyer (whom they

then did not know to be Portia). At home a surprise awaited them when Portia informed them that she was the lawyer. The happiness of Antonio's release was heightened by the news that his ships had reached the harbour safely. The tragical beginning of the story was forgotten and everybody lived happily.

வெனிஸ் தேச வர்த்தகன்.

வெனிஸ் நகரில், யூத ஜாதியைச்சேர்ந்த ஷைலக் என்னு மொருவன் வசித்துவந்தான். இவன் கிறிஸ்துவ வர்த்தகர்களுக்கு அதிக வட்டிக்குப் பணங் கொடுத்துத் திரண்ட திரவியத்தைச் சேர்த்துள்ளான். கொடுத்த பணத்தை வாங்குவதில் சிறிதும் தயையின்றி மிகவும் கொடுமையாயிருந்தபடியால், அவனை அனைவரும் வெறுத்தார்கள். அன்டோனியோ என்னும் கிறிஸ்துவ வியாபாரி அவனைப் பன்மடங்கு அதிகமாக வெறுத்தான். ஷைலக்கும் அவனை வெறுத்து, தன்னை வெறுத்ததற்காக அண்டோனியோவைப் பழிதீர்க்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

அன்டோனியோவிற்கு, பஸ்ஸானியோ என்னும் அருமை நண்பன் ஒருவன் இருந்தான். ஒருநாள் பஸ்ஸானியோ அன்டோனியோவை அணுகி, தான் ஒரு பணக்கார சீமாட்டியைக் கல்யாணம் செய்ய இருப்பதாகவும், அதற்காகத் தனக்கு 3000 டுகாட்ஸ் (வெனிஸ் நாணயம்) கடன் கொடுக்கும்படியும் வேண்டினன். அன்டோனியோவிடம் அப்பொழுது பணம் இல்லை. அவர்கள் இருவரும் ஷைலக்கினிடம் சென்றார்கள். அன்டோனியோ, ஷைலக்கை 3000 டுகாட்ஸ் கடன் கொடுக்கும்படி கேட்டான். அத்

தொகையை வட்டியும் முதலுடன் தன் கப்பல் திரும்பி வந்ததும் தந்து விடுவதாக அன்டோனியோ கூறினான்.

ஷைலக் சிறிது நேரம் யோசித்துப், பிறகு ஒரு நிபந்தனைமேல் அத்தொகையைக் கடன் கொடுப்பதாக அறிவித்தான். அதாவது, "குறித்த காலத்திற்குள், பணம் திருப்பிச் செலுத்தத் தவறினால் ஷைலக் அன்டோனியோவின் உடம்பிலிருந்து ஒரு பவுண்டு (lb) சதையை வெட்டி எடுத்துக்கொள்ளலாம்." என்பதே. அன்டோனியோ, 'கப்பல் திரும்பிவரும்,' என்னும் தைரியத்தால் அந்த நிபந்தனைக் குட்பட்டு, தன் நண்பன் நிமித்தம் கையொப்பமிட்டுப் பணம் பெற்றுக்கொண்டான்.

பஸ்ஸானியோ, போர்ஷியா என்னும் சீமாட்டியை மணம் புரிந்து சுகமாய் இருந்துவந்தான். அப்படியிருக்கையில் ஒருநாள், மிகவும் துக்க சமாசாரத்தை ஒரு கடிதம் கொண்டுவந்தது. அன்டோனியோ அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தான். "அன்பார்ந்த பஸ்ஸானியோ! என் கப்பல்கள் முழுகிவிட்டன. நான் என் பாண்டையும் இழந்தேன். நான் இறக்கவேண்டியதுதான். இறப்பதற்கு முன் உன்னைப் பார்க்க ஆவலாயுள்ளேன்." போர்ஷியாவும் பஸ்ஸானியோவும் அடங்காத்துயர மடைந்தார்கள். உடனே பஸ்ஸானியோ தன்னிடமுள்ள பணமெல்லாம் திரட்டிக்கொண்டு வெனிஸ் நகரத்திற்கு ஓடினான்.

பணம் திருப்பிச் செலுத்தவேண்டியநாள் கடந்துவிட்டபடியால், அன்டோனியோ, சிறையில் அடைபட்டிருந்தான். அவன் விசாரணைக்காக வெனிஸ் நகர நீதிபதிமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். பஸ்ஸானியோ, அக்கொடுநெஞ்சம் படைத்த ஷைலக்குக்கு அவன் கொடுத்த

தைப்போல் அநேக மடங்கு பணம் திருப்பிக் கொடுப்ப தாய்ச் சொல்லியும் அவன் ஒத்துக்கொள்ளவில்லை. விசா ரணை நடந்துகொண்டிருக்கும்பொழுது, இளம்பிராயமுள்ள வக்கீல் ஒருவர், ஒரு பெரிய வக்கீலிடமிருந்து கற்சாட்சிப் பத்திரம் பெற்று வந்து இவ் விசாரணையை நடத்த முன் நின்றார். (இந்த வக்கீல் ஆண்வேடம் தரித்த போர்ஷியா வைத்தவிர வேறில்லை.) அவள் அந்த யூதனைச் சிறிது தயை காட்டும்படி பன்முறை மன்றாடினாள். அவன் சிறிதும் இணங்கவில்லை. கடைசியாக, அவள் சொன்னதாவது, "ஷைலக்குக்கு ஒரு பவுண்டு சதை சேரவேண்டியது நியாயந்தான். ஆனால், ஒரு துளி ரத்தம் கூட அவனுக்குச் சேரவேண்டியதில்லை." ஆதலால், அவள் அந்தக் கொடூ யூதனை "ரத்தம் சிறிதும் கீழ் விழாமல் ஒரு பவுண்டு சதை யை வெட்டிக்கொள்ளலாம்," என்றாள். அவன் என்ன செய்வான்? பணப்பேராசை பிடித்த அவனுக்குப் பைத்தி யம் பிடித்துவிட்டது. அநியாயமாக ஒருவன் உயிரை வாங்க எத்தனித்ததால் அவன் சொத்துமுழுமையும் இராஜாங்கத் தைச் சேர்ந்ததாயிற்று. அன்டோனியோ விடுதலையடைந் தான். அவனும் பஸ்ஸானியோவும் புது வக்கீலை வாழ்த்தி னார்கள்.

அவர்கள் வீட்டிற்குச் சென்றதும் போர்ஷியா, தான் தான் அந்த வக்கீல் என்று சொன்னதும், வியப்பை யடைந் தார்கள். அன்டோனியோ விடுதலை யடைந்ததுமன்றி, அவன் கப்பல்களும் துறைக்கு வந்து சேர்ந்துவிட்டவே, அனைவரும் மனங்களித்தனர். சிக்கிரத்தில் முன் கஷ்டத்தை மறந்து, எல்லோரும் சுகமாய் வாழ்ந்து வந்தனர்.

Beth Gelert

Once, ***Llewylyn*** was the prince of ***North Wales***. He was a famous huntsman. He had with him very brave and noble hounds. But there was one faithful dog in particular which he loved most. He was named ***Beth-Gelert***. Gelert was quiet as a lamb at home and fierce and bold as a lion in the chase. He followed his master always whenever he went to hunt.

One day as usual Llewylyn started to go to hunt. He sounded his horn; all the huntsmen and all his faithful hounds obeyed the call. But to his great surprise and disappointment he could not find his pet Gelert in the gathering. He blew his horn again and again inviting his pet to come and as he did not respond to his call Llewylyn had to go to hunt without him. Llewylyn did not enjoy the hunt because his faithful dog was not there to cheer him up in his chase. Annoyed, he returned home sooner than usual.

At the gate way of his castle he was greeted by his Gelert. But to the great dismay, the master found the dog besmeared from head to foot with blood. In great haste Llewylyn entered the castle, and found blood marks everywhere. At last he reached the room where his child used to sleep and called aloud for the child. There was no answer.

He made a search for his innocent child but to no purpose. He, therefore arrived at the conclusion that the dog Gelert had killed and eaten his son. Over come with great rage, he plunged his dagger into the bosom of his most faithful dog. Gelert fell down yelling aloud. This yell woke up the sleeping child of Llewylyn. His son was in fact lying under a heap of things which in his great hurry, Llewylyn failed to notice. At the dying yell of the dog, the infant screamed aloud. Who could describe the joy of the father ? By the side of the child lay a gaunt wolf, all torn and dead.

Llewylyn at once came to understand the horrible mistake he had committed in his hurry. Gelert, as faithful as ever, had killed the wolf to save the child.

Llewylyn's grief knew no bounds. His dog could not be saved. He built a tomb of marble over the grave of the dog; and the story of Gelert's faithfulness was engraved upon it. Llewylyn himself daily went to the tomb and spent sometime over the grave in mourning the death of one of the most faithful and loving companion of his life.

பேத் கெலர்ட்

ஒரு காலத்தில், லூவேலின் என்னுமோர் அரசன், வேல்ஸ் வட பாகத்தை ஆண்டுவந்தான். அவன் வேட்டை யாடுவதில் தேர்ச்சி பெற்றவன். அவன் அநேக தீரமுள்ள

வேட்டை நாய்களை வளர்த்து வந்தான். அவைகளில் முக்கியமாக பெத் கெலர்ட் என்னும் நாயை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான். கெலர்ட், வீட்டிலோ மிகவும் சாந்தமாயும், வேட்டையில் சூரனுயும் இருந்து வந்தது. தன் எஜமானன் வேட்டைக்குப் போகும்பொழுது தானும் அவனுடன் வேட்டைக்குச் செல்லும்.

ஒருநாள், வழக்கம்போல் லுவெலின் வேட்டைக்குப் புறப்பட்டான். அவன் தன் வாத்தியத்தை முழங்கினன். அநேக வேடர்களும் வேட்டை நாய்களும் சீக்கிரத்தில் அவ்விடம் ஓடிவந்து நின்றனர். ஆனல் பெத் கெலர்ட் மாத்திரம் வரவில்லை. லுவெலின் ஆச்சரியமடைந்து மேலும் மேலும் தன் பேரிகையை முழங்க, அது வராததினுல், அதை விட்டுவிட்டு வேட்டையாடச் சென்றுன். வேட்டையிலே அவனுக்கு விருப்ப மேற்படவில்லை. அவன் மன வருத்தத்துடன் வீட்டிற்குத் திரும்பிவந்தான்.

அவன் அரண்மனையின் வாயிலில் அந்நாய், கெலர்ட் அவனை வரவுகொண்டு அழைத்தது. ஆனல் லுவெலின், அந்நாயின் உடல் முழுவதும் இரத்தம் நிறைந்திருப்பதைக் கண்டு பிரமித்தான். வேகமாக, அரண்மனைக்குள் சென்று நாற்புறமும் இரத்தம் சிந்தியிருப்பதைக் கண்டான். கடைசியாக தன் குழந்தை தூங்கும் அறைக்குச் சென்று அதைக் கூப்பிட்டான். பதில் ஒன்றும் கேட்கவில்லை. எங்குத் தேடியும் குழந்தையைக் காணவில்லை. ஆதலால் 'குழந்தையை அந்நாயே கொன்று தின்றுவிட்டது,' என்று தீர்மானித்து, மிகவுங் கோபங்கொண்டு அந்த நாயைத் தன் ஈட்டியால் குத்திக் கொன்றுன். கெலர்ட் ஊளையிட்டுக்கொண்டே விழுந்திறந்தது. இந்த சப்தத்தைக் கேட்டதும், தூங்கிக் கொண்டிருந்த லுவெலின் குழந்தை எழுந்துவிட்டது. அக்

குழந்தை ஒரு மூட்டைக்கடியில் கிடந்தது. அதன் பக்கத்தில், கொடூரமான ஒரு ஓநாய் இறந்து கிடந்தது. தன் அவசரத்தில் இதை அவ்வரசன் பார்க்கவில்லை. இப்பொழுது குழந்தையின் சப்தத்தைக் கேட்டதும் தந்தைக்கு ஆநந்தம் பொங்கிற்று.

லுவெலின் தான் செய்த தப்பை உடனே உணர்ந்தான். கெலர்ட், தன் எஜமானிடம் உண்மையாகவே, கடைசிவரையில் இருந்து, அவன் குழந்தையை, ஓநாய் வாயிலிருந்து காப்பாற்றிற்று. லுவெலின் அடங்காத் துயரமடைந்தான். நாயோ இறந்துவிட்டது. அவன் மிகவும் வருத்தத்துடன் அதைப் புதைத்து அவ்விடத்தில் ஒரு சலவைக்கல் ஸ்தூபம் நாட்டினான். அதில் கெலர்ட்டின் சரித்திரத்தைச் செதுக்கி வைத்தான். தானும் தினம் அவ்விடம் சென்று, தன் உயிருக் குயிராயிருந்த, உண்மையான ஒரு நேசனை இழந்ததற்கு வருந்தினான்.

William Tell.

Once, Switzerland was under the rule of Austria. It was the custom of the Austrian King to send to Switzerland every year a Governor to rule her in Austria's name It was not always that Swiss People had a kind and good ruler. Once the Governor sent was 'a haughty man of savage mood,' and he illtreated the people and tyrranised them beyond measure.

In Switzerland, there lived at that time a very good and noble man by name William Tell. He

was leading a happy life with his little son "a fair haired boy." He was a good marksman.

One day the haughty Governor of Switzerland set his cap of high and ordered the Swiss people to bow down to it. He also further stated that he who failed to act up to the order would be instantly put to death. At that time William Tell with his young son in hand was coming along the road. He heard the heralds shouting "Bow down! Ye slaves! Bow down!" When he came near he was also asked to bow down to the cap. But tell refused to do so by saying that to God and God alone his knee would bend. The Governor was very angry. He asked his men to seize him and put him to death. After a little thought, he said aloud; "Wait. I know that Swiss people are famous marksmen. Let us try their skill to-day." So saying he ordered his men to bind the young boy to a tree yonder.

The boy was tied to a tree, and an apple was placed on his head. The cruel Governor asked the father to shoot the apple on his own son's head; adding further that if he missed his mark he would loose his life. What was William Tell to do? He was in a fix. The people around him cursed the governor and prayed to god that the beautiful boy might be spared. The boy too asked his father to shoot saying "thine aim is sure, it will not fail you

here." Trusting in God, Tell shot an arrow at the apple from a distance of fifty yards. To the great joy of all assembled, the apple fell in two. The cruel man smiled as if in satisfaction, and said, "I will keep my word. You may go home and live in peace." To this Tell replied, "Proud man, I have nothing to thank you for. I should thank God for having given back my son to me, if I had missed and shot my son, you also would have died at the same moment. See here is another arrow which I had in readiness to do as I told you now. So you too pray to God for having saved your life this day." The governor was ashamed.

Moral:—

God helped the right, God spared the sin
He brings the proud to shame;
He guards the weak against the strong,—
Praise to his Holy Name.

வில்லியம் டெல்

முன்னொரு காலத்தில் ஸ்விட்ஸர்லண்டு ஆஸ்டிரியாவின் ஆளுகையின்கீழ் இருந்தது. ஒவ்வொரு வருடமும் ஆஸ்டிரிய அரசன், ஸ்விட்ஸர்லண்டுக்குத் தனக்குப் பதில் ஆள ஒரு கவர்னரை அனுப்பி வந்தான். எப்பொழுதும் நல்ல குணமுள்ள ஒரு கவர்னர் ஆளுவாரென்பது கிடையாது. ஒரு காலத்தில் ஒரு கவர்னர் மிகவும் கர்வம் கொண்டவனும் முரடனுமாய் இருந்தான். அவன் ஸ்விட்ஸர்லண்டு ஜனங்களை மிகவும் கேவலமாய் நடத்திவந்தான்.

ஸ்விட்ஸர்லண்டில், வில்லியம் டெல் என்னும் நற் குணம் பொருந்திய ஒருவன் இருந்தான். அவன், மிகவும் அழகான தன் சிறிய பிள்ளையுடன் சந்தோஷமாகக் காலம் கழித்துவந்தான். அவன் குறி தவறுமல் சுடுவதில் மிகவும் கெட்டிக்காரன்.

ஒருநாள் இந்தக் கர்வி கவர்னர் தன் குல்லாவை ஒரு தடியின்மேல் வைத்து, அதை வணங்கும்படி ஸுவிஸ் ஜனங்களை ஆக்ஞாபித்தான். மேலும், "அம்மாதிரி செய்யத் தவறினவர்கள் உடனே கொல்லப்படுவார்கள்," என்றும் அறிவித்தான். அச்சமயம், வில்லியம் டெல் தன் மைந்தனுடன் அவ்வழியாக வந்துகொண்டிருந்தான். அவன், "வணங்குங்கள்! அடிமைகளே! வணங்குங்கள்!" என்று கத்துவதைக் கேட்டான். அவன் அருகில் வந்ததும் அவனையும் அக்குல்லாய்க்கு வணங்கும்படி சொன்னார்கள். அவன் மறுத்து, "நான் கடவுள் ஒருவர் முன்னிலையில் தான் மண்டி போட்டு வணங்குவேன்" என்று தீரமாகப் பதிலுரைத்தான். இதைக் கேட்டதும், கவர்னர் கோபங் கொண்டு, தன் ஆட்களைக் கூப்பிட்டு அவனைப் பிடித்துக் கொல்லும்படி உத்தரவிட்டான். கொஞ்சம் யோசித்து அவன், "நிறுத்துங்கள்! ஸுவீஸ் ஜனங்கள், மிகவும் வில் வித்தையில் தேர்ச்சி யடைந்தவர்களென்று பெயர் பெற் றிருக்கிறார்கள். அவர்களின் சாமர்த்தியத்தை இன்று பரீக்ஷிப்போம்;" என்று கூறினான். அவன் வில்லியம் டெல் லின் சிறு மகனை அருகிலிருந்த ஒரு மரத்தில் பிடித்துக் கட்டச் சொன்னான்.

அச்சிறுவன் மரத்தில் கட்டப்பட்டான். ஒரு ஆப்பில் பழம் அவன் தலையில் வைக்கப்பட்டது. அக் குரூரன், தகப்பனைப்பார்த்துப் பிள்ளையின் தலையிலிருக்கும் ஆப்பிலைச்

சுடச்சொன்னன். குறி தவறினால், அவன் உயிரை வாங்கி விடுவதாகவும் அறிவித்தான். தகப்பன் என் செய்வான். பாபம்! கூடியிருந்த ஜனங்கள் கவர்னரைச் சபித்ததுமன்றி 'அவ்வழகிய இளைஞனின் உயிர் பிழைத்து வரவேண்டும்,' என்று கடவுளைப் பிரார்த்தித்தனர். அச்சிறுவனும் தகப்பனைப் பார்த்து, "அப்பா! உன் குறி தப்புவதில்லை ஆதலால் நீ சுடு!" எனத் தைரிய மூட்டினன். கடவுளை நம்பி வில்லியம் ஐம்பது கெஜ தூரம் சென்று ஒரு அம்பை எய்தான். அவ்வம்பு நேராய்ச்சென்று ஆப்பில் மேல் பட்டது. ஆப்பில் இரு துண்டாக விழவே அனைவரும் சந்தோஷம் அடைந்தனர். அக்கொடூர கவர்னர் வில்லியமைக்கண்டு புன்னகை புரிந்து, "என் வார்த்தையை நான் காப்பாற்றுகிறேன்; வீட்டிற்குச் சென்று சுகமாய் வாழ்," என்று கூறினன். வில்லியம் டெல் கோபம் மேலிடச் சொன்னதாவது. "கர்வம் பிடித்த மானிடனே! உனக்கு வந்தனம் நான் செலுத்த வேண்டியதில்லை. கடவுளுக்கே என் குழந்தையைக் காப்பாற்றியதற்காக நன்றி செலுத்துகிறேன். நான் குறி தவறி என் குழந்தையைச் சுட்டிருந்தால், நீயும் அப்பொழுதே இதோ இந்த இரண்டாம் அம்பினால் இறந்திருப்பாய். ஆதலால், நீயும் உன் உயிர் பெற்றதற்குக் கடவுளை வணங்கு," என்றான். கவர்னர் மிகவும் அவமான மடைந்தான்.

"கடவுள் நியாயமாய் நடப்பவர்களைக் காக்கிறார்; தப்பிதம் செய்தவர்களை மன்னிக்கிறார்; கர்விகளை அடக்குகிறார்; எளியவர்களை வலியவர்கள் தீவினையிலிருந்து காக்கிறார். எல்லாம் வல்ல இறைவனை நாம் வாழ்த்துவோமாக."

The Story of Rama

1. Rama and his Brother.

LONG, long ago, there lived a king named *Dasaratha*. His kingdom was *Kosala*. He had four sons. They were *Rama*, *Bharatha*, *Lakshmana* and *Satrugna*. Dasaratha loved Rama most.

2. Lakshmana and Rama played together, read together and slept together. Wherever Rama went Lakshmana too went with him.

Bharatha and Satrugna were playmates. They played and read together.

3. Rama was a wise and good son. He obeyed his father. If his father said to him 'Do,' he did. If he said to him 'Go,' he went. He loved his father very much.

4. *Ayodhya* was the capital city of Kosala. It was a beautiful city. The palaces were tall and square. There was a high wall round the city. The streets were very broad and full of people. There were full of horses, elephants and chariots. The people of Ayodhya were happy. The king and queens were happy. Rama and his brothers were also very happy.

ஸ்ரீராமர் கதை

1. இராமரும் சகோதரர்களும்

வெகு காலத்துக்கு முன்னே தசரதன் என்னும் அரசர் வாழ்ந்திருந்தார். அவரது இராஜ்யம் கோசலம், அவருக்கு நான்கு குமாரர்கள் உண்டு. அவர்கள் இராமர், பரதன், இலக்ஷ்மணன், சத்ருக்னன் என்பவர்கள். தசரதன் இராமனை அதிகமாக நேசித்தார்.

2. இலக்ஷ்மணனும் இராமரும் ஒன்றுக விளையாடினர்கள், ஒன்றுகப் படித்தார்கள், ஒன்றுக உறங்கினர்கள். எங்கெங்கு இராமர் சென்றனரோ அங்கங்கெல்லாம் இலக்ஷ்மணன் அவனோடு சென்றான். பரதனும் சத்ருக்னனும் விளையாட்டுத்தோழர்கள். அவர்கள் ஒன்றுக விளையாடுவார்கள், படிப்பார்கள்.

3. இராமர் ஒரு புத்தியுள்ள நல்ல குமாரராக இருந்தார். அவர், தன்னுடைய தகப்பனருக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய தகப்பனர் அவரை நோக்கிச் 'செய்,' என்று சொன்னால் அவர் செய்வார் அவர் அவரைப் 'போ,' என்று சொன்னால் அவர் போய்விடுவார். அவர் தன் தந்தையை மிகவும் நேசித்தார்.

4. கோசலநாட்டிற்கு அயோத்தியா என்பது தலை நகரம். இஃதோர் அழகான நகரமாக இருந்தது. அரண்மனைகள் உயரமாகவும், சதுரமாகவு மிருந்தன. நகரத்தைச் சுற்றிலும் ஓர் உயர்ந்த சுவர் இருந்தது. வீதிகள் மிகவும் அகலமானவையாயும் மனிதர்கள் நிரம்பியு மிருந்தார்கள். வீதிகளில் குதிரைகளும், யானைகளும், இரதங்களும் நிரம்பியிருந்தன. அயோத்தியாவாசிகள் சந்தோஷமாக இருந்தார்கள். அரசனும், அரசிகளும் சந்தோஷமாக இருந்தார்கள். இராமனும் அவருடைய சகோதரர்களுங்கூட மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள்.

2. The Coming of Viswamitra

Some years went by. The princes quickly grew. They learned to read and write and to shoot with bow and arrow. They were clever and intelligent.

2. One day, *Viswamitra* the great sage came to Dasaratha. He said to the king, "Oh Dasaratha the great king! I come here to ask you to help me. Two Rakshasas trouble me in the forest. They are very strong. I cannot kill them. Let Rama come with me."

3. Dasaratha heard these words. He was very, very sad. How could he say, 'No,' to this great sage! He was silent for a long time. He thought for sometime. At last he said :—

4. 'Oh great sage ! why do you ask me this? How can I send my beloved son, Rama ? How can a boy fight against Rakshasas. I will myself go and fight them. I can shoot with the bow. I will kill them with my arrows. So, do not ask to send my Rama.

5. Then Viswamitra was very angry and said, O King do not refuse to send Rama with me. No harm shall come to Rama. I give you my word. Let him come with me." On hearing these words of Viswamitra, everybody was afraid, Dasaratha

too was afraid. Then the wise *Vasishta* said, "O King! Let Rama go. If the great Viswamitra says, 'No harm shall come to Rama,' no harm will come to him" Vasishta was the King's priest. At his words the King's doubt fled. So he said to Viswamitra: "O mighty one! Take my son with you." He called his sons Rama and Lakshmana and said: "Go my sons with this great sage." Then he kissed them So Rama and Lakshmana went with Viswamitra into the forest. In the forest Rama killed a wicked Rakshasi *Thataka* by name with his arrow.

விசுவாமித்திரர் வருகை

1. சில வருஷங்கள் கழிந்தன. அரச குமாரர்கள் விரைவாக வளர்ந்தார்கள். அவர்கள் படிக்கவும், எழுதவும், வில்லையும் அம்பையும் எய்யவும் கற்றுக்கொண்டார்கள்.

2. ஒருநாள் விசுவாமித்திரர் என்னும் ஒரு பெரிய சன்னியாசி தசரதனிடம் வந்தார். அவர் அரசருக்குச் சொன்னதாவது:—"ஹே! தசரத மகாராஜனே! எனக்குச் சகாயம் செய்ய உன்னைக்கேட்க இங்கே வந்திருக்கிறன். கானகத்தில் இரண்டு ராக்ஷஸர்கள் எனக்கு உபத்திரவம் செய்கிறார்கள். அவர்கள் மிகவும் பலங்கொண்டிருக்கிறார்கள். அவர்களை என்னால் கொல்ல முடியாது. வல்லமையுள்ள அரசனே! உன்னுடைய மகன் இராமன் அவர்களைக் கொல்லக்கூடும். என்னுடன் ராமனை வரவிடுவாய்."

3. தசரதன் அவ்வார்த்தைகளைக் கேட்டார். அவர் மிகவும் துக்கப்பட்டார். 'இந்த மாகாதபசிக்கு எப்படி மாட்டேன் என்று சொல்வது?' வெகு நேரம் மௌனமாக விருந்தார். சிறிது நேரம் யோசித்துப் பார்த்தார். கடைசியில் அவர் சொன்னதாவது:—

4. "ஓ தவச்சிரேஷ்டரே! இதை ஏன் என்னைக் கேட்கின்றீர்கள்? எனது அருமை மகன் இராமனை நான் எவ்விதம் அனுப்புவது? இராக்ஷஸர்களை ஒரு சிறு பையன். எப்படி எதிர்த்துச்சண்டை செய்யக்கூடும்? நானே சென்று அவர்களோடு சண்டை செய்கிறேன். வில்லால் அவர்களை நான் அடிக்கிறேன். எனது அம்புகளால் அவர்களைக் கொல்லுகின்றேன். ஆகவே, என்னுடைய இராமனை மட்டும் அனுப்பும்படி என்னைக் கேட்கவேண்டாம்."

5. அப்போது விசுவாமித்திரருக்கு மிகவும் கோபமாக விருந்தது. "அரசனே! என்னுடன் இராமனை அனுப்ப மறுக்காதே. இராமனுக்கு ஒரு தீங்கும் வராது. உனக்கு வாக்குறுதி செய்கின்றேன். அவன் என்னுடன் வரட்டும்," என்று சொன்னர். விசுவாமித்திரருடைய இவ்வார்த்தைகளைக் கேட்டு எல்லோரும் பயந்துவிட்டார்கள். தசரதர் கூட பயந்துவிட்டார். அப்போது வசிஷ்டர் சொன்னதாவது: "அரசே! இராமன் போகட்டும் விசுவாமித்திர மகரிஷி 'இராமனுக்கு ஒரு தீங்கும் நேரிடாது,' என்று சொல்லும்போது ஒரு தீங்கும் அவனுக்கு உண்டாகாது,' என்று சொன்னர். வசிஷ்டர் அவருடைய குரு. அவருடைய வார்த்தைகளைக் கேட்க அரசருக்கு உண்டாயிருந்த சந்தேகங்கள் பறந்துபோயின. ஆகவே, அவர் விசுவாமித்திரரைப்பார்த்து, "ஓ பராக்கிரமசாலியே! உம்மோடு எனது குமாரனை அழைத்துப் போகலாம்," என்று சொன்னர். அவர் தமது பிள்ளைகளான இராமன் இலக்ஷ்மணன் இவ்விருவர்களைக் கூப்பிட்டு, "இம்மகரிஷியோடு நீங்கள் செல்லுங்கள்!" என்று சொன்னர். பிறகு அவர்களை முத்தமிட்டார். இராமனும் இலக்ஷ்மணனும் விசுவாமித்திரரோடு கானகத்திற்குச் சென்றார்கள். காட்டில் இராமன் ஒரு கொடூர ராக்ஷஸியான தாடகை என்பவளைத் தன் அம்பினால் கொன்றான்.

3. Rama Shoots Rakshasas

Viswamitra himself was a warrior. He taught Rama many things. He gave him many weapons. These weapons had heavenly powers. He taught the brave Lakshmana too.

2. At last they reached the abode of Viswamitra. Many Brahmins were there reciting hymns. They were afraid of the fierce Rakshasas. One day two Rakshasas *Maricha* and *Subahu* by name came through the air. They began to catch hold of the Brahmins.

3. Rama saw this. He raised his mighty bow and shot arrows at them. The first arrow drove Maricha far through the sky. He fell into the sea. The second arrow hit the other Rakshasa Subahu in the breast. He fell down and dead.

4. Then the Brahmins were very glad. Their terrible enemies were dead. They all began to praise and thank Rama.

3. இராமன் இராக்ஷஸர்களைக் கொல்லல்.

விஸ்வாமித்திரர், தாமே ஒரு வீரராக இருந்தார். இராமனுக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தார். அவனுக்கு அவர் பல ஆயுதங்களைக் கொடுத்தார். இந்த ஆயுதங்கள் எல்லாம் தெய்வீக சக்தி பெற்றிருந்தன. வீர னான இலக்ஷ்மணனுக்கும் கூட அவர் கற்றுக்கொடுத்தார்.

2. கடைசியில் அவர்கள் விசுவாமித்திரருடைய இருப் பிடத்தைச் சேர்ந்தார்கள். அங்கே அநேகப் பிராமணர்கள் வேதங்களைச் சொல்லிக்கொண் டிருந்தார்கள். பயங்கர மான அரக்கர்களிடம் அவர்கள் பயங்கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் மாரீசன், சுபாஹு ஆகிய இரண்டு அரக்கர்கள் ஆகாய மார்க்கமாக வந்தார்கள். அவர்கள் பிராமணர்களைப் பிடிக்க ஆரம்பித்தார்கள்.

3. இராமன் இதைக் கண்டான். அவன் தனது பராக்கிரமம் பொருந்திய வில்லை எடுத்து அவர்களை நோக்கி அம்புகளை எய்தான். முதல் அம்பு மாரீசனை ஆகாயத்தின் மூலமாக வெகுதூரம் தூரத்திவிட்டது. அவன் கடலில் விழுந்தான். இரண்டாவது அம்பு சுபாஹு மார்பில் இடித்தது. அவன் இறந்து கீழே விழுந்தான்.

4. அப்போது பிராம்மணர்கள் மிகவும் சந்தோஷப் பட்டார்கள். அவர்களுடைய பயங்கர விரோதிகள் இறந்தனர். அவர்கள் எல்லோரும் புகழவும், இராமனுக்கு வந்தனங்கள் செய்யவும் ஆரம்பித்தனர்.

4. Sita's Wedding.

King Janaka lived in the city of *Mithila*. He had a lovely daughter. Her name was *Sita*

2. The king had a mighty bow, named *Siva's Bow*. It was very strong and heavy, no one could bend it. So King Janaka said, "Whoever can bend this Siva's Bow shall take my Sita in marriage. She shall be his wife." Many princes came from far and near and tried to bend the bow. But no one could do so. They could not even raise it. It was so strong and heavy. *Ravana* the King of Lanka, too tried to lift the bow. But he failed to do so and was ashamed.

3. *Viswamitra*, the sage, took the warrior brothers, Rama and Lakshmana to Mithila. He said to Janaka, "These are the sons of King Dasaratha." Janaka was very glad to see the beautiful princes. He told them about the mighty bow and showed it too.

4. "If Rama can bend the Siva's Bow, I will give my daughter Sita in marriage," said Janaka. Many people of the town stood in a crowd to look at the grand feat. Rama went to the bow. He picked it up with his left hand. The string was tied to one end. Then, with a smile on his face bent the strong wood. He fastened the string to the other end. All the people were watching with their mouths open.

He took the string and drew it. One mighty arm pushed forward the bow. The other drew the string. The wood bent, cracked and broke. The people shouted with joy. King Janaka was filled with joy. "O Mighty warrior!" said the King, "I will give Sita to you as promised."

5. He sent at once swift messengers to King Dasaratha at Ayodhya. King Dasaratha came with his wives *Kausalya, Kaikeyi and Sumithra*. He brought with him his two other sons, Bharatha and Satrughna.

6. Then the wedding took place. Rama married Sita. Lakshmana married her sister. Bharatha and Satrughna married the two nieces of King Janaka.

7. Viswamitra blessed Rama and Sita and left Mithila. King Janaka gave rich presents to his daughters and sent them along with their husbands to Ayodhya.

---

4. சீதையின் கல்யாணம்.

மிதிலா நகரத்தில் ஜனகராஜன் வாழ்ந்துவந்தான். அவனுக்கு அழகான ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பெயர் சீதை.

2. இந்த அரசனிடம் 'சிவ தனுசு' என்ற ஒரு மகத்தான வில் இருந்தது. அது மிகவும் பலமும் பளுவுமாயிருந்ததால் அதை ஒருவரும் வளைக்க முடியாது. ஆகவே, ஜனகராஜன் சொன்னதாவது: "எவனொருவன் இந்தச் சிவதனுஸை வளைக்கின்றானே அவன் எனது சீதையை விவாகம் செய்துகொள்ளுவான். அவள் அவனுடைய மனைவியாகின்றாள்." எல்லா இடங்களிலிருந்தும் பற்பல அரசகுமாரர்கள் வந்து வில்லை வளைக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஒருவரும் அதைத் தூக்க முடியவில்லை. அதை அவர்கள் கிளப்பவும் முடியாமற் போய்விட்டது. அது அவ்வளவு பலமும் பளுவுமாயிருந்தது. இலங்கையின் அரசனை இராவணனும் அதை எடுக்கப் பிரயத்தனப்பட்டான். ஆனால், அவன் அதை அப்படிச் செய்ய முடியவில்லை; அவமானப்பட்டான்.

3. விசுவாமித்திர முனிவர் வீர சகோதரர்களான இராம இலக்ஷ்மணர்களை மிதிலைக்கு அழைத்துப்போனார். ஜனகனிடம் அவர்: "இவர்கள் தசரதனுடைய குமாரர்கள்," என்று சொன்னார். ஜனகர் அழகான அரசகுமாரர்களைக் காண மிகவும் களிப்படைந்தார். அவன் அவர்களுக்குப் பராக்கிரமம் பொருந்திய வில்லைக்குறித்துச் சொல்லி அதைக்காட்டினான்.

4. "இராமன் அந்தச் சிவதனுசை வளைத்தால் நான் எனது குமாரியான சீதையை விவாகம் செய்து வைக்கிறேன்," என்று ஜனகன் சொன்னான். நகரத்து ஜனங்கள் யாவரும் அந்த வீரச்செய்கையைக் காணக்கூட்டமாக கூடினார்கள். வில்லினிடம் இராமன் போனான்; அதை இடது கரத்தால் தூக்கினான். நாண் ஒருமுனையில் கட்டப்பட்டிருந்தது. அப்போது முகத்தில் புன்சிரிப்புடன் அந்தப் பலமான மரத்தை வளைத்தான். மற்றொரு முனையுடன் நாணைக் கட்டினான். எல்லோரும் இச்செய்கையை வாயைத்திறந்தபடியே கவனித்துக்கொண்டிருந்தார்கள். நாணைப்பிடித்து இழுத்தான். ஒரு பலம் பொருந்திய கை வில்லை முன்னே தள்ளிற்று; மற்றொரு கை நாணை இழுத்தது. மரம் வளைந்ததும், பிளந்து உடைந்தது. ஜனங்கள் யாவரும் களிப்பால் கூச்சலிட்டார்கள், ஜனகராஜன் மிகவும் சந்தோஷப்பட்டான். "பராக்கிரமம் வாய்ந்த வீரனே! நான் வாக்களித்தபடி சீதையைக் கொடுக்கிறேன்," என்று அரசன் சொன்னான்.

5. உடனே விரைவான தூதர்களை அயோத்தியிலுள்ள தசரதனிடம் அனுப்பினான். தசரதராஜனும் தன் மனைவியான கௌசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய இவர்களுடன் வந்து சேர்ந்தான். தன்னுடன் தன் மற்ற குமாரர்களான பரத சத்ருக்னர்களையும் அழைத்து வந்தான்.

6. பிறகு விவாகம் நடந்தது. இராமன் சீதையை மணந்தான் இலக்ஷ்மணன் அவளது தங்கையை மணந்தான். பரத சத்ருக்னர்கள் ஜனகராஜனது மருமக்களை மணந்து கொண்டார்கள்.

7. விசுவாமித்திரர் இராமனையும் சீதையையும் வாழ்த்தி மிதிலையை விட்டுச் சென்றார். ஜனகராஜன் சிறந்த வரிசைகளைத் தன் பெண்களுக்குக் கொடுத்து அயோத்திக்கு அவர்களுடைய கணவர்களுடன் அனுப்பினான்.

5. Rama's Exile

Many years went by, and Dasaratha became old. He desired to make Rama King. Queen Kaikeyi learnt this. She was the mother of Bharatha. She grew angry. She went to Dasaratha and asked "Why dou you make Rama King? Make my son Bharatha King. Send Rama into the forest." The King said: "No, I cannot. Rama shall be the King." Then Kaikeyi replied: "Many years ago, you gave me two boons. Will you break your promise now? I ask you to send Rama into the forest. I ask you to make Bharatha King. Are you going to fulfil your promise?"

2. Dasaratha was filled with sorrow. How could a virtuous King break his word? So he sent for Rama and said: "Rama My dear son! Dear son! Ah my son!....." and then he could say nothing. He fell into a swoon. But Kaikeyi was there. She said: "Rama! You must go to the forest for fourteen years. Your brother Bharatha will be the King."

She further told Rama the King's promise. Rama was an obedient son. He Knew that he must go. The King could not break his promise. He bowed to his father and went away.

5. இராமன் காட்டுக்குப் போகுதல்

பல வருஷங்கள் கழிந்தன. தசரதன் கிழவனானன்; இராமனை அரசனாக்க விரும்பினன். கைகேயி ராணி இதைத் தெரிந்து கொண்டாள். அவள் பரதனுடைய தாய். அவளுக்குக் கோபம் பிறந்தது. அவள் தசரதனிடம் சென்று, "நீர் ஏன் இராமனை அரசனாக்குகிறீர்? என் மகன் பரதனை அரசனாகச் செய்யும். இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிடும்" என்றுசொன்னாள். அரசன் "மாட்டேன்; என்னால் முடியாது. இராமன் அரசனாகவேண்டும்," என்று பதில்கூறினான். அப்போது கைகேயி, "பல வருஷங்களுக்கு முன் நீங்கள் எனக்கு இரண்டு வரங்கள் கொடுத்தீர்கள்; உமது வாக்கை மறக்கலாமா? இராமனை காட்டுக்கு அனுப்பக் கேட்கின்றேன்; பரதனை அரசனாக்கவும் கேட்கின்றேன். தாங்கள் தங்களது வாக்குத்தானத்தைப் பூர்த்திசெய்யப் போகிறீரா?" என்று பதில் கேட்டாள்.

2. தசரதன் மிகவும் வருத்தத்துக் குள்ளானான். என்ன செய்வான் பாவம்! நீதிமான் தன் வாக்கைத் தவிர்த்து நடக்கலாமா? ஆகவே, இராமனை வரவழைத்து "இராமா! எனது பிரியமான குமாரா! ஆ குமாரா!" பிறகு ஒரு வார்த்தையும் சொல்ல முடியவில்லை; மூர்ச்சையாகி விட்டான். ஆனால் கைகேயி அங்கே இருந்தாள். 'இராமா! நீ கானகத்திற்குப் பதினான்கு வருஷம் போகவேண்டும்; உன் தம்பி பரதன் அரசனாகவேண்டும்," என்றுசொன்னாள். பின்னும் அவள் அரசனது வாக்குத் தானத்தைக் குறித்துச்சொன்னாள். இராமன் கீழ்ப்படியும் மகன்! தான் போகவேண்டும் என்பதை அறிந்தான். அரசன் தன் வாக்கை இழக்கக் கூடாது. அவன் தன் பிதாவை வணங்கி அப்புறம் சென்றான்.

Sita, the Chaste.

What a bad time it was! Rama the prince must go into the dense forest. He must leave his dear wife Sita. He must leave behind his playmate, and brother Lakshmana. He must leave his dear mother Kausalya and his other brothers. He must leave Ayodhya. He was very sad. Yet, he never cried. He was too brave to show his tears. Kausalya said, "Dear Rama! Do not go; do not leave your old mother alone."

2 *Lakshmana* said: "I will fight for you. Rama! You are the eldest son. You must be king, not Bharatha. Be here; do not leave us, dear brother!"

To this *Rama* replied: "Lakshmana! Do not speak thus. A good son obeys his father always. If I refuse to obey my father, I am not a good son."

3. Rama went to his dear mother Kausalya to bid good bye. Kausalya with tears in her eyes blessed him. Then he went to see Sita to take leave of her. Rama loved Sita better than all the world. Yet it was his fate to leave her and part from her.

4. What could poor Sita do? She loved him with all her heart. She began to cry when Rama told her of his exile. She said: "Oh my dear Rama! I cannot part from you. If you leave me surely I will die. If you must go to the forest, I will also

follow you. I cannot live alone. I will never lie on a soft bed while my husband lies in the forest. I will come with you wherever you go. I will be by your side always. A wife's place is by the husband's side. So, kindly take me with you, my dear Rama".

5. Rama refused to take Sita with him to the forest. He never wished that his wife should be put to such trouble. He felt sorry for his wife. He was more sorry for her than for himself. He thought for a while and at last, to make her happy, he said, "Dear Sita! Come with me! I shall take you wherever I go."

6. Sita was overjoyed. Her sorrow disappeared. Rama and Sita set off into the forest. Lakshmana, the brave brother, did not like to part from Rama. He said, "If Rama goes to the forest, I shall also go with him." So he too accompanied them. Though they were sorry to leave their father, mother and brother yet they were all happy. Rama was happy because he was obeying his father. Sita was happy because she was by her dear husband's side. Lakshmana too was happy because he was near his brother Rama, ready to protect him from any danger.

They were leaving behind their dear parents, brothers, the home they lived, good food, kind and

true friends. In front of them were wild beasts, rough clothes, little food. They were not afraid of them. They felt very happy because they were doing right. They knew that Right will conquer at last.

---

6. கற்புள்ள சீதை

என்ன கெட்டகாலம் இது! ராஜகுமாரனை இராமன் அடர்ந்த காட்டிற்குள் செல்லவேண்டும். அவன் தன் பிரிய மான மணைவி சீதையை விட்டுச் செல்லவேண்டும். அவன் தாயார்களையும், தம்பி லக்ஷ்மணனையும் பின்விட்டுச் செல்ல வேண்டும். அவன் தன் பிரியமுள்ள தாய் கௌசலையையும் மற்ற சகோதரர்களையும் விட்டுப் பிரியவேண்டும். அவன் தன் அயோத்தி நகரத்தையும் விடவேண்டும். அவன் மிகவும் துயரப்பட்டான். ஆயினும் அவன் அழவில்லை. அவன் தன் கண்ணீரை வெளிக்குக் காட்டாமல் வீரனாக யிருந்தான். கௌசலை, "அருமை இராமா! நீ போக வேண்டாம். உனது வயது சென்ற தாயைத் தனிமையாக விடவேண்டாம்," என்று சொன்னாள்.

2. "நான் உனக்காகச் சண்டைசெய்கிறேன். இராமா! நீதான் மூத்தப்பிள்ளை; நீதான் அரசனாகவேண்டும்; பரத னல்லன்; இங்கேயே இரு; எங்களை விடாதே; பிரியமுள்ள சகோதரனே!" என்று லக்ஷ்மணன் கூறினான். அதற்கு, "லக்ஷ்மண! அம்மாதிரி பேசாதே நல்ல பிள்ளை தகப்பன் வார்த்தையின்படி எப்பொழுதும் நடப்பான். நான் என் தந்தைக்குக் கீழ்ப்படியாமற் போனால், நான் நல்ல பிள்ளை ஆகமாட்டேன்," என்று இராமன் பதில் கூறினான்.

3. இராமன் தன் தாய் கௌசலையிடம் சென்று விடை கேட்டான். கௌசலை தன் கண்களில் நீர் வடிய வாழ்த்தி அனுப்பினாள். பிறகு அவன் சீதையைக் காணச் சென்றான் அவளிடம் விடைபெறப் போனான். இராமன் சீதையை உலகத்துப் பொருள்களைக் காட்டிலும் அதிகமாக நேசித்தான். ஆயினும், அவளைத் தனியாக விட்டுப் பிரிந்து போகும்படி அவன் விதி இருந்தது.

4. என்ன செய்வாள் சீதை, பாவம்! அவள் தன் மனப் பூர்வமாக அவனை நேசித்தாள். இராமன் தான் காட்டுக்குப் போகவேண்டும் என்பதைச் சொல்லும்போது அவள் அழத்தொடங்கினாள். "ஓ! என் அருமை இராமா? நான் உம்மை விட்டுப் பிரியேன். என்னை விட்டுப் போவீரானால் நான் உண்மையில் இறப்பேன். தாங்கள் காட்டுக்குப் போகவேண்டுமானால் நானும் தங்களுடன் வருகின்றேன். நான் தனியே உயிர் வாழமாட்டேன். எனது கணவர் காட்டில் படுக்க நான் தனியே மெத்தென்ற படுக்கையில் படுக்கேன். தாங்கள் போகும் இடமெல்லாம் நானும் பின் தொடர்வேன். எப்போதும் நான் தங்கள் பக்கத்திலேயே இருப்பேன். ஒரு மனைவியின் ஸ்தானம் அவளது கணவனது பக்கமே. ஆகவே, என் அருமை மிகுந்த இராமா! மனமுவந்து என்னைத் தம்முடன் அழைத்துப் போகவேண்டும்," என்று உருக்கமாகச் சொன்னாள்.

5. இராமன் சீதையைத் தன்னுடன் காட்டுக்கு அழைத்துப்போக மறுத்தான். அவன் தன் மனைவி கஷ்டத்துக்குட்பட விரும்பவில்லை. அவன் தன் மனைவிக்காக வருத்தப்பட்டான். தன்னைக்காட்டிலும் தன் மனைவிக்காகப் பெரிதும் துக்கப்பட்டான். சிறிது நேரம் யோசித்து

அவளை மகிழ்விக்க எண்ணி, 'பிரிய சீதையே! என்னுடன் வா! நான் செல்லுமிடமெல்லாம் உன்னை அழைத்துப் போகிறேன்" என்றான்.

6. சீதை அளவிலாச் சந்தோஷங்கொண்டாள். அவளது துயரம் மறைந்துவிட்டது. இராமனும் சீதையும் காட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். தைரியவானை லக்ஷ்மணன் இராமனை விட்டுப் பிரிய விரும்பவில்லை. "இராமன் காட்டுக்குப்போனால், நானும் அவனுடன் செல்கின்றேன்," என்று அவன் சொன்னான். ஆகவே, அவனும் அவர்களுடன் தொடர்ந்தான். அவர்கள் தமது தந்தை, தாய், சகோதரர்களை விட்டுப் பிரிந்து போனபோதிலும் அவர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். இராமன் தன் தந்தைக்குக் கீழ்படிவதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். சீதை தன் பிரியமுள்ள நாதன் பக்கத்திலிருப்பதனாலே மகிழ்ச்சியடைந்தாள். லக்ஷ்மணன் தன் சகோதரன் இராமனோடு இருந்து அவனுக்கு நேரும் ஆபத்துக்களினின்றும் அவனைக் காக்கத் தயாராக இருப்பதனால் அவனும் மகிழ்ச்சியடைந்தான்.

அவர்கள் தாங்கள் பின்னே பிரியமுள்ள பெற்றோர்களையும், சகோதரர்களையும், நேசித்த வீட்டையும், நல்லுணவையும், பசுமும் உண்மையுமுள்ள நேசர்களையும் விட்டுச் சென்றார்கள். அவர்களின் முன்னே வனமிருகங்களும், முறடான ஆடைகளும், கொஞ்ச உணவும் இருந்தன. அவைகளைக் குறித்து அவர்கள் கொஞ்சமும் பயப்படவில்லை. அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சி பெற்றிருந்தார்கள். ஏனெனில், அவர்கள் தரும மார்க்கத்தில் சென்றிருந்தார்கள். 'தருமத்தை கடைசியில் ஜய மடையும்' என்பதை அவர்கள் தெரிந்திருந்தார்கள்.

7. Bharatha, the Ideal Brother.

King Dasaradha heard of the exile of Rama. He was too sad to live. A few days after Rama went to the forest, he died of sorrow.

2. At the time of his death, Bharatha, his son was not with him. The minister *Sumanthra* sent for him. Bharatha was a good and obedient son. He loved his father and mothers and brothers.

3. When Bharatha heard the news of the death of his father he was very sad. He wept bitterly. He could not withstand the blow. It was a bolt from the blue.

4. When he came to his palace, Sumanthra said, "Bharatha, you are king." Bharatha grew wild and said, "No, I am not a king. How can I be king? My elder brother Rama, is King. I can never be King."

5. Then Kaikeyi said, "My dear son! You are now king. Your brother Rama went away to the forest. I asked the king to send him into the forest, so you are now the king" She spoke very proudly. She was full of joy. But Bharatha was full of sorrow. He abused his mother for having sent Rama into the forest. "How can I be king when my brother lives? I will never take the kingdom. It is Rama's and not mine." So said Bharatha, the ideal brother. He began to feel sorry for his brother. "O my dear brother Rama! Why did you go into the forest? Why did my gentle sister Sita go into the forest? Why did my brave Lakshmana go into the dense forest? Ah! My cruel

mother! Why did you send Rama into the forest? Why do you say the kingdom is mine? Please tell me ; where my Rama. Sita and Lakshmana are? I shall go and see them at once"

Bharatha was a true and loyal brother. If he wished, the kingdom as his He never wished to be king. Bharatha was noble and loyal. He loved truth better than any other thing in the world.

---

7. பரதன் உத்தம சகோதரன்

இராமன் காட்டுக்குப்போனதைத் தசரதராஜன் கேள்விப்பட்டான். அவன் உயிர் வாழ்ந்திருக்க மிகவும் துக்கப்பட்டான். இராமன் காட்டுக்குச் சென்ற சிலநாட்களுக்கெல்லாம் துயரத்தால் அவன் இறந்தான்.

2. அவன் இறக்கும்போது அவன் குமாரன் பரதன் அவனிடம் இல்லை. மந்திரி சுமந்திரன் அவனை வரவழைத்தான். பரதன் நற்குணமும், கீழ்படியுந் தன்மையும் பெற்ற குமாரன். அவன் தன் தந்தையையும், தாய்மார்களையும், சகோதரர்களையும் நேசித்தான்.

3. தன் தகப்பன் மரணச்செய்தியைப் பரதன் கேட்டபோது அவன் மிகவும் வருத்தப்பட்டான். அவன் விக்கி விக்கி அழுதான். அந்த அதிர்ச்சியை அவன் சகிக்க முடியவில்லை அது மின்னுமல் இடி விழுந்தது போலாகும்.

4. அவன் அரண்மனைக்கு வந்ததும், சுமந்திரன், "பரதா! நீதான் அரசன்," என்றான். பரதனுக்குக் கோபம் பிறந்தது. "இல்லை, நான் அரசனாக இருக்க முடியாது. நான் எப்படி அரசன்? எனது அண்ணன் இராமனே அரசன் நான் எப்பொழுதும் அரசனல்ல," என்று மொழிந்தான்.



Sri Rama bending the bow atthe time of Sita's wedding.

ஸ்ரீராமர் சீதாபிராட்டி திருக்கல்யாணத்திற்கு வில்வளைத்தல்

శ్రీరాములకు, సీతకు వివాహము.

5. அப்போது கைகேயி, "அருமை மகனே! நீதான் இப்பொழுது அரசன். உன் அண்ணன் இராமன் காட்டுக்குப் போய்விட்டான். அவனை வனத்திற்கு அனுப்புமாறு நான் அரசரைக் கேட்டேன். ஆகவே, நீதான் இப்பொழுது அரசன்," என்று அவள் மிக்க கர்வத்துடன் சொன்னாள். அவள் மிகவும் களிகூர்ந்தாள். ஆனால், பரதன் மிகவும் துக்கத்திற் குள்ளானான். அவன் தன் தாயை இராமனைக் காட்டுக் கனுப்பியதைக் குறித்து, அதிகமாகத் திட்டினான். "என் அண்ணன் உயிருடனிருக்கும்போது நான் எவ்விதம் அரசனாவது? நான் இராஜ்யத்தைக் கைக்கொள்ளமாட்டேன். அது இராமனுடையது, என்னுடையதல்ல." அவன் தன் சகோதரனைக் குறித்து மிகவும் துயரப்பட ஆரம்பித்தான். "ஓ என் அருமை அண்ணா! இராமா! நீ ஏன் காட்டுக்குப் போகவேண்டும்? எனது சாந்தமான சீதை சகோதரியும் ஏன் காட்டிற்குப் போகவேண்டும்? தீரமான லக்ஷ்மணன் அடர்ந்த கானகத்திற்குள் ஏன் செல்லவேண்டும்? ஹா! கொடூரமான என் அன்னையே! நீ ஏன் இராமனைக் காட்டுக்கு அனுப்பினாய்? இந்த இராஜ்ஜியத்தை என்னுடையதென்று ஏன் சொன்னாய்? தயைசெய்து இராமன், சீதை, இலக்ஷ்மணன் எங்கிருக்கிறார்கள் என்று எனக்குச் சொல். உடனே அவர்களை நான் போய்ப் பார்க்கவேண்டும்," என்று புலம்பினான்.

பரதன் உண்மையும் நியாயமுமான சகோதரன், அவன் தனக்கு வேண்டுமானால் இராஜ்யம் அவனுடையதே. அவன் அரசனாக ஒருபோதும் விரும்பவில்லை. பரதன் உயர்ந்த குணமும் சகோதர வாஞ்சையு முடையவன். அவன் சத்தியத்தையே உலகத்திய பொருள்கள் எல்லாவற்றையும்விட அதிகமாக விரும்பினான்.

8. *Pathuka Pattabishekam.*

Bharatha the ideal brother started at once in search of Rama. An army followed him. He entered a big forest and there he saw his brothers and sister. They were very thin and tired. Their clothes were very coarse. He fell at the feet of his dear brother Rama. He was so glad to see him again. He shed tears of joy. He begged Rama to come with him and to take the kingdom. He requested Lakshmana and Sita to follow him to the city, because it was Rama's and not his.

Rama replied, "No brother! our father ordered me to go into the forest. Shall I disobey my father's word? If I do, shall I be happy? No. So take this kingdom yourself, my dear Bharatha. Once again Bharatha fell at his brother's feet, and begged him to come. It was of no use. So he requested Rama to lend him his sandals to be put on the throne till he returns. To this Rama gladly consented. He gave Bharatha his sandals. Bharatha took them and placed them on the throne. Above them he put the royal umbrella and ruled the kingdom for Rama. He did not return to Ayodhya, but he stayed at a village named *Nandigramam* from where he began to rule the kingdom. He was leading the life of a Sanyasi. Bharatha was a true brother. His love towards Rama is even greater than that of Lakshmana.

8. பாதுகா பட்டாபிஷேகம்

உத்தம சகோதரனை பரதன் உடனே இராமனைத் தேடப் புறப்பட்டான். ஒரு சேனை அவனைப் பின்தொடர்ந்தது. ஒரு பெரிய காட்டினுள் நுழைந்தான். அங்கே தன் சகோதரர்களையும் சகோதரியையும் கண்டான். அவர்கள் மிகவும் மெலிந்தும் களைத்து மிருந்தார்கள். அவர்களுடைய ஆடை மிகவும் முரடாயிருந்தது. அவனது பிரிய ராமனது திருவடிகளில் பணிந்தான். அவனை மறுபடியும் காணச் சந்தோஷப்பட்டான். அவன் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான். இராமனைத் தன்னுடன் வரும்படியும், இராஜ்யத்தைப் பெறவும் அவன் வேண்டினான். இலக்ஷ்மணனையும் சீதையையும் நகரத்துக்குத் தொடரும்படியும், இராமனுடைய நகரமேயன்றித் தன்னுடைய தல்லவென்றும் சொல்லி வேண்டினான்.

இராமன், "இல்லை தம்பி! நமது தந்தை என்னைக் காட்டுக்குப் போகச் சொன்னார். எனது தகப்பனது வார்த்தையை நான் தள்ளி நடப்பதோ? அப்படி நடந்தால் நான் சந்தோஷமாயிருக்க முடியுமோ? முடியாது. ஆகவே, அன்புள்ள பரதா! நீயே இராஜ்யத்தைப் பெற்று ஆண்டுவா," என்று சொன்னான். அவன் மறுபடியும் தன் அண்ணனது திருவடிகளில் வணங்கி வரும்படி வேண்டினான். அதுவும் பயன்படாமற் போயிற்று. ஆகவே, இராமனது பாதரட்சைகளையாவது கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். அதையாவது அவன் திரும்பி வரும்வரையில் சிம்மாசனத்தில் வைத்துக்கொள்ள வேண்டினான். இதற்கு இராமன் ஒத்துக்கொண்டான். பரதனுக்குத் தன் பாதரட்சைகளைக் கொடுத்தான். பரதன் அவைகளைப் பெற்றுச் சிம்மாசனத்தில் வைத்தான். அதன்மேல் அரச குடையை விரித்தான். இராமனுக்குப் பதிலாக இராஜ்யத்தை ஆண்டுவந்தான். அயோத்திக்கு இவன் திரும்பிப் போகாமல் நந்திக் கிராமத்தினின்றும் இராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தான். அவன் சன்னியாசி போல் காலங் கழித்தான். பரதன் உண்மையான சகோ

தான். இலக்ஷ்மணன் இராமனை நேசிப்பதைவிட பரதன் இராமனை அதிகமாக நேசித்தான்.

9. *The Spotted Doe.*

Rama was kind and gentle. He was kind to lowly men and he was stern to the wicked. He loved those who loved him. He was wise. He would never do things in haste. He was very strong; yet he used his strength rightly. He was the friend of the weak and helped them in times of need. So they were safe when he was near them.

2. No one could fight against him and succeeded. He had very many divine weapons. He had such sharp arrows that could pierce through any armour. Lakshmana too was brave and mighty.

3. In the forest Rama and Lakshmana killed several Rakshasas. These monsters roamed about the forest and killed the men and ate them. Their king was Ravana who lived in Lanka. He was also a fierce monster and he was very strong.

4. A Rakshasi tried to carry away Sita. She desired to have Rama as her husband. She was called *Surpanaga*. She was the sister of Ravana. Lakshmana on hearing her desire, cut off her nose and ears. The Rakshasi ran away to her brother at Lanka.

5. Ravana was a mighty king. He was sitting on a golden throne. He had ten heads and his

body was marked with scars. *Surpanaga* came to him with tears in her eyes and said, "Oh! Brother Ravana! There is one Rama greater than you in all respects. He has a very beautiful wife Sita. She is the most handsome woman alive in the whole world. I tried to bring her away to you. But Rama's brother Lakshmana cut off my nose and ears.

6. Ravana grew wild. "Who is that Rama?" he asked. "I am not afraid of him?" So saying he called one of his relations *Marisa* and said, "You go and take the shape of a spotted doe. Go near to Sita and be grazing there for some time."

7. Sita was sitting at the door of her cottage. She saw the spotted doe grazing near. It was very attractive and lovely. When she saw it, she said "Rama my dear! Look at that doe? How beautiful it is? Can't you get it for me?"

8. Rama wanted to catch the doe. So he ran after it. Doe was not a true one. It was a monster in the form of a doe? The Rakshasa went on and on. Rama too followed it. It led Rama very far away, before Rama shot it with his bow. It fell down crying in Rama's voice, "Come to me, O! Lakshmana! My brother, I die," and then it died. The doe was Marisa himself. Thus Marisa died at the hands of Rama.

9. புள்ளிமான்

இராமன் பட்சமும் சாந்தமும் முள்ளவன். மெலிந்தவர்களுக்குப் பட்சமாயும், துஷ்டர்களுக்குக் குரூரமாயும் இருப்பான். தன்னை நேசித்தவர்களைத் தான் நேசிப்பான். அவன் புத்திமான். அவன் ஒரு காரியத்தையும் ஆத்திரமாயும், அவசரமாயும் செய்யமாட்டான். அவன் மிகவும் பலவான்; ஆயினும், தன் பலத்தைச் சரியான வழியில் உபயோகிப்பான். இளைத்தோர்களுக்கு அபாயத்தில் உதவும் நண்பன். ஆகவே, அவர்கள் அவன் பக்கத்திலிருக்கும் வரையில் க்ஷேமமாக யிருந்தார்கள்.

2. ஒருவரும் அவனை எதிர்த்து ஜெயிக்க முடியாது. அவனிடம் அநேக தெய்வீக ஆயுதங்கள் இருந்தன; கவசத்தையும் ஊடுருவிச் செல்லும் கூர்மையான அம்புகளைப் பெற்றிருந்தான். இலக்ஷ்மணனும் தைரியமும் பராக்கிரமமும் பெற்றிருந்தான்.

3. காட்டில் இராம லக்ஷ்மணர் பல ராக்ஷஸர்களைக் கொன்றனர். இந்த ராக்ஷஸர்கள் காட்டில் அலைந்து திரிந்து மனிதர்களைக் கொன்று தின்பார்கள். அவர்களது அரசன் இலங்கையில் வாழ்ந்துவந்த இராவணன். அவனும் பயங்கரமான அரக்கன்; மிகவும் பலசாலி.

4. ஒரு ராக்ஷஸி சீதையைத் தூக்கிக்கொண்டுபோக முயன்றாள். அவள் இராமனைத் தன் நாயகனாக அடையவாக்கொண்டாள். அவள் பெயர் சூர்ப்பநகை. அவள் இராவணனுடைய தங்கை. இலக்ஷ்மணன் அவளது விருப்பத்தை அறிந்து அவளது மூக்கையும் காதுகளையும் அறுத்து விட்டான். அந்த ராக்ஷஸி இலங்கையிலுள்ள இராவணனிடம் ஓடிப்போனாள்.

5. இராவணன் பராக்கிரம அரசன். அவன் தன் பொன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பத்துத் தலைகள். அவன் தேகமுழுதும் ரணகாய அடையாளங்களும் இருந்தன. சூர்ப்பநகை தன் கண்களில் நீர்வடிய

அவனிடம் சென்று "இராவண சகோதரனே! இராமன் என்னும் மனிதன் உன்னைவிட எல்லாவற்றிலும் சிறந்தவனாயிருக்கிறான்; அவனுக்கு அழகான மனைவி யிருக்கிறாள். உலகத்திலுள்ள அழகிகளைவிட அவள் மிகவும் அழகானவள். உனக்காக அவளைத் தூக்கிவர முயன்றேன். ஆனால், இராமனுடைய தம்பி இலக்ஷ்மணன் என் மூக்கையும் காதுகளையும் அறுத்துவிட்டான்," என்றாள்.

6. இராவணனுக்குக் கோபம் பிறந்தது. "யார் அந்த இராமன்? அவனுக்கு நான் பயப்படேன்," என்று சொல்லிக்கொண்டே தன் உறவினனை மாரீசனைக் கூப்பிட்டு, "நீ ஓர் புள்ளிமான் வடிவமெடுத்துக்கொண்டு, சீதையிருக்குமிடத்திற்கு அருகே சென்று கொஞ்ச நேரம் மேய்ந்துகொண்டிரு," என்று கட்டளையிட்டான்.

7. சீதை தன் ஆசிரமத்தின் வாயிற்படியில் உட்கார்ந்திருந்தாள். அவள் அருகே மேய்ந்துகொண்டிருந்த புள்ளிமானைக் கண்டாள். அது மிகவும் வசீகரமாயும் அழகாயுமிருந்தது. அதைக கண்டதும் தன் அருமையான இராமனைப் பார்த்து "அந்த மானைப் பாருங்கள்! எவ்வளவு அழகாக இருக்கிறது! அதை எனக்குப் பிடித்துத் தருவீர்களோ?" என்று கேட்டாள்.

8 இராமன் அதைப் பிடிக்க விரும்பினான்; அதன் பின்னே ஓடிப்போனான். அந்த மான் உண்மையானதல்ல. மான் வேஷந்தரித்த ஓர் அரக்கனே அது. அந்த அரக்கன் மென்மேலும் சென்றான். இராமனும் அதன்பின் தொடர்ந்தான். அது மிகவும் தூரம் சென்றது. ஆனால், இராமன் தன் அம்பினால் அதை எய்தான். அது கீழே விழுந்தது. இராமனுடைய குரலில், "ஓ லக்ஷ்மண! என் தம்பி! என்னிடம் வா! நான் இறக்கிறேன்," என்று சொல்லி அது இறந்தது. அந்த மான் மாரீசனே. இவ்விதம் மாரீசன் இராமனது கையால் மாண்டான்.

---

10. Ravana carries away Sita

Sometime passed. Sita was waiting at the cottage door. Rama did not return. So she asked Lakshmana to go and see what became of Rama. Then she heard the cry, "O Lakshmana! Come to me at once I die!" She said, "Lakshmana! Please go and help him.

2. Lakshmana obeyed her. Sita was alone in the cottage. Then a Sanyasi came. He begged of her some food. Sita offered some food. The begger was not a true one. He was Ravana himself in the disguise of a sanyasi. He asked her to come with him. Sita was very much afraid. She turned away for him. Then he asked her to come with him and be the Queen of Lanka. She grew wild at his words and said, 'Don't you know that I am the wife of the warrior Rama? Be off, my husband will kill you."

3. Ravana also grew wild and he cast aside his begger's dress and stood with his ten heads and twenty arms He caught hold of Sita. He threw her into his car that was standing near and rose into the sky. Sita cried aloud for help.

4. The Vulture King *Jatayu* was asleeping at the top of a mountain. He heard the cry of Sita. So he attacked Ravana but he was very old. Ravana cut off his wings. He fell down bleeding.

5. Then Ravana rode away to *Lanka* with Sita. Sita was weeping bitterly and begged the wicked Ravana to leave her. But he refused.

10. இராவணன் சீதையை எடுத்தேகுதல்

கொஞ்ச நேரம் கழிந்தது. சீதை ஆசிரமத்து வாசலில் காத்துக்கொண்டிருந்தாள். இராமன் திரும்பி வரவில்லை. ஆகவே, அவள் இலக்ஷ்மணனை "இராமருக்கு என்ன நேர்ந்தது" என்று பார்த்து வரும்படி கூறினாள். அப்பொழுது, 'ஓ லக்ஷ்மண! உடனே என்னிடம் வா! இல்லையேல் நான் இறக்கின்றேன்," என்ற குரலை அவள் கேட்டாள். "இலக்ஷ்மணரே! தயைசெய்து அவருக்கு உதவி செய்யப் போம்," என்று கூறினாள்.

2. இலக்ஷ்மணனும் அவள் சொற்படி நடந்தான். ஆசிரமத்தில் சீதை தனியாக இருந்தாள். அப்போது ஒரு சன்னியாசி வந்தான். அவன், அவளைக் கொஞ்சம் ஆகாரம் பிச்சை கேட்டான். அந்தச் சன்னியாசி உண்மையானவனல்ல. அவனே இராவணன்; சன்னியாசி வேடந் தரித்திருந்தான். அவன் அவளைத் தன்னோடு வரும்படிக்குக் கேட்டான். சீதை மிகவும் பயந்து விட்டாள்; அவனிடமிருந்து திரும்பிப் போனாள். பிறகு அவன் தன்னுடன் வந்து இலங்கைக்குப் பட்டமகிஷியாக இருக்கும்படி அவளை வேண்டினான். அவள் அவனது வார்த்தைகளைக் கேட்டுச் சினங்கொண்டாள். "நான் யுத்தவீரனை இராமரது மனைவி யென்று உனக்குத் தெரியாதா? உடனே ஓடிப் போ! இல்லாவிட்டால் என் கணவர் உன்னைக் கொன்று விடுவார்." என்று கோபமாகச் சொன்னாள்.

3. இராவணனும் மிக்க கோபங் கொண்டான். தன் சன்னியாசி உடையை வீசி எறிந்தான். பத்துத் தலைகளுடனும் இருபது கரங்களுடனும் எதிரில் நின்றான்; சீதையைப் பிடித்துக்கொண்டான். அருகில் இருந்த தன் இரதத்தின்மேல் அவளை வைத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாய்க் கிளம்பினான். சீதை அபயக்குரல் இட்டாள்.

4. கழுகாசனன ஜடாயு ஒரு மரயினுச்சியில் தூங்கிக் கொண்டிருந்தது; சீதையின் அழுகுரலைக் கேட்டது. ஆகவே, அது இராவணனை எதிர்த்துச் சண்டை செய்தது

ஆனால், அது மிகவும் கிழமாயிருந்தது. இராவணன் அதனுடைய இறகுகளை வெட்டிவிட்டான். அது இரத்தம் சொரிந்து கீழே விழுந்துவிட்டது.

5. பிறகு இராவணன் சீதையுடன் இலங்கைக்குச் சென்றான். சீதை விக்கி விக்கி அழுதாள். தன்னை விட்டு விடும்படி அந்தத் துஷ்டனை இராவணனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். ஆனால் அவன் மறுத்து விட்டான்.

11. Hanuman, the friend of Rama

Rama and Lakshmana returned to their cottage but could not find Sita in it. So they went in search of her. On their way, they met *Jatayu*. The poor bird was lying on the ground dying. Jatayu said before dying, Ravana has taken Sita.

2. They went towards the south to find Sita. Rama was mad with sorrow. Lakshmana too felt great sorrow. He consoled Rama saying. "Dear brother! Do not be too sorry; we shall find her soon." Was Lakshmana not brave?

3. Rama was cheered by his words but who could help them in the forest? At last they found a help. They met *Hanuman*, the wise monkey. He was the commander of *Sugriva*, the monkey-king. Hanuman knew the cause of their sorrow. He said that he would find out Sita. So he set off towards the south. He came to the sea. Hanuman was the son of *Vayu*. He had many powers. He could become as large as a mountain and he

could shrink to the size of the thumb. His tail was very long. He made a great jump. He crossed the sea and landed himself on the island of *Lanka*.

4, He went in search of Sita and found her in the palace garden under an *Asoka* tree. Round her sat many *Rakshasis*. Hanuman heard, sitting on the branch of a tree, what Sita was telling herself. She was always uttering the words of Sri Rama. Her body was covered with dust. She was very weak and lean. Hanuman felt sorry to see her so sorrowful.

5. Ravana came to the garden and said: "Sita! My beauty! Be my queen, why are you afraid of me?"

6. But Sita grew angry, "Go away cruel Monster. Soon your Lanka will be in ruins. What are you to Rama? You are 'only a mouse in the hands of the lion' I will never become your wife though I may be here for one thousand years."

7. Ravana went away ashamed and angry.

---

11. இராமபக்தனை அநுமான்

இராமனும் இலக்ஷ்மணனும் தங்களுடைய ஆசிரமத்திற்குத் திரும்பினர்கள். ஆனல், அதில் சீதையைக்காண வில்லை. ஆகவே, அவளைத் தேடிக்கொண்டு போனர்கள்; வழியில் ஜடாயுவைக் கண்டார்கள். அந்தப் பரிதாபமான பக்ஷி தரைமீது படுத்துக்கொண்டு சாகுந் தருணத்திலிருந்தது. சாவதற்குச்சிறிது முன் "இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனன்," என்று சொல்லி உயிரை விட்டது.

2. அவர்கள் தெற்கு நோக்கிச் சீதையைத் தேடிச் சென்றார்கள். இராமன் துக்கத்தினாலே பைத்தியம் பிடித்தவன் போலிருந்தான். இலக்ஷ்மணன்கூட அதிக வருத்தப் பட்டான். ஆயினும், அவன் இராமனுக்கு ஆறுதல் கூறி வந்தான். "பிரியமுள்ள அண்ணா! அதிகமாக வருந்தவேண்டாம். நாம் சீதையை விரைவினில் கண்டுபிடிப்போம்," என்று தேறுதல் கூறினான். இலக்ஷ்மணன் தீரனல்லவா?

3. அவனது மொழிகளைக் கேட்டு இராமன் தேறினான். அந்தக்காட்டில் யார் அவர்களுக்கு உதவி செய்யக் கூடும்? கடைசியில் அவர்களுக்கு உதவி கிடைத்தது. புத்திசாலிக் குரங்கான அநுமானை அவர்கள் கண்டார்கள். அவன் வானர அரசனான சுக்ரீவனுக்குச் சேனாதிபதியாக இருந்தான். அநுமான் அவர்களது துக்கத்தின் காரணத்தைத் தெரிந்திருந்தான். சீதையைத் தான் கண்டு பிடிப்பதாகக் கூறினான். ஆகவே, தெற்கு நோக்கி அவன் புறப்பட்டுவிட்டான்; கடற்கரையை அடைந்தான். அநுமான் வாயுதேவனது புத்திரன். அவனுக்குப் பல சக்திகள் உண்டு. மலைபோல அவ்வளவு பெரிதாக ஆகவும், கைப் பெருவிரல் போல் அவ்வளவு சிறியதாக ஆகவும் அவனுக்குச் சக்தி உண்டு. அவனது வால் மிகவும் நீளமானது. அவன் ஒரே தாண்டாகத் தாண்டினான்; கடலைக் கடந்து இலங்கைத் தீவில் இறங்கினான்.

4. அவன் சீதையைத் தேடிச்சென்று அரண்மனைத் தோட்டத்தில் அசோக மரத்தின் கீழ்ச் சீதையைக் கண்டான். அவளைச்சுற்றிலும் பல இராக்ஷஸிகள் உட்கார்ந்திருந்தார்கள். அநுமான் ஒரு மரத்தின் கிளைமீது அமர்ந்து சீதை சொல்வதை யெல்லாம் கேட்டான். அவள் எப்பொழுதும் தன் பிரியமுள்ள கணவன் பெயரான ஸ்ரீ ராமா என்ற

பதத்தையே சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுடைய தேகமெல்லாம் தூசு படிந்திருந்தது. அவள் பலஹீனமாயும் மெலிந்தும் இருந்தாள். அவள் அவ்வளவு துக்ககரமாயிருப்பதைக் காண அநுமானும் வருத்தங்கொண்டான்.

5. இராவணன் தோட்டத்திற்குள் வந்தான். "என் அழகே! சீதா! என் ராணியாக இரு. என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்டான்.

6. ஆனால், சீதை கோபங்கொண்டு, "கொடூர ராக்ஷஸனே; வெளியே போ. உன்னுடைய லங்கை விரைவில் அழியப் போகின்றது. இராமருக்கு நீ எவ்வளவு? 'சிங்கத்தின் கையில் அகப்பட்ட சுண்டெலி,' போன்றவன் நீ. ஆயிரம் வருஷங்கள் இங்கிருந்தபோதிலும், நான் உனது மனைவி ஆகமாட்டேன்," என்று சொன்னாள்.

7. இராவணன் அவமானப்பட்டுக் கோபத்துடன் வெளியே சென்றான்.

---

12. *The Death of Ravana*

Hamuman heard all these things from the branch of the tree. When Ravana went away he got down from the tree and went straight to Sita. Though Hanuman was ugly, his heart was good. He bowed to her and said, "O! Mother Sita! Do not fear. I come from your dear husband Rama, Give me a token to take to him. I will give him the token and tell him where you are and how you are.

2. At first Sita was afraid. When he spoke these words, she knew his heart was good. She gave her ring as a token to Rama. Hanuman leaped back from Lanka to India. He set fire to the golden city of Lanka before he left.

Hanuman flew through the air and came to Rama. How happy the brothers were then! He gave the token which Sita gave him to Rama. Rama took the ring and kissed it. He was very very glad. He praised Hanuman much.

3. Sugriva, the monkey king, and Hanuman, the commander, led a great army of monkeys against the Rakshasas When the army marched through the woods, clouds of dust rose high in the sky.

4. This army stood at the seashore. A bridge was built by the monkeys to cross to Lanka. There ensued a battle between Ravana and Rama. The battle raged fiercely for many days. The warrior brothers killed many thousands of huge monsters. The monkeys killed many of them. At last Rama shot an arrow at Ravana. He fell down dead.

5. Sita was always saying, 'Rama my dear husband will come.' Now Rama came and stood before her. Sita raised her head and saw her dear Rama. She bowed to him. What a happy sight it was! Their sorrow came to an end.

6. They returned to Ayodhya. On their way, they met Bharatha. He received Rama with open arms. Everywhere was joy and gladness. Bharatha took off the golden sandles from the throne nd placed them at Rama's feet; saying "Your throne is ready for you. I have kept it safe till your return to Ayodhya."

7. Then Rama sat on the throne Sita sat by his side. Near Rama were his dear brothers and councillors. They were all happy once again and the people of Ayodhya were very glad.

இராவணன் மரணம்

மரத்தின் உச்சியிலிருந்து இவ்விஷயங்களை அநுமான் கேட்டிருந்தான். இராவணன் போனபின் அவன் மரத்தினின்றும் கீழிறங்கி நேராகச் சீதையிடம் சென்றான். அநுமான் அவலக்ஷணமாக இருந்தபோதிலும் அவனது இருதயம் பரிசுத்தமானது. அவன் அவளை வணங்கினான். "என் அன்னை சீதையே! நீங்கள் பயப்படவேண்டாம். நான் உமது கணவரான ஸ்ரீராமரிடமிருந்து வந்தேன். அவரிடம் கொடுக்க ஓர் அடையாளத்தை எனக்குக் கொடுங்கள். அவரிடம் அதைக் கொடுத்து, நீர் எங்கிருக்கின்றீர் என்றும், எப்படி இருக்கின்றீர் என்றும் நான் அவரிடம் சொல்லுகின்றேன்," என்று வினயமாகக் கேட்டான்.

2. முதலில் சீதை பயப்பட்டாள். இவ்வார்த்தைகளைச் சொன்னபொழுது அவனது இருதயம் பரிசுத்தமாக இருப்பதைத் தெரிந்துகொண்டாள். அவள் தனது மோதிரத்தை அடையாளமாக கொடுத்து இராமரிடம் அனுப்பினாள். அநுமான் திரும்பவும் கடலைத்தாண்டி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். தாண்டுவதற்கு முன்பு லங்கைக்குத் தீ வைத்துக் கொளுத்தினான். அநுமான் ஆகாய மார்க்கமாகப் பறந்து இராமனிடம் சேர்ந்தான். சகோதரர்களின் சந்தோஷந்தான் என்ன! சீதை கொடுத்த அடையாள மோதிரத்தை அவன் இராமனுக்கு அளித்தான். இராமன் அதை வாங்கிக்கொண்டு அதற்கு முத்தமிட்டான். அவன் அதிக சந்தோஷ மடைந்தான்; அநுமானை மிகவும் புகழ்ந்தான்.

3. வானர ராஜனை சுக்ரீவனும் சேனாதிபதியான அநுமானும் பெரிய வானரசேனை ஒன்றை கூட்டிக்கொண்டு இராக்ஷஸர்களை எதிர்க்கச் சென்றனர். அந்த சேனை ஆரண்யத்தில் போகும்போது ஆகாயத்தில் தூள் பறந்தது.

4. அந்தச் சேனை கடற்கரையண்டை நின்று விட்டது. இலங்கைக்குப் போவதற்குக் கடலைத் தாண்ட ஒரு பாலம் குரங்குகளால் கட்டப்பட்டது. இராவணனுக்கும் இராமனுக்கும் யுத்தம் நடந்தது. பராக்கிரம வீர சகோதரர்கள் பல்லாயிர ராக்ஷஸர்களைக் கொன்றனர். வானரங்கள் அவர்களில் அநேகரைக் கொன்றன. கடைசியில் இராமன் இராவணன் மீது ஓர் அம்பு எய்தான். அவன் இறந்து கீழே விழுந்தான்.

5. சீதை எப்பொழுதும்; "ஸ்ரீராமர், என் பிரியமுள்ள நாதர், வருவார்," என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள். இப்போது இராமன் அவன் முன்னே வந்து நின்றான். சீதை தன் தலையை நிமிர்த்தித் தன் அன்புள்ள இராமனைக் கண்டாள்; அவனை அடிபணிந்து வணங்கினாள். என்ன அருமையான காட்சி அது! அவர்களது துக்கமெல்லாம் முடிந்தது.

6. அவர்கள் அயோத்திக்குத் திரும்பினார்கள். அவர்கள் வழியில் பரதனைச் சந்தித்தார்கள். அவன் இராமனைக் கைகளை விரித்து வரவேற்றான். எங்கும் சந்தோஷமும் கொண்டாட்டமும் குடிகொண்டிருந்தன. பரதன் பொன் பாதரக்ஷைகளைச் சிம்மாசனத்தினின்றும எடுத்து இராமனது பாதங்களண்டை வைத்து "உமது சிம்மாசனம் தங்களுக்காக ஆயத்தமாக இருக்கிறது. அதைத் தாங்கள் அயோத்திக்கு வரும் வரையில் க்ஷேமமாகப் பார்த்து வந்தேன்," என்று சொன்னான்.

6. பிறகு இராமன் சிம்மாசனத்தில் அமர்ந்தான். அவனது பக்கத்தில் சீதையும் அமர்ந்து கொண்டாள். இராமனுக்கு அருகே அவனது அன்பு மிகுந்த சகோதரர்களும் மந்திரிமார்களும் இருந்தார்கள். மீளவும் அவர்கள் யாவரும் களிப்படைந்தார்கள். அயோத்தியா வாசிகளும் பெருமகிழ்ச்சி பெற்றார்கள்.

Sri Rama Pattabishegam.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

శ్రీరాముల పట్టాభిషేకము.

ஸயின்டி(f)பிக் (t)டர்ம்ஸ்—Scientific Terms

சாஸ்த்ர சம்பந்தமான பதங்கள்

ஸாயில், Soil = மண்
ஸப்-ஸாயில், Sub-soil = அடிமண்
ஸாண்டி ஸாயில், Sandy soil = மணல்வளம்
(p)பொராஸிடி, Porosity = சன்ன துவாரமுடைமை, [இரந்திரமுடைமை
(p)போர்ஸ், Pores = சன்ன துவாரங்கள்
(p)போரஸ், Porous = சூக்ஷ்மமான துவாரங்களுள்ள
எலாஸ்டிஸிடி, Elasticity = ஸ்திதிஸ்தாபகம், நீட்சி
எலாஸ்டிக், Elastic = ஸ்திதிஸ்தாபகமுள்ள
ப்ளாஸ்டிஸிடி, Plasticity = வணங்கும் தன்மை
ப்ளாஸ்டிக், Plastic = வணங்கத்தக்க
ஹார்ட்னெஸ், Hardness = கடினம்
ஸாப்ட், Soft = மிருதுவான
க்ரம்ளிங், Crumbling = உதிரும், பொடியாகக்கூடிய
ராக், Rock = பாறை
(d)ட்ரெயின், Drain = வடித்தல்
(d)ட்ரெயினேஜ், Drainage = கழிவுகால்
வெஜிடெபில், Vegetable = கந்தமூலம், தாவரம்
(adj.) கந்தமூல சம்பந்தமான
மோல்ட், Mould = பூஞ்சு
மோல்டி, Mouldy = பூஞ்சு பிடித்த
லோம், Loam = பசளைமண்
க்ரானெட், Granite = கருங்கல்
ஸாண்ட்ஸ்டோன், Sandstone = சந்தனக்கல்
ஸோப்ஸ்டோன், Soapstone = மரக்கல்
ஸ்லாப்(b), Slab = பலகை
(c)கால் (c)ஸைட், Calcite = கோலக்கல்

லா(t)டெரைட், Laterite = சிவந்தக்கல்
மார்பில், Marble = சலவைக்கல்
லிம்-ஸ்டோன், Lime stone = சுண்ணாம்புக்கல்
குவாரி, Quarry = சுரங்கம்
(p)ப்ரா(p)பர்டி, Property = குணம்
(g)க்ராவெல், Gravel = சரள்
எக்ஸ்(p)பெரிமென்ட், Experiment = பரிசோதனை
வாட்டர்வேஸ், Waterways = நீர் ஓட்டங்கள்
ஸ்லோப், Slope = சரிவு
(adj) = சரிவான
ஸ்பிரிங், Spring
(f)பவுண்டன், Fountain } = ஊற்று
ஸ்(p)பீட்(d), Speed = வேகம்
(f)ப்ளோ, Flow = ஓட்டம்
(b)பெட்(d), Bed = படுக்கை
ஸ்டோரேஜ், Storage = சேர்க்கை
(b)பண்ட்ஸ், Bunds = கரைகள் [நதிமுகத்துவாரபூமி
(d)டெல்டா, Delta = அரங்கம், நதிமுகத்துவார மண்மேடு,
(f)பில்ட்ரேஷன், Filteration = வடிகட்டுதல்
(f)பில்ட்ரேட், Filterate = வடித்திரம்
(f)பில்டர், Filter = வடிகருவி
(f)பில்டர்-பேபர், Filter-paper = வடிதாள்
(d)டிஸ்ஸால்வ், Dissolve = கரைதல்
ஸூவர், Sewer = ஜலதாரை
ஸூவேஜ், Sewage = சாக்கடை
இம்ப்யூரிடி, Impurity = அழுக்கு, அசுத்தம்
(b)பாக்வாட்டர்ஸ், Backwaters = உப்பங்கழிகள்
லைட்-அவுஸ், Light-house = கலங்கரை விளக்கம்
லாக், Lock = படிமதகு, கால்வாய் அடைப்பு

ஸ்லூயிஸ்,Sluice = மதகு
ஹார்பர், Harbour = துறைமுகம்
(c)க(p)பாஸிடி, Capacity = பரிமாணம்
வேன், Vane
வெதர் (c)காக், Weather-cock } காற்றுத் திசைகாட்டி
வெதர், Weather = காலஸ்பாவம், காலம்
(b)ப்ரீஸி, Breezy = இளங்காற்றுள்ள
ஸல்ட்ரி, Sultry = புழுக்கமான, வெப்பமான
அப்ளையன்ஸெஸ், Appliances = கருவிகள்
(t)தெர்மாமீடர், Thermometer = உஷ்ணமானி
(d)டிஸ்க்ரிப்ஷன், Description = வர்ணனை, விளக்கம்
ரி(c)கார்ட், Record = குறிப்பு
ஸெம(p)போர், Semaphore = கைகாட்டி
க்ரே(d)டியன்ட், Gradient = சரிவு
(t)டெம்பரேச்சர், Temperature = உஷ்ணநிலை
எவா(p)பொரேட், Evaporate = ஆவியாக்கு
(d)டியூ, Dew = பனி
மிஸ்ட், Mist = மூடுபனி
மிஸ்டி,Misty = மூடுபனி படர்ந்த
(t)ட்விலைட், Twilight = சந்திரவெளிச்சம், அந்தி
(p)பேஸஸ், Phases = கலை, திதி
கிலன், Kiln = காளவாய் சூளை
(b)பர்னிங், Burning = எரிகின்ற
(f)ப்ளேம், Flame = ஜ்வாலை
(b)பர்னர், Burner = காய் [கூடிய
கம்(b)பஸ்டி(b)பில், Combustible = எரிபொருள், எரியக்
ஸ்கால்(d)டிங், Scalding = வெந்நீரினற்சுடு
ஸ்கால்ட், Scald = வெந்த புண்
(b)பொரா(t)டர், Barometer = வாயு (பார) மானி

வெதர்-(g)கிளாஸ், Weather-glass = கால நிலைக்கருவி
(p)பீரியாடிகல், Periodical = பருவ
ஆல் (t)டி(t)டியூட், Altitude = உயரம்
(c)சார்ட், Chart = படம்
ஸீஸன் ரிபோர்ட், Season Report = காலநிலைக் குறிப்பு
ரெயின்-கேஜ், Rain-gauge = வர்ஷமானி, மழையளவிடுங் [கருவி
ஸிலின்(d)ட்ரிகல், Cylindrical = கோளவடிவான, வட்ட [வடிவாண
ஷேப், Shape = ஆகிருதி, உருவம்
ஸைஸ், Size = பரிமாணம், அளவு
மாக்நெடிக், Magnetic = காந்தத்தன்மையுள்ள
ஸீஸன், Season = பர்வம்
(c)கோல்ட்(d), Cold = குளிர்காலம்
(d)ட்யூயி, Dewy = பனிகாலம்
ஹாட்(t), Hot = கோடைகாலம்
ரெய்னி, Rainy = மழைகாலம்
ஸோயிங், Sowing = விதைவிதைக்குங் காலம்
ஸம்மர், Summer = முதுவேனிற் காலம்
ஸீஸன்-ரெயின், Season-rain = பருவமழை
எக்லிப்ஸ், Eclipse = கிரகணம்
அம்(b)ப்ரா, Umbra = தனிநிழல்
(p)பெனம்(b)ப்ரா, Penumbra = கண்டசாய
ஆல்மனக். Almanac = பஞ்சாங்கம்
கான்ஸ்டல்லேஷன்ஸ், Constellations = தாரகணங்கள், நக்ஷத்திரக்கூட்டங்கள்
ஸாலிட்(d), Solid = த்ருடம் (திடநிலைவஸ்து)
லிக்(q)விட், Liquid = திரவம்
(g)காஸ், Gas = வாயு
வே(p)பர், Vapour = ஆவி

ஏர், Air = சாதாரண வாயு
(c)கொயி(s)ஷன், Cohesion = சமஸ்லேஷ (சம்ஹதி)
(t)டெஸ்ட்-(t)ட்யூப், Test-Tube = சோதனைக்குழாய்
மெல்(t)டிங், Melting = உருகுதல்
லிக்(q)கு(f)பாக்ஷன், Liquifaction = திரவீபரணம்
(b)பாய்லிங், Boiling = பொங்குதல்
ஸால்வென்ட், Solvent = கரைக்குந் திரவம்
ஸொலுயூஷன், Solution = திராவணம், விலயனம்
(d)டிஸ்ஸால்வ், Dissolve = கரை
மோடிவ் (p)பவர், Motive Power = தூண்டுஞ் சக்தி
வால(t)டைல், Volatile = ஸ்திரமற்ற (நிலையற்ற)
(f)பிக்(x)ஸெட், Fixed = ஸ்திர, நிலையுள்ள
வார்னிஷ், Varnish = மெருகெண்ணெய்
லூ(b)ப்ரி(c)கன்ட், Lubricant = மசகு, கீல்பசை
லூ(b)ப்ரி(c)கேட், Lubricate = வழவழப்பாக்கு
(p)பெயின்ட், Paint = வர்ணம்
கலர், Colour = நிறம்
நை(t)டர், Nitre = வெடியுப்பு
இன்(f)ப்ளேம(b)பிலிட்டி, Inflamability = எரியுந்தன்மை
(p)பாஸ்பரஸ், Phosphorus = ஸ்புரம்
ஐயோ(d)டைன், Iodine = நைலம்
ட்ரன்(k)க், Trunk = முண்டம்
லிம்(b)ப், Limb = அவயவம், அங்கம்
ஜாயின்ட்(t), Joint = கீல், பூட்டு
மஸில், Muscle = தசை, பேசி [உறுப்புகள்
ஸென்ஸரி-ஆர்(g)கன்ஸ், Sensory-organs = உணர்ச்சி
(p)பாஸ்ச்சர், Posture = நிலை
(z)ஸெனித், Zenith = உச்சி
ஹொரை(z)ஸன், Horizon = அடிவானம்

ஆர்(b)பிட் ஆப் தி எர்த், Orbit of the earth = சூரியவீதி
ஆக்ஸிஸ், Axis = இருசு
அப்பேரன்ட், Apparent = தோற்றம்
யு-ட்யூப், U-tube = பகரக்குழாய்
லெவல், Level = மட்டம்
டி(g)க்ரி, Degree = அம்சம், கூறு
லூமினஸ். Luminous = பிரகாசிக்கிற
ரி(f)ப்ளெக்ஷன், Reflection = பிரதிபிம்பம்
இமேஜ், Image = பிம்பம் [யான)
போல்-ஸ்டார், Pole-star = துருவநக்ஷத்திரம் (த்ருவநக்ஷ
ஆரியன்(g)க்ரூப், Orion-group = மிருகசீருஷக் கூட்டம்,
[திருவாதிரைக் கூட்டம்
ஸீரியஸ் [(d)டாக்-ஸ்டார்], Sirius (dog-star) = அக்னி
[நக்ஷத்திரம்
தி (g)க்ரேட் (b)பேர், The great bear = சப்தரிஷி மண்
வெயிட், Weight = பாரம் [டலம்
கார்க், Cork = நெட்டி
(p)ப்ரெஷ்ஷர், Pressure = அழுத்தும் சக்தி (நிஷ்பீடனம்)
ஸ்ப்ரிங் (b)பாலென்ஸ், Spring-Balance = வில்தராசு
[முறுக்குக் கம்பித்தராசு
(f)ப்ளோடேஷன், Floatation = மிதக்குந்தன்மை
லாக்(t)டாமீடர், Lactometer = பால் கனமானி
ஐட்ராமீடர், Hydrometer = திரவ (கன) மானி
(b)பாயிஸ், Buoys = மிதப்பு, லாகவம்
வாட்டர்-லெவல், Water-level = ஜலமட்டக் கருவி
(p)ப்ளம்-லைன், Plumb-line = தூக்கு நூல்
ஸிரிஞ்ஜ், Syringe = பீச்சாங்குழல்
வால்வ், Valve = கபாடம்
ப்ளக்(g), Plug = அடைப்பு
வாட்டர் பம்ப், Water-pump = ஜலயந்திரம்

இன்(f)ப்ளேடர் Inflator = காற்று உப்பி
ஏர்-(p)பம்ப், Air-pump = வாயு வாங்கி
ஸ்டீம்-(p)பவர், Steam-power = ஆவிசாமர்த்தியம்
ஸ்டீம்-என்ஜின், Steam-engine = நீராவி யந்திரம்
(b)பெல்லோஸ், Bellows = துருத்தி
(f)பர்னேஸ், Furnace = சூளை, உலைக்களம்
மெ(t)டல், Metal = உலோகம்
அல்லாய், Alloy = கலப்பு உலோகம்
வேர், Ware = தட்டுமுட்டு
ப்ளேடெட், Plated = முலாம்பூசின
ஸால்(d)டர் Solder = பற்று, பொடி
க்ரிஸ்டாலிஸேஷன், Crystalization = ஸ்படிகப்படுத்துதல்
(d)டிகான்(t)டேஷன், Decantation = தெளிவிறக்கல்
(s)ஸப்ளிமேஷன், Sublimation = ஊர்த்துவபாதனம்
(d)டிஸ்டில்லேஷன், Distillation = அதஃபாதனம்
(c)கன்ட்ராக்ஷன், Contraction = ஆகுஞ்சனம்-சுருங்கல்

The HINDU—Madras, (2—3—1927)

[(b)பா(t)டானிகல் (t)டர்ம்ஸ்] **Botanical Terms**—
தாவர வார்த்தைகள்

ஸீட், Seed = விதை
(t)டெஸ்டா, Testa = மேல்தோல்
(t)டெ(g)க்மென், Tegmen = உள்தோல்
எம்(b)ப்ரியோ, Embryo = முளை
(p)ப்ளுமலோ, Plumalo = முளையின் மேல்பாகம்
ரேடி(c)கில், Radicle = முளையின் கீழ்பாகம்
என்(d)டாஸ்(p)பர்ம், Endosperm = அங்குரச்சதனம்
மைக்ரோ(p)பைல், Mycropyle = அண்ட விவரம்
கோ(t)டில்(d)டான்ஸ், Cotyledons = அங்குரதளங்கள்

(d)டிகோ(t)டில்(d)டோனஸ் ஸீட், Dicotyledonous [seed = துவியரங்குர தளச்செடி

மோனோகோடில்டோனஸ் ஸீட், Monocotyledonous [seed = ஏகாங்குர தளச்செடி

(t)டாப் ரூட், Tap root = ஆணிவேர்

(f)பை(b)ப்ரஸ் ரூட், Fibrous root = சல்லிவேர்

அட்வெண்டி(t)டியஸ் ரூட், Adventitious root = ஒட்டுவேர்

எரியல் ரூட், Aerial root = விழுது

ப்ளெஷ்ஷி ரூட், Fleshy root = சதைப்பற்றுள்ள வேர்

(p)பாரஸீடிக் ரூட், Parasitic root = புல்லுருவி வேர்

(b)ப்ரீதிங் ரூட், Breathing root = சுவாசிக்கும் வேர்

ரூட் ஹேர்ஸ், Root hairs = வேர்த்தூய்கள்

ஷூட், Shoot = பிரகாண்டம்

நோட்(d), Node = கணு

இன்ட்டர்நோட்(d), Internode = கணுமத்தியபாகம்

ஆக்ஸில், Axil = கணிச்சந்து

(p)பெ(t)டியோல், Petiole = இலைக்காம்பு

லெமினு ஆர் (b)ப்ளேட்(d), Lamina or blade = பத்ரம்

ஸ்டோம(t)டா, Stomata = பத்ரசூக்ஷ்மரந்திரம்

(p)பின்னேட்லி (c)காம்(p)பவுண்ட், Pinnately compound = சிறகு ஒழுங்கு பின்னபத்ரம்

(p)பல்மேட்லி வெயின்ட்(d) Palmately vained = சமரேகா பத்ரம்

நெட் வெயின்ட்(d), Net veined = விஷமரேகா பத்ரம்

ஓவெட், Ovate = கோளாகாரம்

சொ(t)ட்டேட், Rotate = சக்கராகாரம்

எல்லிப்டிக், Elliptic = சமகோளாகாரம்

லினியர், Linear = நீண்ட வடிவம்

ஆ(b)ப்லாங், Oblong = நீண்ட சதுரவடிவம்

சோ(t)டண்ட், Rotound = வட்டவடிவம்

ஓவல், Oval = அண்டாகிருதி
(c)கார்(d)டேட், Cordate = இரத்தாசயவடிவம்
ஸா(g)கிட்டேட், Sagittate = அம்பு நுனிவடிவம்
லான்ஸியோலேட், Lanceolate = ஈட்டிவடிவம்
என்(t)டைர் மார்ஜின், Entire margin = சம ஓரம்
(d)டென்(t)டேட், Dentate = பல்வெட்டு
ஸெர்ரேட், Serrate = ரம்பப் பல்வெட்டு
(c)க்ரிநேட், Crenate = வளையப் பல்வெட்டு
ஆப்பொஸிட்(t), Opposite = எதிர்முகச் சேர்க்கை
ஆல்டர்னேட், Alternate = தனிச் சேர்க்கை
ஆக்ஸிலெரி (b)பட், Auxillary bud = கணுக்குருத்து
(t)டர்மினல் (b)பட், Terminal bud = நுனிக்குருத்து
ஸ்டி(d)ப்யூல், Stipule = கணுப்புச்சம்
ட்வைனர், Twiner = பின்னல் கொடி
(t)டெண்(d)ட்ரில், Tendril = பற்றுக்கம்பி
காலிக்ஸ், Calyx = புஷ்பகோசம், புஷ்பக்கிண்ணம்
ஸிபால்ஸ், Sepals = புறவிதழ்கள்
(c)கொரொல்லா, Corolla = தளவட்டம்
(p)பெடல்ஸ், Petals = தளங்கள்
ஸ்டெமென்ஸ், Stamens = கோசரங்கள்
(p)பிஸ்டில், Pistil = அண்டகோசம்
(f)பிலமென்ட், Filament = கேசரத்தாள்
ஆன்தெர், Anther = மகரந்தப்பை
(p)போலென், Pollen = மகரந்தத்தூள்
ஓவரி, Ovary = அண்டாசயம்
ஸ்டைல், Style = கீலம்
ஸ்டி(g)க்மா, Stigma = கீலாக்ரம்
(p)பால்லிநேஷன், Pollination = மகரந்த ஸ்பரிசம்
(f)பர்டிலிஸேஷன், Fertilisation = கருதரித்தல்

ஸிம்பில் (f)ப்ரூட், Simple fruit = சாமான்யக்கனி
கலெக்டிவ் (f)ப்ரூட், Collective fruit = கலப்புக்கனி
(b)பெர்ரி, Berry = தசைக்கனி
(d)டிரூப், Drupe = உள்ளோட்டுத் தசைக்கனி
(p)பெ(p)போ, Pepo = வெளியோட்டுத் தசைக்கனி
(d)ட்ரை (f)ப்ரூட், Dry fruit = வரக்கனி
லெகூம், Legume = துவிதாரண புடகபலம்
(f)பாலிக்கில், Follicle = ஏகதாரண புடகபலம்

[(p)பிஸியலாஜிகள் டர்ம்ஸ்] :Physiological Terms = சரீரநூல் வார்த்தைகள்

(p)பிஸியாலஜி, Physiology = சரீர நூல்
(t)தோரக்ஸ், Thorax = மார்பரை, நெஞ்சரை
அ(b)ப்(d)டோமென், Abdomen = உதரம்
ஸ்கல், Skull = கபாலம் [கங்காலம்
ஸ்கெலி(t)டன், Skeleton = எலும்புக்கூடு, அஸ்திபஞ்சரம்,
வெர்டீ(b)ப்ரல் காலம், Vertebral column = முள்ளந்தண்டு
வெர்டீப்ரா, Vertebra = கசேருமணி
கார்டி(t)லேஜ், Cartilage = குருத்தெலும்பு
மார்ரோ, Marrow = மச்சை
ஜாயின்ட்ஸ், Joints = மூட்டுகள், பூட்டுகள் [கள்
(f)பிக்ஸெட் ஜாயின்ட்ஸ், Fixed joints = அசையா மூட்டு
மூவெபில் ஜாயின்ட்ஸ், Moveable joints = அசையும்
ஹின்ஜ் ஜாயின்ட், Hinge joint = கீல் மூட்டு [மூட்டுகள்
(d)டபில் ஹின்ஜ் ஜாயின்ட், Double hinge joint = இரட்
[டை மடிப்புக்கீல்
(b)பால் அண்ட் ஸாகெட் ஜாயின்ட், Ball and socket
[joint = பந்து கிண்ணப்பூட்டு

(g)க்ளைடிங் ஜாயின்ட், Gliding joint = சருக்குக்கீல்,
[வழுக்குக்கீல்
(p)பிவெட் ஜாயின்ட், Pivot joint = முளைமூட்டு அர்த்த
(c)க்ளேவிகில், Clavicle = ஐத்ருகம் [சந்திரக்கல்
ஸ்கா(p)புலா, Scapula = தோள்பட்டை எலும்பு
ஹிப்(p)போன், Hip bone = இடுப்பெலும்பு
ஸினோவியல் மெம்ப்ரேன், Synovial membrane = கீழ்
ஸினோவியல் ஆயில், Synovial oil = கீல் எண்ணெய் [ஜவ்வு
லி(g)கமெண்ட்ஸ், Ligaments = தசைக்கயிறுகள்
(t)டென்(d)டன், Tendon = மாமிசத்தந்தி
ஆர்(g)கன்ஸ், Organs = உறுப்புகள்
மஸில், Muscle = தசை, தசைநார், பேசி
(f)பை(b)பர்ஸ், Fibres = தசை இழைகள்
வாலென்டெரி மஸில், Voluntary muscle = இச்சாதசை
இன்வாலன்டரி மஸில், Involuntary Muscle = அனிச்சா
[தசை
(b)பைஸெப்ஸ் மஸில், Biceps muscle = இருதலைத் தசை
[கார்
அலிமெண்ட்டரி கனல், Alimentary canal = ஆகாரக்
(p)பாரின்க்ஸ், Pharynx = தொண்டை [குழல்
(g)கல்லெட், Gullet = இரைக்குழல், அணவாஹி
ஸ்டமக், Stonach = இரைப்பை, ஜடரம்
லிவர், Liver = கல்லீரல்
ஸ்ப்ளீன், Spleen = மண்ணீரல்
(p)பன்க்ரியாஸ், Pancreas = கணயம் [ளங்கள்
ஸலிவரி க்ளாண்ட்ஸ், Salivary glands = உமிழ்நீர்க் கோ
(g)காஸ்ட்ரிக் ஜூஸ், Gastric juice = ஜடராக்னி
(c)ைசம், Chyme = அன்னப்பாகு
லாக்டியல்ஸ், Lecteals = ரஸாயனிகள், நிணநீர்க்குழாய்கள்

ஸ்டார்ச், Starch = மாவுப்பொருள்கள்
(p)ப்ரோ(t)டீட்(d), Proteid = சத்துப்பொருள்கள்
ஹார்ட்(t) Heart = இரத்தாசயம், ஹிருதயம்
ஆர்(t)டா, Aorta = பெருரத்தநாடி
ஸு(p)பீரியர் வெனு காவா, Superior vena cava = மேல் [புறத்துப் பிரதம அசுத்த ரத்தக்குழல்
இன்(f)பீரியர் வெனு காவா, Inferior vena cava = கீழ்ப் [புறத்துப் பிரதம அசுத்த ரத்தக்குழல்
ஆர்(t)டெரீஸ், Arteries = நாடி, தமனி
வேன்ஸ், Veins = நாளம், சிரை [நாடி, புப்புசதமனி
(p)பல்மொநெரி ஆர்(t)டெரி, Pulmonary artery = புப்புச
பல்மொநெரி வேன், Pulmonary vein = புப்புசநாளம், புப் [புச சிரை
(c)காபில்லெரீஸ், Capillaries = மயிரிழைக் குழாய்கள். [தந்துகக் குழாய்கள்
ரெட் கார்(p)பஸ்ஸல்ஸ், Red corpuscles = சிவப்பு ஜீவ [அணுக்கள்
ஓய்ட் கார்பஸ்ஸல்ஸ், White corpuscles = வெள்ளை ஜீவ
லிம்ப், Lymph = நிணநீர் [அணுக்கள்
லங்ஸ், Lungs = சுவாசயம், நுரையீரல், புப்புசம்
(g)க்ளாட்டிஸ், Glottis = குரல்வளை
லாரிங்க்ஸ், Larynx = குரல்வளைப் பெட்டி
எ(p)பி(g)க்ளாடிஸ், Epiglottis = குரல்வளை மூடி
ஓகல் (c)கார்ட்ஸ், Vocal chords = தொனித்தந்திகள்
(t)ட்ரகியா, Trechea = சுவாசக்குழல் [கிளைகள்
(b)ப்ரான்கியல் டியூப்ஸ், Bronchial tubes = சுவாசக்குழற்
(b)ப்ரான்கியோல்ஸ், Bronchioles = சுவாசஜவ்வுகண் [அரைகள்
(d)டைப்ராம், Diaphragam = ஈரல்தாங்கி, வில்மண்டபம்

எக்ஸ்க்ரீடொரி ஆர்(g)கன்ஸ், Excretory organs = விஸர்
[ஜனக் கருவிகள், கழிவு கால்கள்
(k)கி(d)ட்னீஸ், Kidneys = மூத்ரகோசம், விருக்கம்
ரெட்டர்ஸ், Wreters = மூத்ரக்குழல்கள்
(b)ப்ளா(d)ட்டர், Bladder = மூத்ரப்பை, மூத்ராசயம்
ஸ்கின், Skin = சர்மம், தோல்
எ(p)பி(d)டெர்மிஸ், Epidermis = மேல்தோல்
டெர்மிஸ், Dermis = உள்தோல் [கள்
ஸ்வெட் (g)க்ளாண்ட்ஸ், Sweat glands = சுவேத கோளங்
(t)டச் கார்(p)பஸ்ஸல்ஸ், Touch corpuscles = உணர்ச்சிக்
[கணங்கள்
